JUDE

www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

தினமுரசு வாரமலர்

செப்.19-25,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 327

# புலிகளின் காலக்கெடு

## வீழ்த்தப்படும் இலக்குகள்

## கல்லோயா - உறங்கும் உண்மைகள்



## மறுபடியும் கலைஞர்



## 'அலைபாயுதே மாதவா!'



## நன்றியில்லாத திரையுலகம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நேற்றுக் கூறியதை....

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

'சட்டன'
பத்திரிகை ஆசிரியர்
சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

செய்தி ஊடகவியலாளர்
தினத்துக்கு முதல் நாளன்றுதான்
தீர்த்துக் கட்டப்பட்டார்!

பத்திரிகைச் சுதந்திரத்தை
கேலி செய்யும்
உள் நோக்கமும்
கொலையில் கலந்திருக்கிறது!

ஐ.தே.க. ஆட்சியில்
ரிச்சார்ட் டி சொய்ஸா
படுகொலை செய்யப்பட்டார்!

அதனையிட்டு
பொதுஜன முன்னணியினர்
அன்று பொங்கி நின்றனர்!

'கொலை யுகம் ஒழிக'
என்று குரல் எழுப்பினர்!

இப்போது அதே
பொ.ஐ.மு. ஆட்சியிலும்
பத்திரிகையாளர் ஒருவர்
பலியாகிவிட்டார்!

இதற்கு முன்னர்
பத்திரிகையாளர் சிலர்
அச்சுறுத்தப்பட்டனர்.
தாக்குதலுக்கு உள்ளாகினர்.

எதிர்க்கட்சி ஊர்வலத்தில்
செய்தி சேகரிக்கச் சென்ற
பத்திரிகையாளர்களும்
சிவில் உடையில் வந்தோரால்
தாக்கப்பட்டனர்!

அத் தாக்குதலைக் கண்டித்து
பத்திரிகையாளர்
நடத்திய ஊர்வலமும்
தடுத்துத் தாக்கப்பட்டது!

இவையெல்லாம்,
பொ.ஐ.மு. ஆட்சிக்கு
பெருமை சேர்ப்பனவல்ல!

'தாக்குதல்கள் நடந்திருக்கலாம்;
தவறுகள் நிகழ்ந்திருக்கலாம்;
சென்ற ஆட்சிக்காலம்போல்
பத்திரிகையாளர் எவரும்
கொல்லப்படவில்லை'
என்று கூறப்பட்டது!

அந்தக் கூற்றும்
இப்போது பொய்யாகியது!

"ஐ.தே.கட்சியின்
17 வருட ஆட்சியில்
நடந்தவையெல்லாம்,
பொ.ஐ.மு. ஆட்சியில்
ஐந்து வருடத்துக்குள்
நடந்து முடிந்துவிட்டன!"

இப்படித்தான்
விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

பத்திரிகை ஆசிரியர்
கொலை தொடர்பாக
பொலிசாரும் ஊகங்களைத்
தெரிவிக்க முயல்கிறார்கள்!

இவ்வாறான ஊகங்கள்
மேலும் சந்தேகங்களையும்,
விசாரணைகள் குறித்த
நம்பிக்கையீனங்களையுமே
நிச்சயம் ஏற்படுத்தும்!

கடந்த ஐந்து வருடங்களில்
தாக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்
யார் என்று நோக்கினால்,
அவர்கள் அனைவரும்
பொ.ஐ.மு. ஆட்சியை
விமர்சித்தவர்கள்.

இத் தாக்குதல்கள் தொடர்பாக
எவரும் கைதாகவில்லை!

தற்போது கொல்லப்பட்டுள்ள
'சட்டன' ஆசிரியரும்
தற்போதைய ஆட்சியாளரை
கடுமையாக விமர்சித்தவரே!

இது புலிகள்
விவகாரமல்ல!

புலனாய்வு செய்து
குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது
பொலிசாரால் முடியாத
காரியமுமல்ல!

அரசுக்கு அவப்பெயர்
ஏற்படுத்தும் சதி எனில்,
அதற்குக் காரணமானவர்களை
ஆதாரத்துடன் அம்பலமாக்கும்
அதிகாரமும் அரசிடம் உள்ளது!

எனவே, 'சதி' என்று
வெறுமனே கூறிக்கொண்டிருப்பது
அர்த்தமற்றது!

கொலைகாரர்களை
தப்பவிட்டதாக
சென்ற ஆட்சிமீது
குற்றம் சுமத்தியவர்கள்
இன்றைய ஆட்சியாளர்கள்!

எனவே, தற்போதைய
கொலைகாரர்களை
வலை வீசிப் பிடித்து
சட்டத்தின் கையில் ஒப்படைக்கட்டும்!

அவ்வாறு செய்தால்தான்,
கடந்த காலத்தில்
தாம் கூறியவற்றை
பொ.ஐ.முன்னணியினர்
மறக்கவில்லை என்று நம்பலாம்!

அதுமட்டுமல்ல,
'சட்டன' ஆசிரியர்
கொலை தொடர்பாக
எதிரணி கூறியுள்ள
குற்றச்சாட்டுக்களுக்கு
ஆளும் தரப்பினர்
கூச்சல் போடுவது பதிலாகாது!

உண்மைக் குற்றவாளிகள்
யார் என்று
இனம் காட்டுவதே
சரியான பதிலாகவிருக்கும்!

தமிழ்பேசும் பத்திரிகையாளர்கள்
தொடர்பாக
சிங்களப் பத்திரிகையாளர்கள்
சிரத்தை காட்டுவது அரிது!

எனினும்,
முரசின் வாசக நெஞ்சங்கள்
சார்பாக
'சட்டன' ஆசிரியர்
படுகொலைக்கு,
'முரசு'
தன் வலிய கண்டனத்தை
பதிவு செய்து கொள்கிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்



## ஆன்மீகம்

### பழவினை அறுத்து...



பகவான் சொல்கிறார்: "உன் முன் பிறப்பு உனக்குத் தெரியாது. உனக்கு இப்போது பெயர் இருக்கலாம். இனி வர இருக்கிற பிறவி எது என்று உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். இப்போது இருக்கிற பிறவியில் நீ செய்யும் செயல்களுக்குத் தண்டனை என்ன? வெகுமதி என்ன? என்பது எனக்குத் தெரியும். இவையெல்லாம் நான் உனக்குச் சொல்லவில்லை. ஏன்? அடுத்த பிறவி எப்படி என்று சொல்லிவிட்டால் உன் அமைதி கெடும். எனவே இந்தப் பிறவியை வீணாக்கிவிடாதே!" என்று பகவான் கீதையில் சொல்கிறார். இதைத்தான் மாணிக்கவாசகப் பெருமான் 'பழவினை அறுத்து' என்கிறார்.

"பழவினை சாகும் இந்த நிலையில்கூட பலர் மேலும் ஆயுள் கேட்கிறார்களே! பிறவி கேட்கிறார்களே! முன்பு செய்த பாவமே தீரவில்லையே. இனியும் ஆயுளைக் கேட்கிறார்களே." என்று திருவாசகப் பெருமான் வருந்துகிறார். மறுபடியும் வாழ்வு கேட்காதே என்கிறார். இந்தப் பிரக்ஞை எப்படி ஏற்படும்? மன அமைதி வந்துவிட வேண்டும். மன அமைதி எப்படி வரும்? அமைதிக்கு நான்கு வழிகள் உள்ளன. இருப்பதுபோதாது; இன்னும் அதிகம் வேண்டும் என்று கேட்காதே. இந்த நிலை போதாது. இன்னும் உயர வேண்டும். உச்ச நிலைக்குப் போகவேண்டும் என்று கேட்காதே!

மற்றவர்களுடைய நலன் விரும்பும் எதுவோ அதன்படி நடந்துகொள். நீ செய்கிற எல்லாச் செயல்களையும் இறைவனுடைய விருப்பம் என்று கருதி அவனிடம் ஒப்படைத்துவிடு. இந்த நான்கு வழிகளைக் கையாண்டால் அமைதி வரும். இன்பம் வரும். இருள் அகலும். இதைத்தான் மாணிக்கவாசகப் பெருமான் சூட்சமமாக "பழவினை அற்றுப்போக" என்கிறார்.

தொகுப்பு: கொஸ்லந்தை- எஸ்.என்.ராஜரட்ணம்.

### இறைவனை உணர்ந்த நஃப்சு

படைப்பினங்களைப் படைப்பதற்கு முன் ஆலமே மிதால் என்ற உலகில் மனித அமைப்பின் முதலாவதாக அறிவைப் படைத்த இறைவன், அதனை நோக்கி,

'அறிவே நான் யார்?' என்ற கேள்வியை தொடுத்தான். 'என்னைப் படைத்துப் பாதுகாக்கும் எனது ஏக வல்லவன் நீ. உன்னால் படைக்கப்பட்ட பலவீனமான உன் 'அடிமை நான்.' என அறிவு மொழியவே, இறைவன்,

"அறிவே! உன்னை விடச் சிறந்ததாக நான் வேறு எதையும் படைக்கவில்லை." எனக் கூறிவிட்டு மனிதனின் நஃப்சு எனும் மனதைப் படைத்து "நஃப்சே நீ யார்?" எனக் கேட்டான்.

"நான் நான்தான். நீ நீதான்" என அடக்கமின்றி பதில் சொல்ல, உடனே நரகத்தில் தூக்கி எறிந்து நூறு ஆண்டுகள் வரை நஃப்சை வாட்டி வதைத்ததுடன் பட்டினிக் குண்டத்திலும் தூக்கி எறிந்து பசியாலே வாட்டி வதைத்தான். அப்போது அதன் பிடிவாதமும் அடக்கமில்லாத் தன்மையும் குறைந்தது.

"இறைவா! நீ எனக்கு எஜமான். நான் உனது அடிமை" என்றது.
ஆதார நூல் (மஷ்குபியத்துஸ் ஸஹ்மி).

பசியோடு இருக்காத எவருடைய ஆத்மாவையும் அல்லாஹ் பரிசுத்தப் படுத்துவதில்லை. நூல் (எஹ்யா)

தொகுப்பு: வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.324



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

#### ச(தி)ட்டம்

ஒரு நிரபராதி கூட
தண்டிக்கப்படக் கூடாது
இது சட்டம்!
ஓராயிரம் அப்பாவிகள்
தண்டிக்கப்படுகிறார்கள்
இது திட்டம்!

ரவீந்திரநாத் அரவிந்தன்-
அக்கரைப்பற்று-08.

#### நல்ல முடிவில்லை!

ஆளுங்கட்சிக்கு அரியாசனம்
எதிர்க்கட்சிக்கு கரியாசனம்
தமிழ்க்கட்சிக்கு நரியாசனம்
மெக்கில்லை விமோசனம்...!

செ. ஞானராசா-மடு.

#### அ(இ)ன்றும்

இயேசுவுக்குச்
சிலுவை!
இவர்களுக்குக்
கதிரையா?

முல்லை கௌா.

#### குற்றங்கள்

வாழும் உரிமை கேட்பது குற்றம்.
வாழும் பூமியில் வாழ்வது குற்றம்.
உண்ண உணவு கேட்பது குற்றம்.
உலக சுதந்திரம் கேட்பது குற்றம்!

பி. சண்முகநாதன்-கந்தப்பளை.

#### பரிசு

நன்மை செய்த
நமக்கு நம்மரசு
தந்த பரிசு!

சதாசிவம் தினேஷ்-
மட்டக்களப்பு.

#### ஒரே கோரிக்கை

கையைக் கட்டினும்
காலைக் கட்டினும்
வாயைக் கட்டினும்-
கவலையே இல்லை!
கதிரையிலிருந்து எம்மைக்
கவிழ்த்திடாதீர்!

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
வவுனியா.

#### கு(சு)ற்றவாளிகள்

இனத்தைக் காப்பதும்
பிரிப்பைத் தடுப்பதும்
பொ்நியை மறுப்பதும்
குற்றம் என்றால்,
இனத்தை அழித்து
நிலத்தைப் பிடித்து
நிம்மதியைக் கெடுப்பது
குற்றம் இல்லையோ?

எஸ். விவேகானந்தன்-
மட்டக்களப்பு.

#### கட்டப்பட்டும், கட்டுப்பட்டும்

கதிரைகளுடன்
கட்டப்பட்டிருக்கின்றனர்
மக்கள்,
கதிரைகளுக்குக்
கட்டுப்பட்டிருக்கின்றனர்
அரசியல்வாதிகள்!

என். தனுசுஜன்-யாழ்,
சண்டிலிப்பாய்.

#### வெள்ளை வேன்

துரத்திப் பிடித்தாச்சு!
இனி...
கழுத்தறுக்க
வேண்டியதுதான் பாக்கி!

த. நகுலேஸ்வரன்- மட்டக்களப்பு.

#### வெறும் பிரதி(நிதி)கள்...

ஆசனத்துக்கும் போசனத்துக்கும்
ஆசைப்பட்டு அடிமைச் சாசனத்தை-ஆதரிக்கும்
அறிவு ஜீவிகளுக்கின்று-கிடைத்திருப்பது
கைக்கட்டும் வாய்ப்பூட்டுமே!

ஆர். பகீரதன்-கொழும்பு-13.

#### உண்டா?

காணாமல் போனோர்
பட்டியலில்
உங்கள்
பெயருமுண்டா?

கு. நட்சாமினி-சிலாபம்.

#### சித்திரவதை

இது
செம்மணிக்கு
முதல் அத்தியாயம்!

சுஜோ-மல்லாவி.

## கவிதைப் போட்டி இல.327



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 25.09.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.327
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை



அன்பின் முரசிற்கு,

அம்பாறை குடி ஏற்றத்தின் 50 ஆண்டு நிறைவுவிழாவிலே ரணிலும், ரத்வத்தையும் அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழரின் பூர்வீக நிலத்தில் தந்திரமாக மேற்கொள்ளப்பட்டதே அம்பாறைக் குடியேற்றம்.

ஆட்சிப் போட்டிக்கென தமக்குள் முரண்படும் பேரினவாத முதலாளித்துவ தலைமைகளின் அடிப்படை நோக்கம்- இலங்கையைப் பூரண சிங்கள பௌத்த நாடாக்குவதாகும்.

இக்கொள்கையை தாமே சிறப்பாக செய்திடுவோம் என சிங்கள மக்களிடம் கூறி இவர்கள் வாக்குக் கேட்கின்றனர்.

தற்போது தமிழர்கள் பலத்துடன் இருப்பதால் இனிப்பான வார்த்தைகளுடன் தமது காரியத்தைச் செய்கின்றனர்.

தமிழர் பலம் அழிந்திருந்தால் தமிழினத்தை யார் முதலில் அழிப்பது என்ற கோஷத்துடனேயே வாக்குக் கேட்பார்கள்!

கவிமுகன்.

---

அன்பு முரசுக்கு,

இதயத்தைத் திருடிய இளவரசி (டயானா)யின் அட்டகாசமான படத்தை முன் அட்டையில் தந்து (324) எங்களைப் பிரமிக்கவைத்தாய். 'சிந்தியா பதில்கள்', 'இலக்கிய நயம்', 'இடி அமீன்', 'சினி விசிட்', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' தூள் அன்பே தூள். என் அன்பு முரசே என்றும் நான் உன்னுடன்.

க. காசன்,
நொச்சிமுனை.

---

'வீரன் தான் பிரீன்' முதல் அத்தியாயமே அசத்தல்தான். அடுத்த வாரத்தின் எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்துவிட்டான். 'தாய்' தொடரைப் போல் இதுவும் அனைவர் மனதிலும் இடம்பிடிக்கும் என்பதை முதல் அத்தியாயமே உணர்த்திற்று. இதை பிரசுரிக்கும் முரசுக்கும், தமிழில் தரும் பராமஸ்வாமி அவர்களுக்கும் உளப்பூர்வமான நன்றிகள்.

மர்லியா முஹாஜிரீன், மீவலதெனிய.

---

டயானா பற்றிய தொடர் கட்டுரை முடிந்துவிட்டதே என்று கவலைப்பட்ட, என் போன்ற வாசகர்களின் உள்ளங்களை, முரசில் இடம் பெற்ற டயானாவின் படங்களும் செய்திகளும் குளிர்வடைய வைத்துவிட்டன.

மு.இ. ஜீனத்பானு,
கிண்ணியா.

---

தேன் சொட்டும் எமது பொன் முரசே!

புவனா தரும் புதுமைத் தொடரான 'மோனிக்கா என் மோனிக்கா' அபாரம்! சிந்தனைகளைத் தெளிவு பெற வைக்கும் சிந்தியாவின் சுவையான சுவாரஸ்யமான, கருத்தாழமிக்க பதில்கள் பிரமிக்கவைக்கிறது. அடேங்கப்பா.. என்னமாய் பதில் சொல்கிறார்?! மற்றும் உன்னில் வரும் உணர்வுபூர்வமான, உயிரோட்டமான சிறுகதைகள் கூட பிரமாதம்! 'கையில் சிக்கிய மின்னல்' தொடர் முதல் 'இலக்கிய நயம்', 'தேன் கிண்ணம்', 'நில்-கவனி-முன்னேறு' என்று உன்னில் வரும் எல்லா அம்சங்களுமே மனதைத் தொட்டவைதான்! பாராட்டுக்கள்!!

செல்வி எம். ஆர். பாத்திமா ரிஸானா, வத்தேகெதர.

### ஏன் மௌனம்?

'முரசு' சொல்லும் முன்னே, அது நடக்கும் பின்னே! பலாலி காணிப்பறிப்பு கைவிடப்பட்டதாக ஆரவாரமாக செய்திகள் வந்தன. கைவிடப்படவில்லை தொடரும் என்று ஆராய்ந்து கூறினார் ராஜதந்திரி. அது உண்மையாகிவிட்டது. தாம் வலியுறுத்தியதால் பறிப்பு கைவிடப்பட்டதாகக் கூறிய தமிழ்க் கட்சிகள் மௌனம் அனுஷ்டிக்கின்றன. இவர்களின் நோக்கம்தான் என்ன?

சி. கணேசமூர்த்தி, யாழ்ப்பாணம்.

### தேர்தல் வாக்குறுதிகள்

அன்பு முரசே!

பார்த்தீர்களா இன்றைய ஆட்சியின் தூய்மையை?! மாகாணசபைத் தேர்தலில் தமிழ் வாக்குகளைக் கவர காணி அபகரிப்பு திட்டத்தைக் கைவிட்டதாகக் கூறினார்கள். அதற்கு சில தமிழ்க் கட்சிகளும் துணை போனார்கள். இப்போது என்ன நடந்துள்ளது? இதுதான் உண்மை நிலை. இதையெல்லாம் கண்டும் காணாததுபோல இருக்கும் கட்சிகளை தமிழ்க் கட்சிகள் என்று கூறுவது தமிழ் மக்களுக்கே தலைகுனிவு.

பி. ரங்கநாதன், மன்னார்.

---

முரசே!

உனது எல்லா பக்கங்களும் தித்திக்கும் தேன்சுவை ஊட்டுகின்றன. அதிலும் ராஜேஸ்குமாரின் 'கையில் சிக்கிய மின்னல்' வரும் பக்கம் தித்திப்போடு திகைப்பை ஊட்டுகின்றது.

சி. பிறேம்தாஸ், முனைக்காடு.

### தடுக்கவில்லை

முரசே! வலிகாமத்தில் தமிழர் நிலங்கள் பறிப்பு தொடர்கிறது. உனது கணிப்பும், கருத்தும் சரியானவைதான். அனாமதேயச் செய்தியாக வெளியாகும் தகவல்களை நம்பவேண்டாம். ஜனாதிபதி நேரடியாகத் தடுக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். உண்மையாகிவிட்டது. இனியும் நம்பி ஏமாறக்கூடாது.

கே. தங்கராசா, திருமலை.

### ஆதாரமற்ற செய்திகள்

அன்பு முரசுக்கு,

வலிகாமம் காணிச்சுவீகரிப்பை ஜனாதிபதி நிறுத்தியதாக பல பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. செய்தியாக மட்டுமன்றி மக்கள் நம்பக்கூடிய விதமாகவும் ஒரு முன்னணிப் பத்திரிகை தகவல்களை வெளியிட்டது. ஒருவேளை அப்போது நடந்த தேர்தலில் அரசாங்கக் கட்சிக்கு மறைமுக ஆதரவு கொடுக்கும் முயற்சியாக இருக்கலாம். வர்த்தமானி அறிவித்தலும் இரத்தாகும் என்று அப்பத்திரிகை செய்தி போட்டிருந்தது. யாரும் அவ்வாறு கூறியதாகத் தெரியவில்லை. பின்னர் எப்படிச் செய்தி போட்டனர். 'முரசு' மட்டுமே 'அது தேர்தல் நேர சமாளிப்பு என்றும், திட்டம் கைவிடப்படவில்லை' என்றும் உறுதியாக மறுபடி மறுபடி வலியுறுத்தி வந்ததை நாம் மறக்கவில்லை. தமிழ்க் கட்சிகள் மட்டுமல்ல, சில தமிழ்ப் பத்திரிகைகளும் ஏமாந்து போகலாமா? அல்லது ஏமாற்ற உதவலாமா? இப்போது மறுபடி விழுந்து விழுந்து கண்டிக்கிறார்கள்.

எம். துஷ்யந்தன், யாழ்ப்பாணம்.

---

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


படிப்பகம்

www.padippakam.com

# இடம் பெயர் சேவை படுதோல்வி!

## தமிழ் பேசும் அதிகாரிகளுக்கு அவமரியாதை!

### பாதுகாப்புப் பிரச்சனை! ஆளுநர் கைவிரிப்பு

**வ**டக்கு கிழக்கு மாகாண ஆளுநர் இடம் பெயர் சேவை செப்டெம்பர் 10ஆம் 11ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் இடம் பெற்றது.

முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநர் ஜெனரல் அசோகா ஜெயவர்தனா பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைப் படி அழைத்துவரப்பட்டார். வந்த அதே வேகத்தில் மட்டக்களப்பு இராணுவத் தலைமையகத்திற்குச் சென்று விட்டார்.

ஆளுநர் இடம் பெயர் சேவையில் ஆளு நரை நேரடியாகச் சந்தித்து தீர்க்கப்படா திருக்கும் தமது பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு ஏற்படும் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

**ஆராயவில்லை**

ஆளுநர் இடம் பெயர் சேவை நடை பெறுவதற்கு முன்னோடியாக இரண்டு மாதங்களுக்கு முன்னரே மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க அலுவலகங்களும் பொது மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றில் முக்கியமானவற்றை ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்காகத் தெரிவு செய்திருந்தன.

இதனைத்தான் எண்ணாயிரம் பிரச் சனைகள் ஆராயப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் இடம்பெயர் சேவையில் அவை ஆராயப்படவில்லை.

இடம் பெயர் சேவையில் தமது பிரச் சனைகள் தீர்க்கப்பட்டுவிடும் என நீண்டநாள் எதிர்பார்த்திருந்து பிரச்சினைகளை முட்டை கட்டிக் கொண்டு வந்த பொதுமக்கள் பாது காப்புக் கெடுபிடிகளால் நகரத்திற்குள் நுழை யாது திரும்பிவிட்டார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டதாக வெளியான செய்திகளும் தவறானவையே.

ஆளுநரைச் சந்திப்பதற்காக முன்கூட் டியே அனுமதி பெற்றுக் கொண்டு இடம் பெயர் சேவைக்குக் கடமையாற்றச் சென்றவர் களும் தட்டித் தடவிப் பார்க்கப்பட்டு கேள்வி களால் துளைத்தெடுக்கப்பட்டார்கள்.

பிரதேச செயலாளர்கள் கூடத் தடுத்து வைக்கப்பட்டார்கள். மூன்று இடங்களில் அவர்களும் கடுமையான சோதனைக்குட் படுத்தப்பட்டார்கள். ஆளுநரைச் சந்திப்ப தற்கு பிரதேச செயலாளர்கள் ஆர்வமுடன் இருந்த போதிலும் சந்தர்ப்பம் வழங்கப்பட வில்லை. கைகளை தலைக்கு மேல் உயர்த்து மாறு கூறியே பிரதேச செயலாளர்களும் சோதனையிடப்பட்டனர்.

**கைகளை உயர்த்துக**

இரண்டாம் நாள் இடம் பெயர் சேவை யின் போது வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி மண்டபத் திற்கு வந்தார். எனினும் அவரது மோட்டார் வாகன இலக்கம் தமக்கு அறிவிக்கப்பட வில்லை எனக்கூறி காவலில் நின்ற பொலிஸா ரும், இராணுவத்தினரும் அவரை உள்ளே அனுமதிக்கவில்லை.

தன்னை இன்னாரென அவர் அறிமுகம் செய்த போதிலும், உள்ளே செல்ல முடியாது எனப் பாதுகாப்புத் தரப்பினர் கண்டிப்பாக மறுத்துவிட்டனர்.

ஏமாற்றத்துடன் அவர் திரும்பிச்சென்று வாகனத்தை வேறோர் ஒதுக்குப் புறத்தில் நிறுத்திவிட்டு மண்டபத்திற்கு கால் நடையாக வந்தார். அவரும் கைகள் உயர்த்தி நிற்குமாறு கூறி சோதனையிடப்பட்டார்.

களுத்துறை, வெலிக்கடை சிறைச்சா லைக் கைதிகளைப் பார்வையிடச் செல்லும் உறவினர்களைச் சோதனையிடுவது போல் ஆங்காங்கே கடுமையாகச் சோதனையிடப் பட்டபின் ஆளுநர் சேவை நடைபெறுவதாகக் கூறப்பட்ட மண்டபத்திற்கு இராணுவ வாக னங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர். சிறைக் கைதிகளைப் போன்றே பொதுமக்களும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

**யாருமில்லை**

இவை எல்லாவற்றையும்விட பொது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதா? ஆளுநரை சந்தித்தனரா என்றால் அதுதான் இல்லை. ஆளுநரும் அங்கிருக்கவில்லை, அதிகாரிகளும் இருக்கவில்லை.

அரை மணித்தியாலயத்திற்குச் சற்றுக் கூடுதலான நேரமே ஆளுநர் இடம்பெயர் சேவைக்காக ஆயத்தம் செய்யப்பட்ட இடத்தில் ஆளுநர் இருந்தார். பின்னர் பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனையைப் பெற்று உடனேயே இராணுவத் தலைமை யகம் அமைந்துள்ள கச்சேரிக்குச் சென்று விட்டார்.

இடம் பெயர் சேவையின்போது பல முக்கிய திணைக்களங்களைச் சேர்ந்த அதி காரிகள் வருகைதரவில்லை. முதலாம் நாள் வருகை தந்திருந்த ஒரு சில முக்கியத்துவ மற்ற இலாகாக்களின் அதிகாரிகள் கூட இரண்டாம் நாள் மண்டபத்தில் சமூகமளித் திருக்கவில்லை.

**பெரும் செலவு**

பிரச்சனை தீர்க்கப்படாமல் போன துடன் "இடம் பெயர் சேவைக்காகச் செலவிட்ட 50 இலட்சம் ரூபாய்களுக்கு மேற்பட்ட நிதியை பிரதேச செயலகங்களுக்கு வழங்கியிருந்தால், உறவினர்களை இழந்து இழப்பீட்டுக்காக கடந்த 10 வருடங்களுக்கு மேலாகக் காத் திருக்கும் உறவினர்களுக்கு வழங்கியிருக்க லாம்!" என்று ஓர் அதிகாரி கவலை தெரிவித் தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் இப்பிரதேசத்தில் பொது மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகள் அடங்கிய மகஜரொன்றை ஆளுநர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா விடம் கையளித்து அவற்றுக்குத் தீர்வு காணு மாறு கேட்டுக் கொண்டது.

**தலையிடேன்**

சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் உட்பட சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சனைகளில் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சனை யிலும் தான் தலையிட முடியாதென்பதை ஆளுநர் நேரடியாகத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் பெரும்பாலான பிரச்சினைகள் பாதுகாப்பு சம்பந்தப்பட்டவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

போலியோ சொட்டு மருந்து வழங்கு வதை முன்னிட்டு புலிகள் யுத்த நிறுத்தம் செய்த தினத்திலேயே இடம்பெயர் சேவை நடத்தப்பட்டது. அவ்வாறிருந்தும் பாதுகாப் புக் கெடுபிடிகள் மக்களை வாட்டிவிட்டன.

# மறுபடியும் கருணாநிதி ஆதரவு

## ஏற்ற தீர்வுதான் முக்கியம்

**த**மிழகத் தேர்தலில் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞர் கருணாநிதி தமிழீழக் கோரிக்கையை ஆதரித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

"தமிழீழம் அமையுமானால் நான் மகிழ்ச்சி கொள்வேன். தமக்கு எத்தகைய தீர்வு வேண்டும் என்று ஈழத் தமிழர்கள் நினைக்கிறார்களோ, அத் தீர்வுக்குத்தான் எனது ஆதரவும் இருக்கும்" என்று கலைஞர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

பத்து வருடங்களுக்கு முன்பாக தான் கூறிய நிலைப்பாட்டை மறுபடியும் கலைஞர் கருணாநிதி தற்போது கூறியிருக்கிறார்.

தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருக்கும் ம.தி.மு., பா.ம.க. ஆகிய கட்சிகள் தமிழீழத்தை ஆதரித்து தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டது தெரிந்ததே. அதன்பின்னர் தி.மு.க. தலைவரும் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். இலங்கையில் தமிழீழம் பெறுவதற்காக தமிழ்நாட்டில் வன் முறைகள் கூடாது என்றும் கூறியிருக்கிறார்.

ராஜீவ் கொலைக்குப் பின்னர் தமிழீழக் கோரிக்கை குறித்து கருத்து எதனையும் வெளியிடாது இருந்த கலைஞர் இத் தேர்தலில்தான் தமிழீழக் கோரிக்கையை ஆதரித்துக் கருத்துக் கூறியுள்ளார்.

# இந்தியாவில் இலங்கைப் பிரச்சனையின் எதிரொலி

## விபரங்கள் திரட்ட பெருநிதி ஒதுக்கீடு!

(நமது நிருபர்)

இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர் பாக இந்தியாவில் ஏற்படும் தாக்கங்களை பற்றி ஆராய ஒரு குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

இக் குழுவில் இந்தியாவின் பிரபல சஞ் சிகை ஒன்றின் ஆசிரியர் உட்பட முக்கியமான சிலரும் இருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கை வெளிநாட்டமைச்சே இதற் கான நிதி உதவியை செய்து வருவதாகவும், முதற்கட்டமாக நாற்பது இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும் தமிழகப் பத்திரிகை யாளர் ஒருவர் கூறியுள்ளார்.

மறைந்த நீலன் திருச்செல்வமே இதற் கான திட்டத்தை வகுத்திருந்தாராம். இந்தியப் பத்திரிகையாளர்கள் சிலரோடு நீலன் நெருக்க மான தொடர்புகளை வைத்திருந்தார்.

அவர்கள் கொழும்பு வரும்போது தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வ தோடு, கருத்தரங்குகளுக்கு தனது நிறுவனத் தின் சார்பாக அழைத்து கணிசமான பண மும் கொடுப்பாராம்.

இவ்வாறு கொடுக்கப்படும் பணம் அவ ரது நிறுவனத்துக்கு உதவும் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து மறுபடி அவருக்கு கிடைத்துவிடும்.

**மாற்று ஏற்பாடு**

நீலன் திருச்செல்வம் மூலமாக இந்திய செய்தி ஊடகவியலாளருடன் ஏற்பட்ட தொடர்பை வைத்து குறிப்பிட்ட ஆய்வுக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக இந்தியாவில் ஏற்படும் தாக்கங்களை அவ் வப்போது ஆராய்ந்து, அதற்கேற்ற மாற்று பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்வதும் இக் குழுவினரின் பணிகளில் ஒன்றாக இருக்கு மாம்.

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் முன்னர் இருந்ததுபோன்று அனுதாப அலை மீண்டும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் இலங்கை வெளிவிவகார அமைச்சு அக்கறை காட்டி வருகிறது.

இதன் காரணமாகவே பெரும்நிதியைச் செலவிட்டு மேற்படி குழுவினரை வைத்து விபரங்கள், தரவுகள் போன்றன திரட்டப் பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான செய்தி கள், கட்டுரைகள் என்பவற்றை அவ்வப் போது மேற்படி செய்தி ஊடகவியலாளர்கள் மூலமாக இந்தியப் பத்திரிகைகளில் இடம் பெறச் செய்யும் ஏற்பாடுகளும் நடந் துள்ளன.

# பொலிஸ் நிலைமீது தாக்குதல்

## ஆயுதங்கள் கைப்பற்றியதாக தெரிவிப்பு

**தி**ருமலை மாவட்டத்தில் புதிதாக நிய மிக்கப்பட்ட புலிகளது தளபதியின்கீழ் பரவ லான தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

13.09.99 அன்று அதிகாலை மூதூரில் பொலிஸ் நிலை ஒன்று புலிகளின் திடீர் தாக்குதலுக்கு இலக்கானது.

மூதூரில் இருக்கிறது ஷாபி நகர். இதற்கு முன்னைய பெயர் கைவளைச் சேனை. இங்கு பொலிஸ் நிலை ஒன்று உள்ளது. 20 பொலிசார்வரை இங்கு பணியில் உள்ளனர்.

திங்கட்கிழமை அதிகாலை புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள். பொலி சாரும் திருப்பித் தாக்கினார்கள். சண்டையின் முடிவில் பொலிஸ் நிலை புலிகளிடம் வீழ்ந் தது. அங்கிருந்த ஆயுதங்களையும், ரி.வி. ரேடியோ மற்றும் உபகரணங்களையும் புலி கள் கைப்பற்றினார்கள். ஜெனரேட்டரையும் கொண்டு செல்ல முயன்றனர். அதனை கழற்றி எடுக்க முடியாததால் தகர்த்துவிட்டுப் போயுள்ளனர்.

இங்கு ஆர்.பி.ஜி.01, அதற்கான எறிகணை கள் 05, அதற்கான தொலைநோக்கி 01, ஏ.கே.எல்.எம்.ஜி.02, ரி.56துப்பாக்கிகள்03, 60 எம்.எம். மோட்டார் 01, மழைக்கோட் 06, மோட்டார் சைக்கிள் 01, தொலைத் தொடர்பு சாதனம் ஆகியன தம்மால் கைப்பற்றப்பட்ட தாக புலிகள் கூறியுள்ளனர்.

இத் தாக்குதலில் தமது தரப்பில் ஒருவர் பலியானதாகவும் புலிகள் கூறியுள்ளனர். இளங்கதிர் என்றழைக்கப்படும் திருமலை யைச் சேர்ந்த முத்துலிங்கம் முகுந்தன் என்பவரே பலியானவர்.

தமது தரப்பில் நான்குபேர் பலியான தாகவும் 15 பேர் காயமடைந்ததாகவும் படைத்தரப்பு கூறியுள்ளது.

# புனரமைப்பு அலுவலகத்தில் போர்ப் பயிற்சி?

## ஐ.நா.பிரதிநிதிக்கு குமார் கடிதம்

**வ**டபகுதிக்கான புனர்வாழ்வு, புனர்நிர் மாண அதிகார சபையின் கொழும்பு அலு வலகத்தில் இலங்கை இராணுவத்தினருக் கான பயிற்சிகள் சில ஆரம்பமாகியுள்ளன. இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செய லாளரான குமார் பொன்னம்பலம் தகவல் வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவசரக் கடிதம் ஒன்றை கொழும்பில் உள்ள ஐ.நா. அபிவிருத்தித்திட்ட (யூ.என்.டி.பி) வதிவிடப் பிரதிநிதிக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக குமார் பொன்னம் பலம் தெரிவிக்கையில், "வடபிராந்திய புனர் வாழ்வு, புனர்நிர்மாண அதிகாரசபையின் கொழும்பு அலுவலகத்தில் புவியியல் தகவல் ஒழுங்கமைப்புத்துறை நிபுணர் ஒருவர் பணியாற்றுகிறார்.

இந்த நிபுணருக்குரிய மாதாந்த ஊதியம் ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தாலேயே வழங் கப்பட்டு வருகிறது. இவருக்கான கம்பியூட்ட ரும் பொதுமக்களுக்கான சேவைக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி நிபுணரிடம் இலங்கை அரசின் படை அதிகாரிகள் புவியியல் துறை சம்பந்தமாகவும், புவியியல் தகவல்கள் சம்பந்தமாகவும் பயிற்சி பெற்று வருகின்றனர். போருடன் தொடர்புடையதாகவே இப்பயிற்சி கள் வழங்கப்பட்டு வருகின்றன.

புவியியல் தகவல்களைத் திரட்டுவது எப்படி, வடக்கு-கிழக்கு புவியியல் சூழல்கள் எத்தகையன போன்ற பயிற்சிகளையும், விளக் கங்களையும் படை அதிகாரிகள் மேற்படி நிபுணரிடம் பெற்று வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கான புனர்நிர்மாணப் பணியை நடாத்துவதாகக் கூறிக்கொண்டு செயற்படும் அமைப்பின் அலுவலகத்தில் இவ்வாறு போருக்கான பயிற்சிகள் இராணு வத்தினருக்கு வழங்கப்படுவது ஏன்? இதுபற்றி ஐ.நா.அபிவிருத்தித்திட்ட வதிவிடப் பிரதிநிதி அறிவாரா? என்று அறிய விரும்புகிறேன்.

ஐ.நா.அபிவிருத்தித்திட்டத்தினரும் சம்பந் தப்பட்டுள்ள ஒரு அலுவலகத்தில் இவ்வாறு போருக்கான புவியியல் சம்பந்தமான பயிற்சி கள் நடப்பதை ஐ.நா.சபை அனுமதித்துள் ளதா? என்றும் வதிவிடப் பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளேன்" என்று குமார் தெரிவித்துள்ளார்.

# பாலத்தின் கீழிருந்து படையினர் மீது தாக்குதல்!

## 4 படையினர்–14 பொதுமக்கள்–ஒரு புலி காயம்!

**ம**ட்டக்களப்பு-வாழைச்சேனை காவத்தை முனையில் 13.09.99 அன்று காலை நேர வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இரா ணுவத்தினர் மீது புலிகள் மறைந்திருந்து திடீர்த் தாக்குதலைத் தொடுத்தனர்.

சம்பவத்தின்போது புலிகளின் மோட் டார் குண்டு ஒன்று காவத்தமுனை கிராமத் திற்குள் வீழ்ந்து வெடித்ததில் 14 முஸ்லிம் பொதுமக்கள் காயமடைந்தார்கள். அதில் ஒரு பெண்ணும் ஒரு சிறுவனும் பாரதூர மான காயங்களுக்குள்ளாகி மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள் ளார்கள்.

4 படையினர் காயமடைந்தனர். ஒரு வரின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தது. பொலன்னறுவை வைத்தியசாலைக்குப் படை யினர் கொண்டு செல்லப்பட்டார்கள்.

காயமடைந்த தமது உறுப்பினர் ஒரு வரைப் புலிகள் சுமந்து சென்றார்கள்.

படையினர் காலை நேர வீதிப் பாது காப்பை உறுதி செய்துவிட்டுத் திரும்புகையில் பழைய பாலத்தின் கீழே மறைந்திருந்த புலி கள் படையினர் எதிர்பாராத வகையில் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

# சமாதான நகர் பிரகடனம்

## உள்நோக்கம் உண்டு என அதிருப்தி

இலங்கையில் சமாதான நகராக திரு மலையை பிரகடனம் செய்யப்படுவது, திரு மலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங் களை நியாயப்படுத்தும் முயற்சி என்று பரவலான கண்டனங்கள் எழுந்துள்ளன.

தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிர தேசமான திருமலை மண் சிங்களக் குடியேற் றங்களால் பறிபோயுள்ளது.தற்போதும் அத்து மீறிய குடியேற்றங்கள் நடந்துவருகின்றன. அதற்கான முயற்சிகளும் தொடர்கின்றன.

இவ்வாறான நிலையில் திருமலையை சமாதான நகராக பிரகடனம் செய்வது, அங்கு மூவின மக்களும் சமமான உரிமை களுடன் சமாதானமாக வாழ்கிறார்கள் என்று காண்பிக்கும் முயற்சியே.

திருமலை நகரில் சந்தை திறப்பதற்குக் கூட படையினர் அனுமதிக்க மறுத்தனர். சிங்கள மக்களது நலன் கருதியே தமிழ் வியாபாரிகளுக்கு பலன் தரத்தக்க இந்த சந்தைத் திறப்பு தடுக்கப்பட்டது.

இவ்வாறான சூழலில் திருமலையை சமாதான நகர் என்று கூறுவது பொருத்த மாக இல்லை என்று திருமலைவாசிகள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து திருமலை மாவட்ட தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் சாதிப்பது குறிப்பிடத்தக்கது.

யுனெஸ்கோ நிறுவனமே இப்பிரகட னத்தை செய்துள்ளபோதும், இதன் பின்னணி யில் பேரினவாத சக்திகளே நின்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

# சிறைக்கு வெளியேயும் இம்சை

**க**ளுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டி ருக்கும் தமிழ் பேசும் கைதிகளைப் பார்வை யிடச் செல்லும் உறவினர்களுக்கு சிறைப் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் பலவித கெடுபிடிகளையும் இம்சைகளையும் ஏற்படுத் துவதாகக் கூறப்படுகிறது.

கைதிகளைப் பார்வையிடச் செல்லும் உற வினர்கள் உணவுப் பொருட்களையும் வேறு அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் சென்றால் "இதையெல்லாம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொடுத்து நல்ல சாப்பாடும், சலுகைகளையும் பெற்றுக் கொடுக்கவா போகின் றீர்கள்? அதனால் இவற்றைக் கொண்டு உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது. இங்கே தந்து விட்டுப் போங்கள்." என்று திருப்பி விடுகின்றன ராம் அங்குள்ள காவலாளிகள்.

அத்துடன் தாங்கள் வைத்திருக்கும் 100/- ரூபா கொண்ட அதிஷ்டலாபச் சீட்டுக்களை கட்டாயப்படுத்தி வாங்குமாறும் அவ்வாறு வாங் கிக்கொண்டால் விரைவாக உள்ளே சென்று சிறைக்கைதிகளைப் பார்வையிட அனுமதிப்ப தாகவும் கூறுகின்றனராம். இதனையும்விட மோச மானமுறையில் உறவினர்களைத் திட்டித் தீர்ப் பதிலும் அவர்கள் தீவிரம் காட்டுவதாகப் பார்வை யிடச் சென்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

# தமிழ், முஸ்லிம் மக்கள் கைது

## திட்டமிட்ட சதி என்று அச்சம்

**பொ**லன்னறுவை மாவட்டத்திலுள்ள குடாப்பொக்குன கிராமத்தில் மூவின மக்க ளும் சுமுகமாக வாழ்ந்து வருகிறார்கள். சுமார் 350 தமிழ்-முஸ்லிம் குடும்பங்கள் உள்ளன.

எல்லைப் புறத்தில் இக்கிராமம் அமைந் துள்ளதால் வேறு காரணங்களைச் சம்பந் தப்படுத்தி அங்கே கெடுபிடிகளுக்குரிய நடவடிக்கைகள் சீருடையினரால் திட்டமிடப் படுகின்றன.

பெரும்பான்மை இன சக்திகள் சில இதன் பின்னணியில் இருப்பதாக அப்பகுதி யில் நாளும் பொழுதும் பதற்றத்துடன் காலம் கழிக்கும் தமிழ்-முஸ்லிம் பொது மக்கள் தெரிவிக்கிறார்கள்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் அப் பகுதியில் இருந்த பொலிஸ் நிலையம் கல் கந்தைக்கு மாற்றப்பட்டது. பொலிஸார் வில கியதும் பொலிஸ் நிலையம் இருந்த இடத்தில் அன்றிரவே புலிகள் வந்து தங்கி விருந்துண்டு சென்றனர்.

இதன் பின்னர் வெலிக்கந்தையில் இருந்து குடாப் பொக்குன கிராமத்திற்கு வரும் பொலி ஸார் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தி தமிழ்-முஸ்லிம் மக்களைக் கைது செய்து காரணமின்றித் தடுத்து வைப்பதும் அதிகரித் துள்ளது.

நெல் அறுவடைக் கூலி வேலைக்காக மட்டக்களப்பு-சித்தாண்டியில் இருந்து இக் கிராமத்திற்கு வந்திருந்த தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். முஸ்லிம் இளைஞர்களும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டபின் விடுதலை செய்யப் பட்டார்கள்.

இது நன்கு திட்டமிடப்பட்ட சதி என்று அப்பகுதி முஸ்லிம் அனுதாபியொரு வர் தெரிவித்தார்.

# பௌத்த மதத்தைப் பரப்புவதின் அவசியம்

## ஜனாதிபதி கொழும்பில் வேண்டுகோள்!

இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு முக்கியமான பிரிவேனாக்களை அபிவிருத்தி செய்வதன் அவசியம் பற்றி ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க விளக்கிக் கூறினார்.

ஆரம்ப போதனைகளை வழங்கி பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு ஏதுவாக பிக்குகளுக்கு அனைத்து மொழிகளிலும் பயிற்சி அளிக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கொழும்பு மாளிகாகந்தையில் இடம் பெற்ற பௌத்த மத நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.


படிப்பகம்

www.padippakam.com

# மட்டக்களப்பில் போலி வைத்தியர்கள்
## நோயாளர்கள் ஜாக்கிரதை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிப் படையாகவே இயங்கும் போலி வைத்தி யர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பின்தங்கிய வறிய கிராமப்புற மக் களை நம்பவைத்து மோசடி செய்து இப் போலிகள் அதிகளவு பணம் பெறுகிறார்கள்.

இந்த ஏமாற்றுப் போலி வைத்தியர்கள் தொடர்பாக சமீப சில நாட்களுக்கு முன் னர் சுகாதாரப் பகுதியினர் சில பகுதிகளில் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். இருந்தாலும் செங்கலடி, ஏறாவூர் போன்ற பகுதிகளில் பாமஸி என்ற பெயரிலும், ஹோமியோபதி வைத்தியம் என்ற பெயரி லும் 'மக்களை நம்பவைக்கும் போலிகள் வெளிப்படையாகவே செயற்பட்டு வருகி றார்கள்.

செங்கலடியில் பாமஸி என்ற பெயரை வைத்துக் கொண்டு ஒரு 'வைத்தியரால் செய்யப்படும் அத்தனை நடவடிக்கை களையும் செய்து வருகிறார் டாக்டரல்லாத ஒருவர். கூடுதலாக கருச்சிதைவு நடவடிக் கைகளும் அங்கு மேற்கொள்ளப்படுவதாக அவ்வூர் மக்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளி லிருந்து ஏராளமான பொதுமக்கள் செங்கலடி, ஏறாவூர் போன்ற நகரப் பகுதிகளுக்கு வந்து இந்தப் போலி டாக்டர் ஆசாமிகளிடம் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள்.

சட்டபூர்வமான வைத்தியர்களிடம் வேலை செய்த 'எடுபிடிகளே' தற்சமயம் உண்மையான டாக்டர்கள் என வேஷமிட்டு மக்களை ஏமாற்றிப் பணம் கறக்கிறார்கள்.

அரசாங்க சுகாதாரப் பகுதியினர் செங்கலடி, ஏறாவூர்ப் பகுதியில் வேறு வைத்தியர்களின் அனுமதி இலக்கத்துடன் இயங்கும் இந்தப் போலி வைத்திய ஆசாமி களைக் கண்டுபிடித்து கடுமையான நட வடிக்கைகள் எடுக்க வேண்டுமென ஊர் வாசிகள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

## ஓய்வு பெற்றார்

நாற்பது வருடங்களாக அஞ்சல் அதிபராகப் பணியாற்றிய திரு எஸ். வாமதேவ சர்மா ஆகஸ்ட் 28 முதல் ஓய்வு பெறுகிறார்.

யாழ்ப்பாணம், கொழும்பு திருக்கோண மலை ஆகிய பகுதிகளில் தனது சேவைக் காலத்தில் நீண்ட நாட்களைக் கழித்த திரு. வாம தேவ சர்மா ஓய்வு பெறும் போது திருக்கோணமலை அஞ்சல் அத்தியட்சகர் அலு வலகத்தில் பிரதம எழுதுந ராகவும் அஞ்சலகத்தின் மேற்பார்வை அதிகாரியாகவும் பணிபுரிந்தார்.

## பொலிஸ்காரர் தற்கொலை

வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக ஆகஸ்ட் 27ம் திகதியன்று பொலிஸ்காரர் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு மரண மானார். மூதூர் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த வீரக்குட்டி பலசேகரம் என்பவரே இவ்வாறு மரணமானவர்.

கிளிவெட்டியைச் சேர்ந்த இளைஞரான இவர் மூதூர் சாபிநகர் பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்து வந்தார். ஒரு பெண் கிராமசேவகரின் வீட்டிலேயே இவர் தங்கியிருந்தார்.

இவரின் உறவினர்கள் திருமணம் பேச முற் பட்டபோது, கிராமசேவகரான பெண்மணி மேற் படி பொலிஸ்காரர் தன்னுடனேயே வாழ்வதாகவும் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்யும் முயற்சியைத் தடைசெய்ய வேண்டுமெனவும் பொலி ஸில் முறைப்பாடு செய்தார். இது சம்பந்தமாக பொலிசார் விசாரித்ததையிட்டு மனமுடைய பலசேகரம் பொலிஸ்காரர் ஒருவரின் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்துத் தன்னைத்/தானே சுட்டுக் கொண்டு மரணமானார்.

# சமுர்த்தி புறக்கணிப்பு
## புலிகள்மீது பழி

வடக்கு-கிழக்கிலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு சமுர்த்தி (சுபிட்ச)த் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான இரு நாள் கருத்தரங்கு ஆகஸ்ட்மாத இறுதியில் கொழும்பில் நடைபெற்றது. சமுர்த்தி இளைஞர் விவகார விளை யாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

"சமுர்த்தித் திட்டம் தென்பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டு ஆறு ஏழு மாதங் களைக் கடந்த பின்னர்தான் அத்திட்டங் கள் பற்றிய சுற்று நிருபங்கள் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்பேசும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, வவுணதீவு, பட்டிப்பளை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் இன்னமும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை.

"புலிகள் நியமனங்களில் தலையிடு வார்கள் எனக் காரணம் காட்டி சமுர்த்தி நியமனம் மறுக்கப்பட்டிருக்கிறது. இவ் வாறு கூறி சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங் களையும், நியமனங்களையும் இழுத்தடிப் பது வேண்டுமென்றே தமிழ்ப் பிரதே சங்களுக்குச் செய்யப்படும் திட்டமிட்ட புறக்கணிப்பாகும்" என்று கூறப்படுகி றது.


விளம்பரப் பகுதி

## புளொக்குகள் (Blocks)

உங்கள் சாறி ஜாக்கெட்டுகள் சட்டைகள் ஆகியவற்றை நீங்களே தைக்கலாம். உங்களுடைய அளவுக்குரிய புளொக்குகள் உங்களுக்கு வழங்கப் படும். இவற்றை இரத்மலானையிலோ அல்லது பொறலஸ்கமுவயிலோ பார் வையிடலாம்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Mrs. S.Fahumy, 330 B, Pittawela Road, Off Dehiwela Road, Borelesgamuwa. T.P.518985

## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM SERVICES INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ·,பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

SHAKTHY SARAVANA,
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை


## உன்னைத் தேடுகின்றோம் நாங்கள்




### நல்லதம்பி விஜய ஈஸ்வரன்
(பெரியகல்லாறு-02, கல்லாறு)

இனியவனே!
இன்று பத்து வருடங்களாக உன்னைத்
தொலைத்துவிட்டுப் பரிதவிக்கின்றோம்.
எங்கே சென்றாய்?
பூமி விரிந்து விழுங்கிவிட்டதா?
வானம் உடைந்து உள் வாங்கிவிட்டதா?
அல்லது
சூனியப் பிரதேசத்தில்
திரந்தரக் குடியாகிவிட்டாயா?
எங்கிருந்தாலும் எழுந்து வா!
எங்கள் விழிச் சூப்பிகள்
அழுதழுது இன்று இரத்தம் சொரிகின்றன!

தோற்றம்
14.09.1966
மறைவு
1989

உன் குடும்பத்தினர்,
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு
நண்பர்கள்.
http//www.angelfire.com/nv/whistel

## காணவில்லை



இப்படத்தில் காணப்படுபவர், சிவாநகர் நெடுங்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகம் செல்லப்பா. இவர் 1991ல் கொழும்புக்கு சென்ற மகனான செல்லப்பா கணேசன் என்பவரைக் தேடி 1994-09-16 அன்று இவர் ஊரைவிட்டு கொழும்புக்குச் சென்றவர். இன்றுவரை ஊர் திரும்பவில்லை. இவரை அடையாளம் காணுவோர் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் (பிறந்த திகதி 1938.11.29)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
S.GANESAN
FOSSUMBERGET-56, 0983-OSLO
NORWAY. T.P. 004750790435
00472210086.

தகவல்:-
மகன். செ. புவீந்திரன்,
151, ஆலடிவீதி, தோணிக்கல்,
வவுனியா.


## மாபெரும் இசை நிகழ்ச்சி

உங்கள் தினமுரசின் அனுசரணையுடன்
அறிவிப்பாளர் சீதாராமன்-இக்பால், ஜெகனுடன் வழங்கும்

### சித்தாராவின் இசைமாலை

பிரபல பாடகர்களுடன் உங்கள் அபிமான
தொலைக்காட்சி,
வானொலி அறிவிப்பாளர்கள் ஒரே மேடையில்

நீர்கொழும்பு இந்து இளைஞர் மண்டபத்தில் 26.09.1999
ஞாயிறு மாலை 3.30க்கும் / 6.30 க்கும்

இரண்டுகாட்சிகள் டிக்கட் : 100/- 150/- 200/-

இணை அனுசரணை:- பிரீமியர் டின்மீன்களை வழங்கும் ஞானம் இம்போட்ஸ்,
ஸ்டார் லைட் சலவைத்தூளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் ஸ்டார் இண்டஸ்ரீஸ்,
மீவோன் சுவையூட்டிகளை விநியோகிக்கும் பீகொம்பூட்ஸ் நிறுவனம்,
நீர்கொழும்பு கிரீன் வீதி புஷ்பா ஜுவலாஸ்.


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
1978 ☆ 10 ☆ 25

ஆழியின் அழியில்
(கொலண்ட்)
1995 ☆ 09 ☆ 19



### சுரேஷ்காந்த் செல்வநாயகம் (மானிப்பாய் மேற்கு)

ஆண்டுகள் நான்கு சென்றதையா. ஆழியின் அலைகளும் ஓய்ந்ததையா. எம் கண்ணீர்த் துளிகளும் முடிந்ததையா. உன் நினைவே எம்மை வாட்டுதையா. நீ கண்ட தனவெல்லாம் கனவாகிப்போனதே. நாம் கண்ட கனவெல்லாம் கானல் நீரானதே. காலமெல்லாம் எம் கண்ணீர் அஞ்சலியை காத்திருந்தே செய்திட எம்மைப் பணித்தாய். உம் பிரிவால் துயருறும், அன்புத் தாய் திருமதி சரோஜினிதேவி, தந்தை திரு செல்வநாயகம், சகோதரர்கள் சுரேஷ்குமார், சுரேஷ்ராஜ், சுரேஷ் கோபி (கொலண்ட்), சகோதரி சசிகலா, மைத்துனர் ஜெகதீஸ்வரன் (கொலண்ட்), மாமா மகேந்திரராஜா, மாமி விஜயாம்பிகை (ஜெர்மனி), மாமா இராஜகுலேந்திரன், மாமி பவானி (கனடா), மாமா சிறிகாந்தன், மாமி உமா (சுவிஸ்), மாமா ரவிச்சந்திரன் (சுவிஸ்), சித்தி கமலா (தாயகம்), சித்தப்பா விக்னேஸ்வரன் (ஜெர்மனி), சித்தி பத்துமா, சித்தப்பா செல்வநாதன் (தாயகம்), சித்தி ஜெகசோதி, சித்தப்பா சந்திரசேகரம் (கொலண்ட்), சித்தி, தேவச் சித்தப்பா சிவகுமார் (கனடா) STUDENTS OF ALMEERS COLLEGE, HOLLAND மற்றும் உறவினர்கள்.


## SPOKEN ENGLISH
### By K.M.N. NALRAVI

யாருக்காக?

- தொழில் புரிபவர்களுக்காக.
- 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக
- இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி. ● அடிப்படையிலிருந்து இலக்கணம்
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள். ● Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி ●வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

குறிப்பு:
● பழைய மாணவர்களுக்கு Diploma வகுப்புகள் ஆரம்பம்
● அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
● புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06.(Hotel Ceylon Innsக்கு அருகில்)

TNT GRAFIX

## மனோதத்துவ வைத்தியம்
வவுனியாவிலும் (வன்னி இன்னில்) சந்திக்கலாம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப் பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கல்முனையில் ஒக்டோபர் 02,03ம் திகதிகளில்
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

வவுனியாவில் ஒக்டோபர் 09,10 திகதிகளில்
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கொழும்பில் செப்டெம்பர் 20 முதல் 28 வரை
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்லுலர் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே இழுத்து முற்றுகைத் தாக்குதல்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

ரணகோஷ 05 படை நகர்வு வழக்கத்திற்கு மாறான நாளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளில் படையினர் நடவடிக்கைகளில் இறங்குவது அரிதான விஷயம். உயர் அதிகாரிகள் விடுமுறையில் இருக்கும் நாள் என்பதால் பாரிய படை நகர்வுகள் செவ்வாய், புதன் கிழமைகளிலேயே அநேகமாக மேற்கொள்ளப்படுவதுண்டு.

இந்த வழக்கம் காரணமாக புலிகளும் ஞாயிற்றுக்கிழமையில் படை நகர்வை எதிர்பார்த்து உஷாராக இருக்க மாட்டார்கள் என்று படைத்தரப்பு நினைத்தது. எனவே தமது வழக்கத்தை இம்முறை மாற்றியது.

தமது ஞாயிறு விடுமுறை ஒய்வை துறந்துவிட்டு படை உயர் அதிகாரிகளும் ரணகோஷ 05 நகர்வுக்குரிய நாளாக ஞாயிற்றுக் கிழமையை குறித்தனர்.

இந்த அவசரத்துக்கு காரணம் இல்லாமலில்லை. இந்த ஆண்டுக்குள் மன்னார்-பூநகரி பாதையை என்றாலும் பிடித்துவிடவேண்டும். புலிகளை ஒரு குறுகிய நிலப்பகுதிக்குள் தற்காப்பு நிலைக்குள் முடக்கிவிடவேண்டும் என்பது சந்திரிக்கா அரசாங்கத்தின் இலக்கு. எதிர்பார்ப்பு. இலட்சியம். ஆசை.

அப்படிச் செய்தால்தான் வெற்றிப் பேருவகையுடனும், புலிகளது பாரிய தாக்குதல்கள் குறித்து அச்சமின்றியும் அடுத்த ஆண்டை தேர்தல் ஆண்டாக சந்திக்கலாம். வெற்றியையும் தழுவிக் கொள்ளலாம் என்பதுதான் பெரிய பெரிய ஆசை.

வழக்கமாக செப்டம்பரில் வன்னியில் மழைக் காலம் ஆரம்பமாகிவிடும். இம்முறை சற்றுப் பிந்துகிறது. எப்படிப் பிந்தினாலும் அக்டோபர் நவம்பரில் அடை மழை பொழியும் காலநிலை வந்துவிடும்.

மழைக்காலம் வந்துவிட்டால் இரண்டு பாரிய பிரச்சனைகளை படையினர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஒன்று, பாரிய படை நகர்வுகளை மேற்கொள்ள முடியாதிருக்கும்.

இன்னொன்று, புலிகளது தாக்குதல்களை எதிர்கொள்வதற்கு தற்காப்பு நிலைகளை கெட்டிப்படுத்த முடியாமல் போகலாம்.

இந்த இரு பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வேண்டுமானால் மழைக்காலத்தின் முன்னர் பெரியமடுவையாவது கைப்பற்றியாக வேண்டும்.

ஆகவேதான் அவசரமாக திட்டம் தீட்டி, வன்னிப் படைப் பலத்தில் பெருமளவை ஒன்று குவித்து ரணகோஷ 05 என்ற பெயருடன் பாரிய படை நகர்வு மேற்கொள்ளப்பட்டது.

வன்னிக்கள முனையில் உள்ள டாங்கிகள், கவச வாகனங்கள், ஆட்டிலெறிகள் போன்றவற்றில் 60 வீதமானவையும், வன்னி களமுனைப் படையினரின் ஆட்பலத்தில் 40 வீதமானவையும் இச் சமரில் இறக்கப்பட்டதுடன், விமானப்படையும் முழு மூச்சாக உதவியது.

ஞாயிற்றுக்கிழமை சரியாக ஆறுமணிக்கு படை நகர்வு ஆரம்பமாகியது.

மூன்று முனைகளில் இருந்துபடைகள் ஒரே நேரத்தில் முன்னேறின. மும்முனை முன்னேற்றத்தை தடுக்கக்கூடிய ஆட்பலமும், ஆயுதமும், புலிகளிடம் இருக்காது என்ற கணிப்புடனேயே மும்முனை நகர்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மும்முனை நகர்வின் நோக்கம் பற்றி முன்னுக்குப்பின் முரணான, தப்பான தகவல்களே வெளியாகிக் கொண்டிருந்தன.

பள்ளமடுச் சந்தியை கைப்பற்றும் முயற்சி என்றும், மன்னார் பூநகரிப் பாதையைக் கைப்பற்றும் முயற்சி என்றும்,பாலம்பிட்டி நோக்கிய முன்னேற்றம் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ரணகோஷ 05 இன் உண்மையான நோக்கம் பாலம்பிட்டி முதல் பள்ளமடுவரையான பகுதிகளை கைப்பற்றுவதேயாகும். குறிப்பாக பெரியமடுவை பிடிப்பதுதான் பிரதான இலக்கு.

ரணகோஷ 03, ரணகோஷ 04, ரணகோஷ 04 கட்டம் இரண்டு ஆகிய மூன்று பாரிய படை நகர்வுகளும் இதே இலக்குடன்தான் முன்னர் மேற்கொள்ளப்பட்டன.

அவை தமது இலக்கை எட்டமுடியாது முடிவடைந்தன.

ரணகோஷ 03 இருமுனைகளை கொண்டிருந்தது. இரணை இலுப்பைக் குளத்தை தளமாகக் கொண்டு சிராட்டிக்குளம் பகுதியூடாக முன்னேறும் படை நட்டாங் கண்டலில் இருந்து கள்ளியடிக்குச் செல்லும் பாதையை கைப்பற்றுவது ஒரு முனை.

இரண்டாவது முனை; பாலம்பிட்டியில் நிலை கொண்டுள்ள படையினர் முன்னேறி பெரிய மடுவைக் கைப்பற்றுவது.

சிராட்டிக்குளம் ஊடாக நகர்ந்து கள்ளியடிப் பாதையைப் பிடித்தால் பெரியமடுவில் உள்ள புலிகளுக்கு விநியோகப்பாதை தடைப்படும். எனவே பெரியமடுவை நோக்கி பாலம்பிட்டியிலிருந்து நகரும் படைகளை எதிர்த்து புலிகள் பெரும் தாக்குதலை தொடுக்கமுடியாது. பின் வாங்குவார்கள்.

ஆனால் இக் கணிப்புக்களை களநிலவரம் பொய்யாக்கியது. இராணுவத்தின் முன்னணிப் படையான 53வது டிவிசனின் சிறப்புப் பிரிவாகிய எயார் மொபைல் பிரிகேட் அணியினர் சிராட்டிக் குளத்தில் புலிகளது பலத்த தாக்குதலை எதிர் கொண்டு பின்வாங்கினார்கள். இச் சண்டையில் 39 படையினர் பலியாகினர். இதனையடுத்து பாலம்பிட்டியில் இருந்து மேற்கொண்ட நகர்வும் கைவிடப்பட்டது.

இதேபோன்றே ரணகோஷ 04, ரணகோஷ 04 கட்டம் 02 ஆகியனவும் பின்னடைவையே சந்தித்தன.

ரணகோஷ 04 கட்டம் 02 இரு முனைகளால் முன்னெடுக்கப்பட்டது. மன்னார் பூநகரி பிரதான பாதை ஊடாக முன்னேறி பள்ளமடு சந்தியை கைப்பற்றுவது ஒருமுனை. சன்னார் குளப் பகுதியூடாக முன்னேறி பள்ளமடு பெரியமடு பாதையைக் கைப்பற்றுவது இரண்டாவது முனை.

பின்னர் பள்ளமடுச் சந்தியை கைப்பற்றிய படையணியும், பள்ளமடு-பெரியமடு பாதையை கைப்பற்றிய படையணியும், தமக்குள் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும். இதுதான் ரணகோஷ 04 கட்டம் இரண்டின் அடிப்படைத் திட்டம்.

புலிகளின் விக்ரர் கவச எதிர்ப்பு அணி யும், ஏனைய புலியணிகளும் நடத்திய கடும் முறியடிப்புச் சண்டையால் இத் திட்டமும் இலக்கை எட்டாது முடிந்தது.

இச் சண்டையில் 150ற்கு மேற்பட்ட படையினர் வரை பலியானதாகச் செய்திகள் வெளியாகின. புலிகள் தரப்பில் 84 பேர் பலியானார்கள்.

பள்ளமடு முதல் பாலம்பிட்டிவரையான இணைப்பை ஏற்படுத்த படையினர் பலத்த முயற்சி செய்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒரு காரணம், அகலக் கால் வைத்து நிற்கும் ரணகோஷ படையினரை புலிகள் ஊடறுத்துத் தாக்க வாய்ப்பான, புறப்படும் தளமாக உள்ள பகுதி அதுதான்.

இரண்டாவது காரணம், மன்னார் பூநகரி பாதையில் படையினர் முன்னேறும்போது அவர்கள்மீது பக்கவாட்டுப் பக்கமாக புலிகள் புகுந்து தாக்குவதற்கும் பெரியமடு பகுதி புலிகளிடம் இருப்பது சாதகமாகிவிடும்.

எனவேதான் ரணகோஷ படையினரின் தற்காப்புக்காகவும், மன்னார் பூநகரி பாதையை கைப்பற்றும் அடிப்படை நோக்கத்துக்கு சாதகமாகவும் பள்ளமடு முதல் பாலம்பிட்டிவரையான பகுதியை கைப்பற்ற படையினர் பல நகர்வுகளை மேற்கொண்டு பெருத்த விலை கொடுத்து வருகிறார்கள்.

பள்ளமடுச் சந்திக்கு சில கிலோமீற்றர்கள் முன்பாகவும், சிராட்டிக்குளத்துக்கு சற்று முன்பாக இரணை இலுப்பைக் குளத்தை தளமாகக் கொண்டும், பாலம்பிட்டியிலும் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

பாலம்பிட்டியை நோக்கி படைகள் முன்னேற முயன்றதாக வெளியான தகவல்கள் தவறானவை. பாலம்பிட்டி ஏற்கனவே படையினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.

பள்ளமடு, சிராட்டிக்குளம், பெரிய மடு ஆகிய பகுதிகளை நோக்கியே மும்முனைகளில் ரணகோஷ 05 நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மன்னார் பூநகரி பிரதான வீதியால் பள்ளமடு சந்தி நோக்கி ஒரு அணி முன்னேறியது.

இன்னொரு அணி இரணை இலுப்பைக் குளத்தில் இருந்து சிராட்டிக்குளம் நோக்கி முன்னேறியது.

பாலம்பிட்டி வடக்கே இருந்து மூன்றாவது அணி பெரியமடு நோக்கி நகர்ந்தது.

ஒரு இராணுவ நடவடிக்கையில் பல முனைகளில் படைகள் நகர்ந்தாலும், அவற்றில் ஒன்று தான் பிரதான முனையாக இருக்கும். ஏனைய முனை நகர்வுகள் பிரதான முனையில் இருந்து தமது எதிரியை திசை திருப்பும் நகர்வுகளாக இருக்கும்.

ரணகோஷ 05 நடவடிக்கையில் மூன்று முனைகளில் படையினர் முன்னேறியபோதும், சிராட்டிக்குளம் பகுதி நோக்கிய நகர்வே பிரதான முனையாக இருந்தது.

சிராட்டிக்குளத்தை பிடித்து தொடர்ந்து முன்னேறி கள்ளியடி செல்லும் வீதியைக் கைப்பற்றுவதுதான் நோக்கம். அப்படிக் கைப்பற்றினால் பெரியமடுவில் உள்ள புலிகள் விநியோகப் பாதையை இழப்பர். வேறு வழியின்றி பின் நகர்வர்.

இவ்வாறு நடந்துவிட்டால் பள்ளமடுச் சந்தியை கைப்பற்றும் படையினரின் முயற்சியும் இலகுவாகும். பாலமுனையில் இருந்து நகரும் படைகளும் பாரிய எதிர்ப்பு இல்லாது பெரிய மடுவை கைப்பற்றலாம்.

ரணகோஷ 03இல் வகுத்த திட்டம்தான் அதைவிட பெரிய எடுப்போடு, சில வியூக மாற்றங்களோடு ரணகோஷ 05 என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டது.

படையினர் போட்ட திட்டம், நினைத்த கணிப்பு என்பவற்றுக்கு மாறாக புலியணிகள் ஞாயிறு அன்றும் தயார் நிலையில் இருந்தன.

மழைக்காலத்திற்கு முன்பாக பாரிய படை நகர்வு ஒன்று நடந்தே தீரும் என்பதை கடந்த மாதமே புலிகள் கணித்துக் கூறியதுடன், அதனை முறியடிக்கும் ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

விக்ரர் கவச எதிர்ப்பு படையணி,கிட்டு பீரங்கிப் படையணி போன்றன பள்ளமடு, பெரிய மடு பகுதிகளில் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தில் இறங்கி 25 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இத்தகைய தொடர்ச்சியான போர் அனுபவம் பெற்ற எவரும் இலங்கையிலேயே கிடையாது.

அந்த தொடர்ச்சியான அனுபவமானது படை நகர்வுகள் எவ்வாறாக இருக்கும், படையினரின் கணிப்புக்கள் எப்படி இருக்கும் என்பதையெல்லாம் ஊகித்து, மாற்றுத் திட்டம் தீட்டி வியூகம் வகுக்க கைகொடுக்கின்றன.

சிராட்டிக்குளம் ஊடாக முன்னேறி பெரிய மடுவை கைப்பற்றுவதுதான் பிரதான முனையாக இருக்கும் என்று கணித்து, அங்கேயே பீரங்கிப் படையணி உட்பட விசேஷ படையணிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே ரணகோஷ 03இல் சிராட்டிக் குளம் காட்டும் பகுதியில் எயார் மொபைல் பிரிகேட் மினி முகாம் ஒன்றை அமைத்து நிலை கொண்டது. கிட்டுப் பீரங்கிப் படையணியின் சூட்டு ஆதரவோடு, புலியணிகளும் நகர்ந்து ஊடறுத்தனர்.

சிராட்டிக்குளத்தில் நிலைகொண்ட எயார் மொபைல் பிரிகேட்டிற்கு இரணை இலுப்பைக் குள முகாம்தான் பின்தளம். விநியோக மையம். புலியணிகள் இடையே ஊடறுத்து பின்தளத்துடனான உறவைத் துண்டித்து தாக்கின. எயார் மொபைல் பிரிகேட்டிற்கு உதவ வந்த 55 டிவிசனும் தடுத்து நிறுத்தப்பட்டது.

புலிகளது விநியோகப் பாதையை தடுக்க சென்ற படையினரின் விநியோகப் பாதை புலிகளால் அறுக்கப்பட்டது. கடும் சமரின் பின்னர் சிராட்டிக்குள மினி முகாமை கைவிட்டு படையினர் தளம் திரும்பினர்.


எனவே இம்முறையும் அப்பாதையூடாக படையினர் நகர்ந்து வருவர் என்று புலிகள் கணித்து, முறியடிப்பு தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளை செய்து வைத்திருந்தனர்.

அதிகாலை ஆறுமணிக்கு மும்முனை நகர்வு ஆரம்பித்தபோது, புலிகள் உடனடியாக பாரிய எதிர்ப்பைக் காட்டவில்லை. தாம் தயார் நிலையில் இல்லை என்று படைத்தரப்பு எண்ணும் விதமாக எதிர்ப்பை தளர்த்தி உள்ளே இழுத்தனர்.

தாம் குறித்திருந்த இடம்வரை படையினரை முன்னேற அனுமதித்த புலிகள், திடீரென்று தாக்குதலை ஆரம்பித்தனர்.

பள்ளமடு நோக்கியும், பாலம்பிட்டியில் இருந்து பெரியமடு நோக்கியும் நகர்ந்த படையினரை நோக்கிப் பீரங்கிப் படையணிதான் பிரதான தாக்குதலைத் தொடுத்தது. எறிகணைகளைப் பொழிந்தது.

சிராட்டிக்குளம் நோக்கி முன்னேறிய படையினரை புலிகளது தாக்குதல் அணிகள் எதிர் கொண்டன.




**பெரியமடுவில் இருந்து மேற்கே 11 கிலோமீற்றரில் பள்ளமடு உள்ளது. பெரியமடுவில் இருந்து பாலம்பிட்டி 8 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. பள்ளமடு முதல் பெரியமடு உட்பட பாலம்பிட்டி வரை இணைப்பை ஏற்படுத்துவதே ரணகோஷ 05 இன் இலக்கு.**

இரு தரப்பும் கடுமையாகச் சண்டையிட்டன. புலிகளது மகளிர் படையணி இச் சண்டையில் பிரதான பங்கு வகித்தது.

காட்டுச் சமரில் கைதேர்ந்த புலிகளது சிறப்புப் படையணியும் களத்தில் இறக்கப்பட்டது.

காலை 6 மணிக்கு ஆரம்பமான சண்டை மாலை நாலு மணிவரை உக்கிரமாக நடந்தது.

முன்னேறிய படையணி ஒன்றை முற்றுகையிட்டு தாக்குதல் தொடுத்தனர் புலிகள்.

காட்டுப் பகுதிக்குள் புலிகளது வியூகத்திற்குள் சிக்கியபோதும் படையினரும் முற்றுகையை உடைக்க கடுமையாக சண்டையிட்டனர்.

இறுதியில் படையினர் முற்றுகையை உடைத்து தமது தளம் நோக்கி சென்றபோதும், முற்றுகை உடைப்புக்கு கணிசமான விலை கொடுத்தனர்.

புலிகளால் 23 சடலங்கள் கைப்பற்றப்பட்டன. ஆயுதங்களும் எடுக்கப்பட்டன. இவற்றில் 15 சடலங்கள்வரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன. எனவே உடல்களை மீட்க முடியாதளவுக்கு களநிலை நெருக்கடியாக இருந்துள்ளது என்பது பகிரங்கமாகத் தெரிகிறது.

மும்முனைச் சண்டைகளிலும் மொத்தம் 55 படையினர் பலியானதாக படைத்தரப்பே ஒப்புக் கொண்டுள்ளது. காயமடைந்தோரில் 93 பேரின் நிலை கவலைக்கிடம் என்றும் கூறியுள்ளனர். புலிகளும் 23 உடல்களை கைப்பற்றியிருப்பதால் பலியான எண்ணிக்கை 78 ஆகிறது. பலியானோர் தொகை மேலும் அதிகம் என்றுதான் சுயாதீன செய்திகள் கூறினாலும் தணிக்கை காரணமாக நாம் உறுதிசெய்து கூறமுடியாது.

படைத்தரப்பு தகவலின்படி 700க்கு மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர்.



இதுவரையான ரணகோஷ சண்டைகளில், மிகப் பாரிய சமர் இதுதான்.

படைத்தரப்பே ஒப்புக் கொள்ளுவதன் பிரகாரம் நோக்கினால்கூட, ரணகோஷ 05 இல் படைத் தரப்புக்கு ஏற்பட்டுள்ள சேதம் மிகப் பாரியது.

கணிப்பும், எதிர்ப்பார்த்த இலக்கும் எட்டாத நிலையில்தான் ஞாயிறு மாலை நான்கு மணிக்கு சண்டை முடிவுக்கு வந்தது.

புலிகள் தரப்பில், 31 பேர் களத்தில் பலியானதாக தகவல்கள் கூறுகின்றன. உடனடியாக 27 பேரின் பெயர் விபரங்கள் புலிகளால் வெளியிடப்பட்டன. 12 பெண் புலிகளும் பலியாகி உள்ளனர். பலியான பெண் புலிகளின் மேஜர் தரத்தில் ஒருவரும், கப்டன் தரத்தில் இருவரும் அடங்குகின்றனர்.

மேஜர் கஜேந்தினி பத்மநாதன் யாழ்ப்பாணம், கப்டன் மனோ (செல்வநாயகி கந்தசாமி) கிளிநொச்சி; கப்டன் செல்லா செல்லத்துரை யாழ்ப்பாணம் ஆகியோரே அந்த மூவருமாவர்.

ஆண் புலிகளிலும் கப்டன் தரத்தில் இருவர் பலியாகியுள்ளனர். கப்டன் வேணுகரன், மட்டக்களப்பு, கப்டன் சபேசன் அனுராதபுரம் ஆகியோரே பலியான கப்டன்களாவர்.

60 எம்.எம். மோட்டார்கள் 04, 40 எம்.எம். கிரனைட் ஏவு கருவிகள் 02, ரி.56, 02 ரக துப்பாக்கிகள் 45, ரி.56, 01 ரக துப்பாக்கி 01, ஆர்.பி.ஜி 01, பி.கே.எல்.எம்.ஜி.01, நடுத்தர ரவைகள் 2,200, பி.கே.எல்.எம்.ஜி ரவைகள் 1500, கிளைமோர் 04 ஆகியன கைப்பற்றப்பட்டதாகப் புலிகள் கூறியுள்ளனர். ஆனால் படைத் தரப்பு இதனை நிராகரிக்கிறது.

ஞாயிறு மாலை நான்கு மணியுடன் சண்டை ஒய்ந்துவிட்டது. 13.09.99 திங்கட்கிழமை சண்டைகள் நடக்கவில்லை. எனினும் கடும் சண்டை திங்களன்றும் தொடர்ந்ததாக செய்தி ஊடகங்கள் சில விபரித்திருந்தன.

திங்கட்கிழமையன்று கொழும்பில் அம்புலன்ஸ் வண்டிகள் அடிக்கடி ஒடுப்பட்டு திரிந்தன. இதனை வைத்து திங்களன்றும் சண்டை நடப்பதாக நினைத்துவிட்டனர்.

நடந்தது என்னவென்றால், ஞாயிறு நடை பெற்ற சண்டையில் காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் கவலைக்கிடமான நிலையில் இருந்தோரை திங்க ளன்று கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றம் செய்தார்கள். ஞாயிறு அன்று கொழும்பில் அம்புலன்சுகள் அதிகமாக ஒடுப்பட்டு திரிய வில்லை. ஏனெனில் காயப்பட்டவர்களை அநுராதபுரத்திற்கு நேராகக் கொண்டு போய் விட்டனர்.

அநுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு கொண்டுவரும் பொருட்டே அம்புலன்சுகள் ஒடித் திரிந்தன. செவ்வாய்க் கிழமையும் எறி கணைகள் அவ்வப்போது ஏவப்பட்ட சத்தங்கள் வன்னிக் களமுனையில் கேட்டனவே தவிர, பெரும் மோதல்கள் எதுவும் நிகழவில்லை.

ஞாயிறு சண்டை பலத்த இழப்போடு முடிந்ததால், மறு நாளும் தொடர்ந்து சண்டை நடைபெறும் சூழ்நிலை இருக்கவில்லை. ஒய்வு கட்டாயமாகத் தேவைப்பட்டது.

நூற்றுக் கணக்கான புலிகளே முறியடிப்புச் சமரில் ஈடுபட்டதாக மேஜர் ஜெனரல் வசந்தா பெரேரா கூறியிருக்கிறார். ஆனால் இன்னொரு அரசாங்கச் செய்தி பலியானது மட்டுமே நூற்றுக் கணக்கான புலிகள் என்று கூறியுள்ளது.

இதனை எழுதும்வரை மும்முனை நகர்வுகள் இலக்கை எட்டவில்லை. மேலதிகமாக தகவல்கள் இருப்பின் அடுத்தவாரம் பார்க்கலாம்.

மழைக்காலத்திற்கு முன்னர் மீண்டும் நகர்வில் ஈடுபட படையினர் முனையக்கூடும்.

ஆனால் புலிகளும் அதனை எதிர்பார்த்து, தமது தரப்பில் இழப்புக் குறைந்த தாக்குதல் உத்திகளை வகுத்துள்ளனர்.

தேடிச் செல்லும் படையினருக்கு இல்லாத பல சாதகங்கள், தமது பிரதேசத்தில் முன்கூட்டியே ஏற்பாடுகளுடன் காத்திருக்கும் புலிகளுக்கு இருக்கின்றன. இதுவும் படையினருக்கு அதிக சேதம் ஏற்பட முக்கிய காரணம்.

## அதிரடி அய்யாத்துரை



***மன்னார் அரச அதிபர்*** விவகாரத்தில் அவர் விடுதலைக்கு தாம் பாடுபடுவதாக தமிழ்க் கட்சிகள் சில ஏட்டிக்குப் போட்டியாக பத்திரிகைகளுக்கு கூறிவருகின்றன. ஆனால் எல்லாமே 'நாமும் கதைத்தோம்' என்று செய்தி வரத்தக்க சித்து விளையாட்டுக்கள் தானாம். யாரும் இறுக்கமாக வற்புறுத்தியதாகத் தெரியவில்லை. அரச அதிபர்களாக உள்ள சிவிலியன்களை தூக்கிப்போட்டு, சீருடையினரைப் போடுவதற்கான எண்ணமும் கைதின் பின்னணியில் உள்ளதாகக் கூறுகிறார்கள்.

***சமீபத்தில் அமரரான*** பச்சைக் கட்சியின் மூத்த பிரமுகர், சமீபத்தில் வெளிநாட்டுப் பயணம் சென்று வந்தவர். அப்போது இலண்டனுக்கும் போயிருக்கிறார். அங்கு ரெண்டெழுத்து அரசியல் ஆலோசகரையும் சந்தித்து உரையாடினாராம். இருவரும் நீண்டநேரம் உரையாடினார்களாம். பிரியாவிடை கொடுத்து அனுப்பி வைத்தாராம் ஆலோசகர்.

***மலேசியாவில்*** இருந்து மாதாந்தம் 'செம்பருத்தி' என்னும் சஞ்சிகை சிறப்பாக வெளிவருகிறது. மலேசியத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கிறது. இலங்கை இனப்பிரச்சனை பற்றியும் உண்மையான தகவல்களைப் பெற்று வெளியிடுகிறார்கள். முரசின் 'இலக்கிய நய'மும் மாதா மாதம் மறுபிரசுரமாகிறது.

***கூட்டான கட்சியின்*** சேனாதிபதி கூறிவரும் கருத்துக்கள் ஏற்கத்தக்கனவே. ஆனால் கட்சியின் செயலாளர் நேர்மாறாக அதிகாரச் சக்தியாரை ஆதரிக்கிறார். அப்படியானால் சேனாதிபதியின் வழி தனி வழியோ? உண்மை அதுவாயின் பாராட்டுக்கள்!

***'கலை ஒலி'*** என்ற பெயரில் இயங்கிய வானொலி நிறுவனத்தை சொர்ணவாகினி நிறுவனம் வாங்கிவிட்டதாம். இந்த வானொலி அறிவிப்பாளராக ஒரு அழகான பெண்ணை சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்போகிறார்களாம். சிங்கப்பூர் வானொலியில் தமிழை புதுவிதமாக உச்சரிப்பதாகக் கூறி படுகொலை செய்து வருபவராம் இந்த நவீன நங்கை. தமிழைக் கொல்வது பற்றி பெருமபான்மை இன சோதரத நிறுவனத்துக்கு என்ன கவலை? ஆகவே அம்மணி வருகிறார். இவரது அழகால் வர்த்தக விளம்பரத்தாரர்களையும் கவரலாம் என்பதும் நிறுவனத்தின் திட்டமாம். அம்மணிக்கு மாத ஊதியம் மட்டும் ஆறாயிரம் அமெரிக்க டொலர். அதாவது நான்கு இலட்சத்து 20 ஆயிரம்! தமிழைக் கொல்ல இவ்வளவு கூலியா? நேரம்தான்!

***கொழும்பில் செய்தியாளர்களுக்கு*** கொழும்பு பல்கலைக்கழகத்தில் வகுப்புக்கள் நடந்து வருகின்றன. இங்கு வகுப்பு எடுக்கச் செல்லும் செய்தியாளர்கள் சிலர் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களை அள்ளி வீசுகின்றனராம். போதிப்பவர்களே இப்படிச் செய்தால், இவர்களிடம் கற்பவர்கள் சாதிப்பது எப்படியோ?

***தேனகத்தில் நடைபெற்ற*** இடம்பெயர் சேவையில் பட்ட அவமானங்களை பல அதிகாரிகள் வெளியே சொல்லவில்லை. "குறைகள் தீர்த்தன. ஆயிரக்கணக்கானோர் கூடினர்" என்று செய்திகள் போட வைத்தனர். இது பற்றி நேர்மையான அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறினார்: "குறையைத் தீர்க்கவில்லை. திசை திருப்பி விட்டிருக்கிறோம், வடக்கு-கிழக்கில் நடந்த மூன்று இடம்பெயர் சேவையும் தோல்வி!"

***கழக மாணிக்கம்*** பலியாக முன்னர் கொழும்பில் உள்ள முன்னாள் புளொட் முக்கியஸ்தரான இந்நாள் பத்திரிகையாளர் ஒருவரைக் கொல்வதற்கு ஆட்களை ஏற்பாடு செய்தவராம். "எப்படியாவது அவரைப் போடுவேன்!" என்றும் கூறிக்கொண்டிருந்தாராம்.

***அம்பாறை கல்லோயா*** விழாவில் கிழக்கின் தனித்துவக் கட்சித் தலைவர் கலந்துகொண்டதைப் பற்றி குறை கூறப்படுவதை கடந்தவாரம் கோடிட்டுக் காட்டியிருந்தேன். அம்பாறை மாவட்டத்தில் நீத்தைப் பிரதேசத்தில் முஸ்லிம்களது காணிகள் பறிக்கப்பட்டு வருவதாக இந்த வாரம் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. பார்த்தியளோ கொண்டாட்டத்துக்கு கூப்பிட்டுவிட்டு, மறுபக்கத்தாலே திண்டாட வைக்கினம்? இப்ப சொல்லுங்கோ யார் அதி புத்திசாலிகள்?!

***மட்டக்களப்பு சித்தாண்டி*** கோவில் விவகாரத்தில் அத்துமீறலில் ஈடுபட்ட அதிகாரியை தொல்லை தவிர்ப்புக்குழு துடிப்புடன் அழைப்பு என்று செய்தி பார்த்திருப்பீர்கள். அதிகாரி தோன்றினார். இரண்டு எழுத்தார் ஆட்சேர்ப்பு செய்தனர். அதுதான் தேடினோம் என்றார். தொல்லை தவிர்ப்புக்குழு கப்சிப்! இந்தச் செய்தி மட்டும் பெரிதாக வரவில்லை.

**இந்தவாரப் பொன்மொழி:**

> **"இருள் நீக்கும் ஒளியாக இரு!– ஆனால் எரிக்கும் சக்தியை மறந்து விடாதே!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# 1991

# ஒரு இலட்சம் படையினர் பத்தாயிரம் புலிகள்

1988, 89ம் ஆண்டுகளில் இருந்ததை விட சிறீலங்காவின் தரைப்படைக்கு மேலும் நவீனரக ஆயுதங்களை 1991ல் அரசாங்கம் கொள்வனவு செய்தது.

நீண்டதூர ஆட்டிலெறிகள், சக்திமிக்க கவச வாகனங்கள் போன்றவற்றைப் பெருமளவில் கொள்வனவு செய்தனர்.

இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு பெருமளவான நிதி தேவைப்பட்டது. நவீன ஆயுதங்களை கடனாக வழங்க பல நாடுகள் மறுத்துவிட்டன.

ஆனால் கிழக்கு ஐரோப்பாவில் சோசலிச நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கை அரசுக்கு சாதகமாக மாறின.

யூகோஸ்லாவியா, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி போன்ற நாடுகள் தம்மிடம் மிதமிஞ்சிக் குவிந்து கிடந்த ஆயுதங்களை மலிவு விலையில் விற்பதற்கு முன்வந்தன.

இதனை ஒரு வரப்பிரசாதமாக கருதிய இலங்கை அரசு தனது படைகளுக்குரிய ஆயுதங்களையும், தளபாடங்களையும் கொள்வனவு செய்தது.

சீனாவும் இலங்கை அரசுக்கு மலிவு விலையில் ஆயுதங்களை விற்பனை செய்தது.

கடற்படைப் படகுகள், கவசவாகனங்கள், ஆட்டிலெறிகள் போன்றவற்றை மலிவு விலையில் மேற்குலக நாடுகளிடம் வாங்கிய அரசாங்கம், சீனாவிடம் புதிய ஜெட் போர் விமானங்களை வாங்கியது.

வை 12, வை 8 போன்ற பாரிய விமானங்களையும் சிறீலங்கா விமானப்படையினர் கொள்வனவு செய்தனர்.

கடற்படைக்குரிய அதிவேக டோரா சண்டைப் படகுகள், ரேடார் கருவிகள் பொருத்தப்பட்ட சக்திமிக்க கண்காணிப்புக் கப்பல்கள், அதிவேக துருப்பேற்றிகள் போன்றவை இஸ்ரேல், தென்கொரியா போன்ற நாடுகளிடம் இருந்து பெறப்பட்டன.



## செலவீனம்

மலிவு விலையில் இவற்றைக் கொள்வனவு செய்தபோதும், பெருமளவு நிதி தேவையாகவே இருந்தது.

இதனால் பாதுகாப்புச் செலவீனங்கள் உயரத் தொடங்கின.

1981ம் ஆண்டு சிறீலங்கா அரசின் பாதுகாப்பு செலவீனம் மொத்தச் செலவீனத்தில் மூன்று சதவீதமாக இருந்தது.

1991ல் பாதுகாப்புச் செலவீனம் மொத்தச் செலவீனத்தில் 20 சதவீதமானது.

1981ம் ஆண்டு 1,100 கோடி ரூபாவை பாதுகாப்புக்காக செலவிட்ட அரசாங்கம், 1991ல் 16 ஆயிரத்தி 700 கோடி ரூபாவை இராணுவச் செலவீனமாக வழங்கியது.

1984 முதல் அரசாங்கத்தின் இராணுவச் செலவீனங்கள் அதன் சக்திக்கு மீறியவையாக உயர்ந்து சென்றன.

இந்த செலவீன அதிகரிப்பைச் சரிக்கட்ட சிறீலங்கா அரசாங்கம் சில உபாயங்களைக் கையாண்டது.

பொருளாதார அபிவிருத்திக்காக வெளி நாடுகள் வழங்கிய நிதி உதவிகளை தந்திரமாகப் பாதுகாப்பு செலவீனங்களுக்கு திசை திருப்பி விட்டனர்.

1991ம் ஆண்டு வெளி நாடுகளில் இருந்து கிடைத்த நிதி உதவி 23 ஆயிரத்தி 247கோடி ரூபாய்கள்.

அதே ஆண்டு சிறீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் 16 ஆயிரத்தி 700 கோடி ரூபாய்கள்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்தியப்படையினர் இலங்கையில் நிலை கொண்டிருந்த 88, 89ம் ஆண்டுகளில் சிறீலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்பு செலவீனங்களின் பெரும் பங்கை இந்தியா சுமந்தது.

இதனால் அக்காலப் பகுதியில் சிறீலங்கா அரசுக்கு பெரும் சுமை குறைந்தது.

1981ல் பாதுகாப்புச் செலவீனமாக நாளொன்றுக்கு 30 இலட்சம் ரூபாயைச் செலவு செய்த சிறீலங்கா அரசாங்கம், 1990ம் ஆண்டு நாலு கோடி ரூபாவையும், 1991ல் நாலுகோடியே ஐம்பது இலட்சம் ரூபாயையும் நாளொன்றுக்குச் செலவு செய்தது.

இவ்வாறு பாரிய செலவுகளுடன் அரச இராணுவ இயந்திரம் உருவாக்கப்பட்ட போதும், 1991வரை குறிப்பிடத்தக்க வெற்றி எதனையும் பெற முடியவில்லை.

## புலிகள் கருத்து

அரசின் இராணுவ இயந்திரம் பாரியளவில் வளர்ந்து வருவது பற்றி 1992 ஆரம்பத்தில் புலிகள் பின்வருமாறு கூறியிருந்தனர்.

"பாரிய செலவுகள் மூலம் உருவான இராணுவ இயந்திரத்தால் சிறீலங்கா அரசு சாதித்தது என்ன?

பல்லாயிரம் தமிழீழ மக்களைப் படுகொலை செய்து, தமிழர் பொருளாதாரத்தைச் சிதைத்து, தமிழர்களது அமைதியான, சுதந்திரமான வாழ்வை சீர்குலைத்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை.

ஆனாலும் இந்த அடக்குமுறை இராணுவ இயந்திரத்தைப் படிப்படியாக தகர்ப்பதில் நாம் நம்பிக்கைக்குரிய வெற்றிகளைப் பெற்று வருகிறோம்.

பலகோடி ரூபாய்களைச் செலவு செய்து, சிறீலங்கா அரசு கொள்வனவு செய்யும் பல நவீன ஆயுத தளபாடங்களையும் நாம் கைப்பற்றி வருகிறோம்.

அத்துடன் இராணுவ இயந்திரத்துக்கு இறுதி அடி கொடுக்கக்கூடிய வகையில் தமிழரது படைபலத்தைப் படிப்படியாக பெருக்கி வருகிறோம்.

1986, 87ம் ஆண்டுகளில் சிறீலங்காவின் ஆயுதப்படையில் 37 ஆயிரத்தி 660 பேர் இருந்தபோது, புலி வீரர்கள் இரண்டாயிரம் பேர்தான் இருந்தனர்.

இது 18 இராணுவத்துக்கு ஒரு புலி என்ற விதமாகும்.

1990, 91ல் சிறீலங்காவின் ஆயுதப்படையில் ஒரு இலட்சம் போர் வீரர்கள் இருக்க, புலி வீரர்கள் பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள்.

இது பத்து இராணுவத்துக்கு ஒரு புலி என்ற விகிதமாகும்.

சிறீலங்கா அரசானது கடும் முயற்சி செய்து தனது இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்திக் கொள்ளும் அதேசமயம், தமிழீழ மக்களது தேசிய பலம் ஒன்றுதிரட்டப்பட்டு தமிழர் படை பலமும் கட்டி வளர்க்கப்பட்டு வருகிறது!" என்று புலிகள் தெரிவித்திருந்தனர்.

| ஆண்டு | வெளி நாட்டு உதவி | பாதுகாப்புச் செலவு |
|---|---|---|
| 1981 | 8,208 கோடி ரூபா | 1,100 கோடி ரூபா |
| 1982 | 9,777 கோடி ரூபா | 1,117 கோடி ரூபா |
| 1983 | 9,837 கோடி ரூபா | 1,579 கோடி ரூபா |
| 1984 | 12,137 கோடி ரூபா | 2,482 கோடி ரூபா |
| 1985 | 12,339 கோடி ரூபா | 5,716 கோடி ரூபா |
| 1986 | 15,917 கோடி ரூபா | 9,777 கோடி ரூபா |
| 1987 | 14,765 கோடி ரூபா | 11,386 கோடி ரூபா |
| 1988 | 19,563 கோடி ரூபா | 9,373 கோடி ரூபா |
| 1989 | 18,410 கோடி ரூபா | 8,792 கோடி ரூபா |
| 1990 | 23,247 கோடி ரூபா | 14,601 கோடி ரூபா |
| 1991 | | 16,700 கோடி ரூபா |

## சர்வதேச மத்தியஸ்தம்

பிரேமதாசா அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்திய அனுபவத்தின் பின்பு, இனிமேல் பிரேமதாசா அரசாங்கத்துடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் மட்டுமே பேச்சு என்று புலிகள் கூறினார்கள்.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேட்டியளித்தார்.

அப் பேட்டியில் இருந்து சில முக்கியமான பகுதிகள் இவை:

**கே:** இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மாற்றுத் திட்டம் ஒன்றை எதிர்பார்க்கும் விடுதலைப் புலிகள் தாமாகவே ஒரு திட்டத்தை ஏன் முன்வைக்கக்கூடாது?

**பாலா:** இனப்பிரச்சனைத் தீர்வுக்கு தமிழீழம்தான் நாம் முன்வைத்துள்ள திட்டம். அரசு இதனை விரும்பாத பட்சத்தில், மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்தால், நாம் அதனை பரிசீலனை செய்வோம் என்று கூறியுள்ளோம்.

**கே:** நீண்ட காலமாக தீர்க்கப்படாது இருக்கும் மத்திய கிழக்குப் பிரச்சனையின் தீர்வுக்கு தற்போது ஐக்கிய நாடுகள் சபைத் தலையிட்டினால் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஐ.நா. உதவியை ஏன் நாடக்கூடாது?

**பாலா:** ஐ.நா.மாத்திரமல்ல, சர்வதேச மத்தியஸ்தம் எதனையும் நாம் விரும்புகிறோம். ஆனால் இலங்கை அரசுதான் அதனை ஏற்க மறுக்கிறது.

ஒரு அரசாங்கம் விரும்பினால்தான் ஐ.நா.சபை அந்த நாட்டுப் பிரச்சனையில் தலையிடும். எம்மைப் போன்ற அமைப்புகளின் வேண்டுகோளை ஏற்றுத் தலையிடமாட்டாது.

தனிப்பட்ட முறையில் அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகள் எமது பிரச்சனையில் தீர்வுகாண உதவ ஏற்கனவே முன்வந்துள்ளன.

இலங்கை அரசு அதனை விரும்பாத காரணத்தால் அவை கைகூடவில்லை. எமது பிரச்சனை சர்வதேச அரங்குக்குச் செல்வதை அரசாங்கம் விரும்பவில்லை.

**கே:** விடுதலைப்புலிகள் முன்னிலும் பார்க்க இப்போது சமாதானத்தைக கூடுதலாக விரும்புவது போல அவர்களது அறிக்கைகள் மூலம் தெரியவருகிறது. இது அவர்கள் யுத்தத்திற்கு பின் நிற்கிறார்கள் என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

**பாலா:** தற்போது மூன்று இலட்சம் அகதிகள் யாழ் குடாநாட்டில் அடைக்கலம் பெற்றுள்ளனர். அகதிகள் அல்லாதோரும் நீண்ட காலமாகப் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில் அரசு ஒரு பாரிய படையெடுப்பை யாழ் குடாநாட்டில் மேற்கொண்டால், தொடர்ந்தும் மக்களுக்கு கஷ்டமே ஏற்படும்.

இதனை மனதில் கொண்டே போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவந்து, பேச்சு வார்த்தை நடத்துமாறு புலிகள் கோருகின்றனர்." இவ்வாறு தனது பேட்டியில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

## தூதுக்குழு

"காலத்துக்குக்காலம் மதத் தூதுக் குழுக்கள் சமாதானம் பற்றிப் பேசுவதும், வடக்கே சென்று புலிகளைச் சந்திப்பதும் வழக்கம்.

அவர்களது விஜயங்கள் சில நாட்களுக்கு பத்திரிகைகளுக்கு தீனிபோடும். நல்ல அறிகுறி என்றும், சமாதானம் மலரப் போகிறது என்றும் விமர்சனங்களும் எழுதப்படும்.

சில மாதங்களின் பின்னர் எல்லாம் அடங்கிப்போய்விடும். எனினும் அந்தத் தூதுக் குழுவில் சென்று வந்தவர்களுக்கு பிரபலம் கிடைத்துவிடும்.

சமாதானம் என்பது தனியான ஒரு பொருளல்ல. தனியான ஒரு பொருளாக இருந்தால் முயற்சி செய்து பெற்றுவிடலாம்.

இலங்கைத் தீவில் சமாதானம் என்பது இனப் பிரச்சனைக்கு நீதியான தீர்வு கிடைப்பதோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக இருக்கிறது.

அதனால் இங்கு சமாதானத்தை விரும்புகிறவர்கள் இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வைக் காணுமாறு அரசை வலியுறுத்த வேண்டியது முக்கியமாகிறது.

அவ்வாறு வலியுறுத்துகிறவர்களுக்கு தீர்வு எத்தகையதாக இருக்கவேண்டும் என்னும் தெளிவும் இருக்க வேண்டும்.

ஆனால் இன்றுவரை வெறுமனே சமாதானம் பற்றி மட்டுமே பேசுகின்ற மதத் தூதுக்குழுக்களுக்கும், மதகுருமார்கள் மற்றும் சமாதான விரும்பிகளாக தம்மைக் கூறுவோரும் தீர்வு பற்றி வாய்திறப்பதில்லை.

'அதனை அரசும் புலிகளும் பேசித் தீர்க்கட்டும், எமக்கு தேவை சமாதானம் மட்டுமே' என்று கூறி நழுவிப் போகிறார்கள்.

இத்தகைய வெறும் சமாதான முழக்கங்களால் யாது பயனும் இல்லை. எனினும் சமாதானம் பற்றி பேசச் செல்லும் குழுக்களை புலிகளும் சந்திப்பதுண்டு.

அவர்களைச் சந்திக்க மறுத்தால் புலிகள் சமாதானத்தின் எதிரிகள் என்று பிரசாரம் செய்யப்படும் என்பது முதற்காரணம்.

இரண்டாவது காரணமும் இருக்கிறது. தூதுக்குழுக்கள் மூலமாக தமது கருத்துக்களை தென்னிலங்கை மக்களிடம் பிரசாரப்படுத்துவதும் புலிகளது நோக்கம்.

இத்தகைய காரணங்களால்தான் தூதுக் குழுக்களை புலிகள் சந்திக்கிறார்களே தவிர, இக் குழுக்களால் சமாதானம் ஏற்பட மாட்டாது என்பது அவர்களுக்கும் தெரியும்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் எப்போதாவது ஒரு முறைதான் தூதுக்குழுவினரைச் சந்திக்கிறார். புலிகளது அரசியற் பிரிவினர் தான் வழக்கமாகச் சந்திப்பார்கள்.

## ஏமாற்றம்

பிரபாகரன் தனிப்பட்ட விளம்பரம் பெற விரும்பினால் இத்தகைய சந்திப்புக்களில் எல்லாம் தோன்றியிருக்கலாம்.

ஏனைய தமிழ்க் கட்சித் தலைமைகள் உப்புச் சப்பற்ற சந்திப்புக்களில்கூட தாமே நேரில் கலந்து கொள்வதுண்டு.

அந்தப் பழக்க தோசத்தால் பிரபாகரனையும் சந்தித்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டு செல்லும் தூதுக்குழுக்களுக்கு ஏமாற்றமே காத்திருக்கும்.

20.03.92 அன்று கத்தோலிக்க குருமார் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்தது.

இத் தூதுக்குழுவினரைப் புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யோகி, பாலசுப்பிரமணியம் ஆகியோர் சந்தித்து உரையாடினார்கள்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அரசாங்கம் உண்மையாகவே விரும்பினால் அதற்கான காலம் கடந்துவிடவில்லை. இதற்கான முன் முயற்சிகளை எடுக்கும் பொறுப்பு தென்னிலங்கை அரசியற் கட்சிகளையும், அரசாங்கத்தையுமே சார்ந்தது.

புலிகள் சமாதானத்தின் எதிரிகளல்ல. ஆனால் அரசாங்கம்தான் போரை எம்மீது திணித்துள்ளது. எனவே அரசியல் தீர்வை காண்பது மூலம் சமாதானத்தை உருவாக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததே.

எனவே அரசாங்கத்தை தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை ஏற்குமாறு நிர்ப்பந்தியுங்கள். சமாதானத்துக்கான அடிப்படை அதுதான்" என்று புலிகளின் பிரதிநிதிகள் தூதுக்குழுவினரிடம் எடுத்துரைத்தனர்.

தாம் புலிகளது கருத்தை தென்னிலங்கை மக்களுக்கும், பிரேமதாசா அரசாங்கத்துக்கும் தெரிவிப்பதாகக் கூறிவிட்டு தூதுக்குழுவினர் கொழும்பு திரும்பினார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

**ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.**

# மறுபிறவி

சுபா சுந்தரம்

சிறைத்துறை டி.ஐ.ஜி., எஸ்.பி. உட்பட உயரதிகாரிகளின் முகத்தைப் பார்த்தேன் 'காக்கி மனிதர்'களும் கலங்குவார்கள் என்பதை முதன் முதலில் காண முடிந்தது.

"அப்பீலில் நிச்சயம் உங்களுக்கு விடுதலை கிடைக்கும்" என்று ஆறுதல் சொன்னார் சிறைத்துறை அதிகாரி ஒருவர். தீர்ப்பு வெளியானபோது 'சத்யமேவ ஜெயதே' என்று சந்தோஷமாக சொன்னவர்கள் சி.பி.ஐ. அதிகாரிகள் மட்டும்தான்.

விடுதலையாகி வரும் அப்பாவை பார்க்கலாம் என்ற ஆசையுடன் வெளியில் காத்திருக்கும் மகன் தீர்ப்பின் விபரம் கேட்டு எப்படி துடிதுடிப்பானோ, குடும்பத்திற்கு என்ன ஆறுதல் சொல்வானோ என்று நினைத்த போது மனம் கனத்தது. நான் விடுதலையாவேன் என்ற நம்பிக்கையுடன் என் சகோதரர் குமார், காலையிலிருந்தே காத்திருப்பதை நினைக்கையில் என்னையும் அறியாமல் கலங்கினேன்.

நிச்சயமாக நாங்கள் விடுதலையாகிவிடுவோம் என்று சிறைத்துறையினர் நம்பியதால், எங்களுக்கு இரவு உணவுகூட அவர்கள் தயார் செய்யவில்லை.

தாய்வீட்டு சாப்பாட்டை நினைத்திருந்த எங்களுக்கு மீண்டும் 'மாமியார் வீட்டு' சாப்பாடுதான் என்பதை அவர்களாலேயே நம்ப முடியவில்லை.

காலையிலிருந்தே கால் வயிறும் அரை வயிறுமாக இருந்ததால் 26 பேருக்கும் களைப்பு அதிகமாக இருந்தது.

தீர்ப்பின் கனம் வேறு அழுத்திக்கொண்டிருந்தது. விசாரணைக்கைதிகளாக இருந்த நாங்கள் தண்டனை கைதிகளாகி விட்டதால் எங்களை வேறு வேறு சிறைகளுக்கு பிரித்து அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இரவு உணவுக்காக சப்பாத்தி தயாரானது ஆனால் மனசு பாரமாக இருந்ததால் தொண்டைக்குள் உணவு இறங்கவில்லை.

"அப்பீலில் பார்த்துக் கொள்ளலாம், உங்களுக்காக வாதாடியதற்காக எங்களுக்கும் சேர்த்து மரண தண்டனை அளிக்காமல் இருந்தார்களே...." என்றார் வழக்கறிஞர் சந்திரசேகர். வழக்கறிஞர் துரைசாமியால் எதுவும் சொல்ல இயலவில்லை.

எல்லோரையும் அதிர்ச்சியில் உறைய வைத்த அந்த தீர்ப்புக்கு, சட்டங்களைவிட எங்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களே முக்கிய காரணமாக அமைந்திருந்தன என்பதை அறிந்தபோது தண்டனை அறிவிக்கப்பட்ட நொடியைக் காட்டிலும் அதிக அதிர்ச்சிக்குள்ளானோம்.

தூக்கு கயிற்றில் எங்கள் தலையை நாங்களே நுழைத்துக்கொள்ளச் செய்வது போல் திட்டமிட்டே பெறப்பட்டிருந்தன அந்த வாக்குமூலங்கள்.

ராஜீவ்கொலை வழக்கில் பெறப்பட்ட வாக்குமூலங்களில் பெரும்பாலானவை தடா சட்டத்தின் கீழ்தான் பதிவுசெய்யப்பட்டன.

தடா சட்டத்தின்கீழ் வாக்குமூலம் பெறுவதற்கென்று தனி முறை இருக்கிறது. இதற்கென ஒரு எஸ்.பி. நியமிக்கப்பட்டு புலனாய்வு நடைபெறும். விசாரணையின்போது தடா கைதி தருகிற வாக்குமூலத்தை வைத்தே அந்த கைதிக்கு தண்டனை பெற்றுத் தரலாம் என்ற விநோதமான அம்சத்தைக் கொண்டது தடா சட்டம்.

ஆனால் இந்த விதி முறைகள் பற்றியெல்லாம் எங்களுக்கு விளக்கப்படவில்லை.

தடா அரக்கனின் கொடுங்கரம் ஆரம்ப நேரத் தீவிரத்தன்மையோடு பாய்ந்து பிறாண்டிக் கொண்டிருந்ததால் சட்ட வல்லுனர்களே இதனை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் தலையணை அளவு புத்தகங்களை புரட்டிக் கொண்டிருந்தனர்.

தடா சட்டத்தின்படி வாக்குமூலம் பெறுவதற்கு முன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் விபரங்களை கேட்கவேண்டும்.

அதன்பின், "இந்த வாக்கு மூலத்தை வைத்தே உங்களுக்குத் தண்டனை வாங்கித்தர முடியும். அதற்கு நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று கேட்கவேண்டும்.

இதற்கு ஒப்புக்கொள்வதும் ஒப்புக் கொள்ள மறுப்பதும் குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமை என்கிறது தடா சட்டம்.

ஆனால், இது பற்றி, விசாரணை அதிகாரிகள் எங்களிடம் எதுவும் தெரிவிக்க வில்லை. ராஜீவ் கொலை வழக்கில் போலீஸ் சாட்சியமான (PW 58) எஸ்.பி. தியாகராஜன் என்பவர்தான் தடா சட்டத்தின் கீழ் வாக்கு மூலம் பெற்றார். தடா சட்டத்தின் நெறி



முறைப்படி யாரிடமும் வாக்குமூலம் பெறப்பட வில்லை.

விசாரணை அதிகாரிகள் வேறு எந்த முறையில் வாக்குமூலம் வாங்கினர்?

சென்னை கிரீன்வேஸ் சாலையில் (குமார சாமி ராஜா சாலை) செயல்பட்ட சிறப்பு புலனாய்வுக்குழு அலுவலகமான 'மல்லிகை' யின் சுவர்களைக் கேட்டால், கதை கதையாகச் சொல்லும்.

நான் முதன் முதலில் அங்கு அழைத்துச் சென்றபோது கண்ட காட்சி, நெஞ்சத்தை நேர் வகிடில் பிளப்பதுபோல் இருந்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ராபர்ட் பயாஸை கடுமையான முறையில் விசாரித்துக் கொண்டிருந்தனர். பயாஸுக்கு கனத்த உடலமைப்பு. அவரைக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டிருந்தனர்.

கால்களும் கோர்த்துக் கட்டப்பட்டிருந்தன. கண்களும் முகமும் வீங்கியிருந்தன. அந்தக் காட்சியை நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே என்னை மற்றொரு இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

பயாஸ் கட்டப்பட்டிருந்த அறையைக் கடந்தபோது, கடுமையான விசாரணையைத் தாங்க முடியாமல் அவர் அலறியதைக் கேட்க முடிந்தது.

சிறிது நேரத்தில் 'தொம்...' என்ற பெருஞ் சத்தம். சுமை தாங்காமல், பயாஸ் கட்டப்பட்டிருந்த கயிறு அறுந்துவிழுந்தது.

கால்களும் கட்டப்பட்டிருந்ததால் நிலை தடுமாறி குப்புற விழுந்தார் பயாஸ். அவரை மீண்டும் தூக்கி நிறுத்தி... மீண்டும் கயிற்றில் தொங்கவிட்டு விசாரிக்கத் தொடங்கினர் சிறப்பு புலனாய்வுக் குழுவினர்.

இந்த வகை விசாரிப்புகள் மூலம் பெறப்பட்ட வாக்குமூலங்களில் முக்கியமானது சின்ன சாந்தனிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம்.

அவர் ஈழப்போராளி என்பதையும் எழுத்தாற்றல் உள்ளவர் என்பதையும் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். இந்த வழக்கின் திசையை மாற்றக்கூடியதாய் இருந்தது சாந்தனின் வாக்குமூலம்...

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# அலசுவது - இராஜதந்திரி

# முதல் ஆயுதப் போருக்கு வித்திட்ட கல்லோயாக் குடியேற்றம்

**கி**ழக்கு மாகாணத்தில் கல்லோயா அபிவிருத்தித்திட்ட பொன்விழா கடந்த ஆகஸ்ட் 28, 29 ஆகிய தினங்களில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஆளும் தரப்பின் சார்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தையும், ஐ.தே.கட்சி சார்பாக ரணில் விக்கிரம சிங்காவும் கலந்துகொண்டதோடு, இந்த பிரதான கட்சிகளது முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தப் பொன்விழாவானது பௌத்த பேரினவாதத்தின் சுயரூபத்தையும் நன்கு உணர்த்தியிருக்கிறது.

அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் மிகப் பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டமே கல்லோயாவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் பொன்விழாவை பேரினவாதம் பிரமாண்டமாக கொண்டாடியது தொடர்பாக தமிழ்பேசும் மக்களை விழிப்பூட்ட வேண்டிய தமிழ், முஸ்லிம் கட்சிகள் வாயடைத்து நின்றுள்ளன.

பொன்விழா மேடையில் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கும், ரணில் விக்கிரமசிங்காவுக்கும் மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் அஷ்ரப் அமர்ந்திருந்ததையும் காணக்கூடியதாகவிருந்தது.

தமிழ், முஸ்லிம் மக்களது பாரம்பரிய நிலங்களை விழுங்கி ஏப்பமிட்ட வெற்றிவிழாவுக்கு அமைச்சர் அஷ்ரப்பும், அம்பாறை மாவட்ட முஸ்லிம் எம்.பியும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டமையும், அவர்கள் வாயாலேயே புகழ வைத்ததும் பேரினவாதத்தின் புத்திசாதுரியத்தையே காண்பித்துள்ளது.

இன்று நேற்றல்ல கடந்த ஐம்பதாண்டு காலமாக பேரினவாத சக்திகள் மிகவும் புத்திசாலித்தனமாக தமிழ்பேசும் தலைமைகளை ஏமாற்றியே வந்துள்ளனர்.

இலங்கைத் தீவு முழுவதையும் சிங்கள மயமாக்கும் இறுதி இலக்கை எட்டுவதற்கு தமிழ்பேசும் தலைமைகளையும் பங்களிப்பு செய்ய வைக்கும் சாணக்கியத்தை சிங்கள தலைமைகள் கையாண்டே வந்திருக்கின்றன.

அம்பாறையில் கல்லோயா குடியேற்றத் திட்டம் என்பது 1949இல் ஆரம்பமானதாகும்.

சிங்கள, தமிழ் தேசங்களை ஒன்றாக இணைத்து, இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரத்தை சிங்கள ஆளும் வர்க்கத்தின் கைகளில் ஒப்படைத்துவிட்டு சென்றனர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள்.

ஆட்சி அதிகாரம் கைக்கு கிடைத்தவுடனேயே இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக்கும் எண்ணமும், இலக்கும் சிங்கள ஆளும் வர்க்கத்திடம் தோன்றிவிட்டது.

இலங்கைத் தீவின் முதல் பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா நல்லவர், வல்லவர் என்று தமிழ்ப்பாடப் புத்தகங்களிலும் குறிப்பிடப்பட்டதுண்டு.

சிங்கள பேரினவாதத்தை பொறுத்தவரை டி.எஸ். சேனநாயக்கா நல்லவர், வல்லவர், தீர்க்கமான சிந்தனையாளர் என்பதில் ஐயமில்லை.

இலங்கைத்தீவை பௌத்த சிங்கள நாடாக மாற்ற வேண்டுமானால், தமிழ்பேசும் மக்களது தனித்துவத்தை இல்லாதொழிக்க வேண்டும். பின்னர் படிப்படியாக அவர்களை இனமாற்றத்துக்கு உள்ளாக்கி விடலாம் என்பதே சேனநாயக்காவின் தூரப்பார்வையாக இருந்தது.

இந்த தூரநோக்கமான இலட்சியத்தை ஈடேற்றுவதற்கு அவர் கையில் எடுத்த மிக முக்கியமான ஆயுதம்தான் சிங்களக் குடியேற்றத் திட்டமாகும்.

வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமாக பின்வரும் பலன்களை சிங்களத் தலைமைகள் விரும்பி நின்றன.

(1) பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களது பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை சுருக்குதல். அதன்மூலம் சட்ட வாக்கத்தில் பங்குபற்றாது தடுத்தல்.

(2) தமிழ் பேசும் மக்களது தனித்துவத்தை அழித்தல்.

(3) வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையினராக்கி, படிப்படியாக இனமாற்றத்துக்கு உள்ளாக்குதல்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். ஒரு தேசிய இனத்திற்கு நிலம் இருந்தால்தான் பலத்தோடும், தனித்துவத்தோடும் வாழ முடியும்.

இதனை நன்கு உணர்ந்தே தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசங்களை குறிவைத்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு 1949ல் அடிகோலப்பட்டது.

1948ல் ஆட்சி அதிகாரத்தை கைமாற்றிக் கொடுத்தபின்னர், இந்த நாட்டின் அபிவிருத்திக்கு எத்தகைய உதவிகளைச் செய்ய வேண்டும்? என்று பிரிட்டிஷார் அன்றைய பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவிடம் கேட்டனர்.

வரண்ட பிரதேசங்களை வளமுள்ள விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற பிரதேசங்களாக மாற்ற வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஒரு நிபுணர் குழுவை பிரிட்டிஷார் இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தனர். நாடு பூராவும் ஆய்வுகளை மேற்கொண்ட குழுவினர் வட மத்திய மாகாணத்திலுள்ள மின்னேரியாக் குளத்தை புனருத்தானம் செய்வதே பொருத்தமாக இருக்கும் என்று சிபாரிசு செய்தனர்.

ஆனால் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசத்தை குறிவைத்த சேனநாயக்காவுக்கு பிரிட்டிஷ் குழுவின் சிபாரிசு பிடித்தமானதாக அமைந்திருக்கவில்லை.

மின்னேரியா திட்டத்தில் உள்ள நிலம் சிங்கள பிரதேசத்தில்தான் இருந்தது. எனவே அங்கு குடியேற்றத் திட்டங்களை நடத்துவதில் எவ்வித பயனும் இருக்காது என்று டி.எஸ்.சேனநாயக்கா கருதினார்.

இதன் பின்னர் பிரிட்டனில் இருந்து மற்றுமொரு குழுவினர் வந்து சேர்ந்தனர். சேனநாயக்காவின் அபிலாசைகளை புரிந்துகொண்ட அக்குழுவினர் அதற்கேற்பவே ஆய்வு நடத்தினார்கள்.

'பட்டிப்பளை ஆறு' என்ற பெயரில் ஊவா மாகாணத்தின் தென்பகுதிக் குன்றுகளில் இருந்து, ஊற்றெடுத்து வரும் ஒரு சிற்றருவியை மறித்து அணைகட்டி நீரைத்தேக்க முடிவு செய்யப்பட்டது.

இத் திட்டத்துக்கே கல்லோயாத் திட்டம் என்று பெயரிடப்பட்டது.

1950களின் ஆரம்பத்தில் இங்கினியாகலை என்னும் இடத்தில் அணைகட்டப்பட்டது.

பிரிட்டனில் இருந்து பாரிய இயந்திரங்கள் ரயில் மூலம் மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து இங்கினியாகலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

கல்லோயாத் திட்டத்தின் பிரதான நகரமாக அம்பாறை தேர்ந்தெடுக்கப்பட்டது. அம்பாறை அப்போது அழகிய தமிழ்க் கிராமமாக திகழ்ந்தது. அம்பாறை என்பதில் அம்=அழகிய, பாறை=கல் என்று அர்த்தம். அங்கு புராதன பிள்ளையார் கோவில் இன்றுமுள்ளது.

காடுகள் அழிக்கப்பட்டு கழனிகள் உருவாக்கப்பட்டன. கொலனிகள் இலக்கமிடப்பட்டு சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

அன்றைய மட்டக்களப்பு பா.உ. ராசமாணிக்கம் போன்றோர் இதனைக் கண்டித்து குரல் எழுப்பினார்கள்.

இதனால் பிரிட்டிஷ்காரர்களது உதவிகள் தடைப்பட்டுவிடுமோ என்று நினைத்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கும் சில பகுதிகளை ஒதுக்கித்தர முன்வந்தனர்.

மண்டூர், மத்திய முகாம் போன்ற பகுதிகளில் தமிழர்களுக்கு என்று காணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் இது ஒரு கண் துடைப்பு நடவடிக்கையாகவே அமைந்தது.

கல்லோயாவிலிருந்து பாய்ந்துவரும் நீரால் முக்கிய பயனைப் பெறும் பகுதிகளில் சிங்களவர்களே குடியேற்றப்பட்டனர்.

இக்குடியேற்றவாசிகள் அம்பாறையில் உள்ள தமிழ் மக்களை அச்சுறுத்தும் நிலையும் விரைவில் தோன்றியது.

1956ம் ஆண்டு ஜூன் 5ம் திகதி தனிச்சிங்களச் சட்டம் பிரதமர் பண்டாரநாயக்காவினால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அன்றைய தினம் நாடாளுமன்றத்துக்கு எதிரே காலிமுகத் திடலில் தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்தனர்.

இச்சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் பௌத்த மதகுரு ஒருவரது தலைமையில் வந்த குண்டர்களால் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். இரத்தம் சிந்த வைக்கப்பட்டனர். இத் தாக்குதல் நடைபெற்றபோது பிரதமர் பண்டாரநாயக்கா நாடாளுமன்ற மேல்மாடியில் நின்று சுங்கானை புகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தார் என்று தமிழரசுக் கட்சியினர் அப்போது கூறியிருந்தனர்.

சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டதோடு அன்று மாலை கொழும்பு, புறக்கோட்டை, மருதானை போன்ற பகுதிகளில் தமிழர்களதும், முஸ்லிம்களதும் கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டன.

இந்த நடவடிக்கை நாடு முழுவதும் பரவவில்லையாயினும், கல்லோயா பள்ளத்தாக்கில் பரவியிருந்தது. அங்கு குடியேறியிருந்த சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்கினார்கள்.

அம்பாறை நகரில் இருந்த தமிழ் ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் தமிழர்கள் குடியேற்றவாசிகளால் மிரட்டப்பட்டனர். தமிழர்களது கடைகளும் சூறையாடப்பட்டன.

மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலையில் நீலாவணைக் கிராமத்திலிருந்து மேற்கே செல்லும் பாதையின் முடிவில் அமைந்துள்ள கிராமம் துறை நீலாவணை. நீலாவணைச் சந்தியில் நின்று பார்த்தால் இக் கிராமம் நன்கு தெரியும். இருபுறமுள்ள வயல் வெளியை ஊடறுத்தே துறை நீலாவணைப் பாதை செல்கிறது.

> **"தங்களைப் பாதுகாக்க தமிழர்கள் உருவாக்கிய முதலாவது படை"**

துறை நீலாவணைக்கு மேற்கே மட்டக்களப்பு வாவி உள்ளது. அதனைக் கடந்தால் குடியேற்றக் குடியிருப்புக்கள் உள்ளன.

அம்பாறையில் இருந்த அரசவாகனங்களை எடுத்துக்கொண்டு, கத்திகள், வாட்கள், பொல்லுகள், இரும்புக் கம்பிகள் போன்ற ஆயுதங்களோடு சிங்கள குடியேற்றவாசிகள் தாக்குதல் நடத்தப் புறப்பட்டனர்.

வாவியைக் கடந்து சென்று துறைநீலாவணை மக்களைக் கொன்று குவிப்பதே அவர்களது நோக்கமாக விளங்கியது.

வாவியைக் கடந்ததும் மண்டூர் செல்வதற்கான சந்தி இருக்கிறது. அச்சந்தியில் கடை ஒன்று இருந்தது. தமிழர்களை அழிக்கச் செல்லும் காடையர் கூட்டத்தை உபசரிப்பதற்காக பல ஆடுகளை வெட்டி கறிசமைக்க ஏற்பாடுகள் நடந்தன.

இத் தகவல்களை துறைநீலாவணையில் உள்ள தமிழர்கள் அறிந்து கொண்டனர். பொலிசார் தங்களைப் பாதுகாக்கப் போவதில்லை என்பதும் அவர்களுக்கு தெரிந்திருந்தது. எனவே தங்கள் பாதுகாப்புக்கு தாங்களாகவே ஊர்காவற் படை ஒன்றை உடனடியாக அமைத்தார்கள்.

தம்மிடமிருந்த சில துப்பாக்கிகளையும் ரவைகளையும் தயாராக எடுத்துக்கொண்டு வாவியைத் தாண்டி மேற்கு கரையை அடைந்தனர்.

சிங்களக் குடியேற்றவாசிகள் தம்மைத் தேடிவர முன்பாக, தாமே அவர்களை தேடிச் சென்று தாக்குவதற்கே அவர்கள் அங்கு சென்றனர்.

ஆட்டுக்கறி சமைத்து வைத்து, சிங்கள குடியேற்றவாசிகளை எதிர்பார்த்துக் காத்திருந்த சந்திக் கடை சிங்கள முதலாளியை மடக்கிப்பிடித்து, உண்மைகளைக் கக்கவைத்தனர். அதே சந்தியின் மேற்கே இருந்த மற்றொரு சந்தியின் சிங்களக் கடை முதலாளியும், அவரது உதவியாளரும் சுட்டுக் கொல்லப்பட்டதோடு அவர்களது உடல்கள் சந்தியில் போடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சந்தியிலிருந்த அடர்த்தியான மரம் ஒன்றில் ஏறி துப்பாக்கிகளுடன் காத்திருந்தனர்.

அம்பாறையில் இருந்து சிங்களக் குடியேற்றவாசிகள் வந்த அரச வாகனங்களின் ஒளி முதலில் தெரிந்தது. விரைவாக ஒன்றன்பின் ஒன்றாக வாகனங்கள் வந்தன.

முதலில் வந்த வாகனத்தின் முன் விளக்கு ஒளியில் சந்தியில் கிடந்த இரு சடலங்களும் தென்பட்டன. வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நின்றுவிட்டன.

வாகனங்களில் இருந்து சிலர் இறங்கிவந்து சடலங்களைப் பார்த்தனர். அடையாளம் கண்டுகொண்டதும் திகைப்புற்று நின்றனர்.

அப்போது மரங்களில் மறைந்திருந்த ஊர்காவற் படையினர் சரமாரியாக சுடத்தொடங்கினார்கள். துப்பாக்கிக் குண்டுகள், பாய்ந்து வந்தன.

வாகனங்களில் வந்தவர்கள் "தெமல ஆமி எனவா" (தமிழ் இராணுவம் வந்துவிட்டது) என்று கூக்குரலிட்ட வண்ணம் திரும்பி ஓடத் தொடங்கினார்கள்.

அவர்கள் வந்த வாகனங்களில் சிலவற்றை மட்டுமே திருப்பி எடுக்க முடிந்தது. பலவற்றை அங்கேயே கைவிட்டு ஓட்டமாகவே போய்ச் சேர்ந்தனர். இத் தாக்குதல் மட்டும் நடந்திருக்காதுவிட்டால் அன்று இரவே துறை நீலாவணை தமிழ்மக்கள் அம்பாறை குடியேற்றவாசிகளால் கொன்று குவிக்கப்பட்டிருப்பர்.

இத் தாக்குதலின் பின்னர் அரசாங்கமும் படையினரும், பொலிசாரும் நடந்துகொண்ட முறை இன அழிப்புக்கு ஆதரவானதாகவே அமைந்திருந்தது.

தமிழ்க் கிராமத்தை தாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பற்றி கவலைப்படாது, துறை நீலாவணை தமிழ் மக்களை நிராயுதபாணிகளாக்கவே பொலிசார் கவனம் செலுத்தினார்கள்.

துறைநீலாவணைக் கிராமத்தை சுற்றிவளைத்து வீடுவீடாகச் சென்று துப்பாக்கிகள் உள்ளனவா என்று தேடுதல் நடத்தினார்கள்.

இதன்பின்னரும் மற்றுமொரு தாக்குதலுக்கு சிங்களக் குடியேற்றவாசிகள் திட்டமிட்டனர். முதல் சம்பவம் நடைபெற்ற சிலநாட்களின் பின்னர் அதிகாலையில் கல்முனை வீதியிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக வாகனங்கள் வருவதை தமிழ் ஊர்காவற்படையினர் கண்டனர்.

ஊரை அடையும் இடத்தில் இருவீதிகள் பிரிகின்றன. ஒன்று துரையாடிக்கும், மற்றது ஊருக்குள்ளும் செல்கிறது. அந்த வீதிகள் பிரியும் சந்தியை முதல் வாகனம் அண்மித்ததும், ஊர்காவற் படையினரின் துப்பாக்கி வெடித்தது. முதல் வாகனத்தின் முன் கண்ணாடியைத் துளைத்துக்கொண்டு ரவை பாய்ந்தது.



சாரதிக்கும் அவரது அருகே இருந்த இராணுவ அதிகாரிக்கும் இடையே உள்ள இருக்கையில் குண்டு பாய்ந்தது. அந்த வாகனத்தை அப்படியே கைவிட்டு அனைவரும் பின்வாங்கினார்கள்.

இதனால் துறை நீலாவணைத் தமிழர்களை அழித்தொழிக்கும் இரு திட்டங்களும் தோல்வியிலேயே முடிந்திருந்தன.

வண்டிமீது தாக்குதல் நடந்த இடத்தில் அந்த போராட்டத்தின் நினைவாக நினைவுக் கல் ஒன்றை வைத்து அக் கிராம மக்கள் காப்பாற்றி வருகிறார்கள்.

தமிழ்பேசும் மக்களது போராட்டத்தில் முதல் ஆயுதப் போர் என்று இதனை குறிப்பிடுவது தவறாகாது.

தமிழ் பேசும் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்கவே, தவிர்க்க முடியாத நிலையில் ஆயுதம் ஏந்தினர் என்பதற்கு இந்த முதற்போரும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசமான அம்பாறையில் சிங்களக் குடியேற்றம் உருவானதன் பிரதிபலிப்பாகவே தமிழர்களது முதல் ஆயுதப்போர் மூண்டிருந்தது.

தமிழ்பேசும் மக்கள் தங்களையும், தங்கள் பிரதேசங்களையும் பாதுகாப்பதற்கு ஆயுதப் போரின் அவசியத்தை 1956ம் ஆண்டிலேயே சிங்களக் குடியேற்றவாசிகளும், அவர்களுக்கு துணைநின்ற பொலிசாருமே உணர்த்தியிருந்தனர்.

சரியான தலைமைத்துவமோ, வழி நடத்தலோ இல்லாத காரணத்தாலும், இவ்வாறான போராட்டங்கள் வளர்ச்சியுற்றால் தமது பாராளுமன்ற அரசியல் விளையாட்டுக்களுக்கு மதிப்பிருக்காது என்பதால் தமிழ்க்கட்சிகள் இவற்றை ஆதரிக்க முன்வராமையாலும் முதலாவது ஆயுதப்போர் குறுகிய வட்டத்திற்குள் அடங்கிப்போனது.

அம்பாறையில் ஆரம்பமான குடியேற்றம் யாழ் குடாநாடுவரை இன்று நீண்டுள்ளது. யாழ் குடாநாட்டில் குடியேற்றத் திட்டத்தை மேற்கொள்ள ஐ.தே.கட்சி அரசாங்கம் செய்த முயற்சிகள் ஆயுதப் போராட்டம் மேலோங்கியதால் பயன் அளிக்கவில்லை.

யாழ் குடாநாட்டைப் படையினர் கைப்பற்றிய பின்னர் சந்திரிக்கா அரசாங்கத்தினால் அத் திட்டம் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

படைமுகாம் விஸ்தரிப்பு, பாதுகாப்பு என்ற போர்வைகளில் வலிகாமத்தில் தமிழர் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மறுபடி அங்கு தமிழர்கள் சென்று குடியேற முடியாத சூழலை உருவாக்கியுள்ளனர்.

எனவே குடியேற்றத்திட்டம் என்பதும், தமிழ் பேசும் மக்களது நிலங்களை ஆக்கிரமிப்பது என்பதும் டி.எஸ்.சேனநாயக்கா முதல் சந்திரிக்கா குமாரதுங்கா பண்டாரநாயக்கா காலம் வரை கட்டிக்காக்கப்பட்டு வரும் கொள்கையாகும். ■

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

மாணிக்கதாசனின் இறுதிச் சடங்கில் புளொட்டுக்குள் இருந்த உட்பூசல் அம்பலத்துக்கு வந்தது.

புளொட் தலைவர் சித்தார்த்தனுடன் கொழும்பில் இருந்து வவுனியா சென்றவர்களில் பலர் தாசனுக்குப் பிடிக்காதவர்கள். தாசன் உயிரோடு இருந்தவரை அவர்களுக்கும் தாசனுக்கும் பூனை எலி உறவுதான்.

தாசன் பலியானதும் அவர்கள் சித்தார்த்தனுடன் வவுனியாவுக்குப் போய் இறங்கினார்கள்.

தாசன் இருந்திருந்தால் இவர்களை இந்தப் பக்கம் வரவே விட்டிருக்கமாட்டார். தாசன் இல்லையென்றதும் வவுனியா புளொட் நிர்வாகத்தை தமது பிடிக்குள் கொண்டுவரத்தான் ஓடிவந்துள்ளனர் என்று தாசனின் விசுவாசிகள் முடிவு கட்டினார்கள்.

மாணிக்கதாசனின் இடத்திற்கு யாரை நியமிப்பது? என்று நடைபெற்ற கூட்டத்தில் சித்தார்த்தன் அணியை முறைத்தது தாசன் அணி.

சித்தார்த்தனையும், அவருடன் சென்ற சிலரையும் வவுனியாவில் வைத்தே தீர்த்துக்கட்டவும் யோசிக்கப்பட்டிருக்கிறது.

புளொட்டுக்குள் சிலருக்கு தனியாகப் பணம் கொடுத்து தங்களுக்கு தகவல் தருபவர்களாக பயன்படுத்தி வருகிறது சீருடைத்தரப்பு.

புளொட்டுக்குள் என்ன நடக்கிறது என்பதை அடிக்கடி விலாவாரியாக தகவல் கொடுப்பதுதான் இவர்களது வேலை.

அந்த தொடர்பாளர்கள் மூலம் தாசன் அணியினரின் திட்டத்தை அறிந்த சீருடைத்தரப்பு உஷாரானது.

சித்தார்த்தனை உடனடியாக சுற்றி வளைத்து பாதுகாப்புக் கொடுத்ததோடு, கட்டிய சாரத்துடனேயே அவரை வவுனியாவை விட்டு வெளியே கொண்டுவந்து கொழும்பில் சேர்த்துவிட்டனர்.

சீருடைத்தரப்பு மட்டும் தகவல் திரட்டி சித்தார்த்தன் அணியினரை வெளியேற்றி இருக்காதுவிட்டால், தாசனின் இறுதிச் சடங்கு முடிந்த கையோடு அவர்கள்மீது வேட்டுக்கள் பொழியப்பட்டிருக்கும் என்று தகவல்.

தற்போது வவுனியா புளொட் ஹரிபாபுவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. புளொட் உறுப்பினர்கள் சிலர் கொழும்பு வந்து விட்டனர். சிலர் ஒதுங்கியுள்ளனர்.

புளொட்டின் பெயரையோ, புளொட்டின் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எ்.ப்.) பெயரையோ பயன்படுத்த வேண்டாம் என்று சித்தார்த்தன் ஹரிபாபு குழுவினருக்கு உத்தரவிட்டுள்ளாராம்.

ஆனால் ஹரிபாபு குழு சித்தார்த்தன் அணியினருக்கு கட்டுப்படுமா என்பது சந்தேகமே.

மாணிக்கதாசனின் வலதுகரமாக இருந்தவர் ஹரிபாபு. வவுனியாவில் படைத்தரப்பும் ஹரிபாபு குழுவினரை அங்கீகரித்து, தமக்கு அனுசரணையாக செயற்பட வைக்கக்கூடும்.

வவுனியாவில் படையினருக்கு தேவை இன்னொரு தாசன். அதனை ஹரிபாபுதான் நிறைவு செய்யக்கூடியவர்.

மாணிக்கதாசனின் மறைவுக்கு பிரசுரங்கள் வெளியிட்டது முதற்கொண்டு, அஞ்சலி விளம்பரம் கொடுத்தது வரை ஹரிபாபு குழுவினர்தான் செய்தனர். சித்தார்த்தன் அணியினர் தாசனுக்கு போதிய கௌரவம் கொடுக்கவில்லை என்ற குறையும் ஹரிபாபு குழுவினருக்கு இருக்கிறது.

-★-

### தருக்கப்பட்ட கொலைத்திட்டம்

செம்மணி உட்பட ராஜபக்ஷ கூறிய புதைகுழி விபரங்கள்யாவும் உண்மை என்பது உறுதியாகிவிட்டது.

புதைகுழிகள் சிலவற்றில் தடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன என்று ராஜபக்ஷ கூறியிருப்பதும் உண்மையல்ல என்று கருத இடமில்லை.

புதைகுழி விபரங்கள், கொன்று புதைத்த விபரிப்புக்கள் போன்றவற்றைப் பொறுத்தவரை ராஜபக்ஷ இன்னொரு அரிச்சந்திரன்.

பாவச்செயலில் பங்கு கொண்டவர். கிருஷாந்தி விடயத்தில் மிருகமாக செயற்பட்டவர் என்பவற்றை மறக்க முடியாது. ஆனால் இன்று ராஜபக்ஷ செய்யும் வேலை தமிழ் மக்கள்மீதான அடக்குமுறையை உலகம் அறியச் செய்து கொண்டிருக்கிறது என்பதையும் மறக்க முடியாது.

தவிர்க்க முடியாமல், நிர்ப்பந்தங்கள் காரணமாகவே புதைகுழி விசாரணைக்கு அரசாங்கம் உத்தரவிட்டது என்பது நாமறிந்ததே.

ஆனாலும் தாம் நீதியாக நடந்து கொள்வதில் குறியாக இருப்பதாக காண்பிக்கும் அரசாங்கத்தின் பிரசார உத்தி மெச்சத்தக்கது.

நீதிபதி இளஞ்செழியன் பற்றி முன்பே பாராட்டியிருந்தோம். மேலும் பாராட்டத்தக்க விதமாக செயற்பட்டு வருகிறார். நல்லவேளை அவசர நீதிபதியாக நியமிக்கப்பட்ட அருள்சாகரன் நாட்டைவிட்டுப் போய்விட்டார்.

★★★

ஆகஸ்ட் மாதத்தில் பொதி வருகிறது என்றார்கள். வராது என்றது முரசு. இப்போது செப்டம்பர் மாதமும் வந்துவிட்டது. அப்படியானால் எந்த ஆகஸ்ட் மாதத்தை கூறினார்கள்? ●



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

## அதிர் இடி 79

**கடந்தவாரம்**

**தனது மனைவியான மௌனாவை சந்தேகப்பட்டு மோசமாகத் தாக்குகிறான் அமீன். அவளுக்கு மண்டை உடைகிறது. அமீனுக்கு மணிக்கட்டில் முறிவு. பின்னர் மௌனாவுக்கு சிகிச்சை செய்விக்கிறான். இக்காலகட்டத்தில் இன்னொரு பெண்ணைக் கண்டு அவளைத் தனது மனைவியாக்க முடிவு செய்கிறான்.** இனி....

# இடி அமீன்

அமீனது மாளிகையில் இசைக் கச்சேரி ஒன்றுக்கு சியம்பா ஏற்பாடு செய்திருந்தார். பாதுகாப்பு அச்சம் காரணமாக அமீன் வெளியே முன்புபோல நடமாடுவதில்லை. பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதைக் குறைத்திருந்தான்.

அமீனது கார்மீது மோதிவிட்டுச் சென்ற மர்ம வாகனத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அமீனது காரை ஓட்டிய சாரதி இறந்து போனான்.

அன்று காரில் சென்றிருந்தால் தன் உயிரும் காற்றில் கலந்திருக்கும் என்பதை நினைக்கையில் அமீனுக்கு உள்ளூரச் சற்றுக் கிலி பிடித்துவிட்டது.

அவன் சாக விரும்பவில்லை. இராணுவத்தில் சேரும்போது சாவுக்கு அஞ்சாத ஒருவனாகத்தான் இருந்தான்.

மரணத்தை எப்போது வேண்டுமானாலும் தழுவத் தயாரான துணிச்சல் அப்போது நிறையவே இருந்தது.

ஆனால் இப்போது கதையே வேறு. அவனிடம் அதிகாரம் இருந்தது. வசதிகள் இருக்கின்றன. நான்கு மனைவியரை ஆண்டுவிட்டான். எண்ணிப் பார்க்க முடியாதளவுக்கு பெண்களை அனுபவித்திருக்கிறான். பல காதலிகள் இருக்கிறார்கள்.

மேலும் வாழவேண்டும். இன்னமும் இன்பங்களை அள்ளிப் பருகவேண்டும். எல்லையில்லாத இன்பத்தில் திளைக்க வேண்டும். குறைந்தது நூறு வயது வரையாவது வாழவேண்டும் என்று ஆசைப் பட்டான்.

ஆயுளை அதிகரிப்பதற்கு யாராவது வழி சொன்னால் தன் சொத்தில் பாதியை எழுதிக்கொடுக்கவும் அமீன் தயாராக இருந்தான்.

அதிகார ருசியும், வசதி வாய்ப்புக்களும் அனுபவிக்கும் எவரும் அவற்றை இழக்கவும் விரும்புவதில்லை. தாங்கள் இறப்பதற்கும் விரும்புவதில்லை.

அமீனும் அதற்கு விதிவிலக்கல்ல. தனது பாதுகாப்பு முன்னிட்டு அவனாகவே வெளியே செல்வதைக் குறைத்துக் கொண்டான்.

மாளிகைக்குள்ளேயே அடைந்து கிடக்கும் அமீனுக்கும், மாளிகையில் அமீனின் பாதுகாப்புக்காக இருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினருக்கும் ஒரு மாறுதலாக இருக்கட்டும் என்றுதான் இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார் சியம்பா.

அப்போது பிரபலமாக இருந்த இசைக்குழுவின் பெயர் விசித்திரமானது. சூசயிட் (தற்கொலை) என்பது அந்த இசைக்குழுவின் பெயர்.

இசைக் கச்சேரியை தனது பிள்ளைகள் புடைசூழ அமர்ந்து இரசித்துக் கொண்டிருந்தான் அமீன். பிள்ளைகளில் பலர் அவனையே உரித்து வைத்தது போல தெரிந்தார்கள்.

மேடையில் திடீரென்று மின்னல் வெட்டியது போலத் தோன்றினாள் ஓர் இளம் பெண்.

ஐஸ்கிரீம் உருகுவது போல அவள் குரல் உருகி வழிந்தது. இசைக் கருவிகள் அவள் குரலின் முன்பாக மண்டியிட்டு நின்றன.

அவள் பாடியபடியே தன் உடலை அசைத்தபோது, கனிமரம் ஒன்று குலுங்குவது போலிருந்தது.

உருவிவிட்டதுபோல ஒரு உடல்வாகு. மதுக்குடம் ஒன்றுக்கு கால் முளைத்து விட்டதா? அந்த மதுக்குடம் மேடையில் உருண்டு மதுவைச் சிந்துகிறதா?

பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் திறந்த வாய் மூடாமல் அந்த இளம் பெண்ணை தம் கண்களால் மேய்ந்து கொண்டிருந்தனர்.

அவள் சுழன்றபோது பின்புற அழகுகளின் திரட்சி கண்களுக்குள்ளாக போதை ஏற்றியது.

பாதுகாப்புக் படையினர் நிலையே இது என்றால், விதம் விதமாக பெண்களை பதம் பார்த்த அமீனின் நிலை எப்படியிருக்கும்!

அவனால் கண் இமைக்கக்கூட முடியவில்லை. யார் இவள்? என்ற வியப்பு முதலில் தோன்றியது.

மறுநொடியே "இவளும் என் மனைவி!" என்று மனதுக்குள் அழுத்தமாகக் குறித்துக்கொண்டான்.

அவளை உடனடியாகத் தொட்டுப் பார்க்க வேண்டும்போல அமீனுக்குள் குறுகுறுப்பு. 'இந்த மதுக்குடம் இனி எனக்கே சொந்தம்!' என்று பிரகடனம் செய்துவிட வேண்டும் போன்று அவன் மனம் அந்தரித்தது.

தன் மனைவியாக அவளைக் குறித்த பின்னர், பலபேர் முன்பாக அவள் தொடர்ந்து பாடுவதையும், ஆடுவதையும், அவள் அழகைத் தனது படையினர் பருகுவதையும் அமீனால் சகிக்க முடியவில்லை.

சியம்பாவை உடனடியாக அழைத்து, **"இத்தோடு இசை நிகழ்ச்சியை நிறுத்த வேண்டும். அல்லது அந்த சிங்காரி பாடுவதையாவது உடன் நிறுத்தும். இனி அவள் பாடவும் கூடாது. ஆடவும் கூடாது!"** என்று கூறினான்.

சியம்பாவுக்கு கற்பூர மூளை. சட்டென்று அமீனின் நோக்கத்தைப் புரிந்துகொண்டார்.

இசைக்குழுவிடம் சென்று அந்தப் பெண்ணை மட்டும் தொடர்ந்து பாட அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

அவள் பெயர் சாரா கியோலாபா. அப்போதுதான் 18 வயதுக்குள் காலடி எடுத்து வைத்திருந்தாள். வயதுக்கு ஏற்ற வளமான உடம்பு. அருகில் பார்க்கும்போது சியம்பாவுக்கே போதை தலைக்கேறியது. அவள் உதடுகள் எப்போதுமே ஈரமாக இருந்தன. அமீனுக்கு இப்படியான உதடுகள் உள்ள பெண்களைக் கண்டால் தனிப்பிரியம் ஏற்பட்டு விடும் என்பதும் சியம்பாவுக்குத் தெரியும்.

"ஏன் என்னைப் பாடவேண்டாம் என்று கூறுகிறீர்கள்?" என்று கேட்டாள் சாரா.

அமீனின் கண்பட்டுவிட்டதால் இனி அந்த இளம் பெண்ணின் வாழ்க்கை புயலில் அகப்பட்ட கப்பலின் கதியாகிவிடும் என்று தெரிந்ததால், அவள்மீது சியம்பாவுக்கு அனுதாபமும் ஏற்பட்டது.

அந்த அனுதாபத்துடனேயே கூறினார்: "அதிபரின் உத்தரவு!"

சாரா சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. சட்டென்று கேட்டாள், "அதிபரை நான் பார்க்க முடியுமா?"

அவள் அப்படிக் கேட்டதும் சியம்பாவுக்கு சிரிப்பதா அழுவதா தெரியவில்லை. 'விட்டில் பூச்சி விளக்கைத் தேடி வலியச் செல்கிறது. அழகான மான்குட்டி இரைதேடும் புலியைத் தேடித் தானாகச் செல்கிறது. விதியை மாற்ற யாரால் முடியும்!' என்று மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

'முட்டாள் பெண்ணே! உன்னை நீயே அழிக்கப் போகிறாயா? பலிக்களம் தேடி பலியாடாக போகப்போகிறாயா?' என்று எச்சரித்து அவளை துரத்திவிடலாமா எனவும் யோசித்தார் சியம்பா.

ஆனால் அது 'தனக்கிடா உத்தியோகம் தன் பிடரிக்கு சேதம்' என்பதாய் முடிந்து போகும் என்றும் பயந்தார்.



அமீன் சாராமீது குறிவைத்து விட்டதால், இசை நிகழ்ச்சி முடிவதற்கு முன்னர் அவளைத் தன்னிடம் அழைக்க ஏற்பாடு செய்தே தீருவான்.

இங்கிருந்து அவள் தப்பிச் சென்றாலும் எப்படியாவது பிடித்து விடுவான். சியம்பாதான் தப்பவைத்தார் என்று அவள் கூறிவிட்டால் தன் தலை தரையில் உருளும் என்பதை நினைத்ததுமே தன் முடிவை மாற்றிக்கொண்டார்.

அவளை அமீனிடம் அழைத்துச் சென்றார் சியம்பா. அவ்வாறு அழைத்துச் செல்லும்போது பாதுகாப்பு படையினர் இருந்த பகுதியைத் தாண்டியே செல்லவேண்டியிருந்தது.

அவளைக் கண்களாலேயே அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சியம்பாவுக்கும் மதிப்புக் கொடுக்காமல், அவளது பின்புறம் பற்றிக் கெட்டதனமாக கேலி செய்தார்கள். சியம்பாவுக்கு கோபம் வந்தபோதும், அதைக் கொட்டவா முடியும்? பொத்தி வைத்துக் கொண்டார்.

## தருவது ரசிகன்

சியம்பாவும், சாராவும் வருவதைக் கண்டதும் அமீனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்துவிட்டது போன்ற சந்தோசம்.

அவள் அமீனுக்கு எதிரே நின்று தலை குனிந்து வணங்கினாள். முன்பக்கமாக உடலையும் வளைத்ததால் கழுத்துக்குக்கீழே செழிப்பின் விளிம்புகளை அமீனின் கழுகுக் கண்கள் கொத்தி இரசித்தன.

அவள் ஆழமாக கழுத்து வெட்டப்பட்ட சட்டை அணிந்திருந்தாள். அவள் வளைந்தபோது அமீனுக்குள் ஏக்கம் விளைந்ததும் அதனால்தான்.

அமீன் அத்தனைபேர் முன்பாகவும் செய்த காரியம் சியம்பாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சியம்பாவுக்கு மட்டுமல்ல அங்கு இசைக் கச்சேரியை இரசித்துக் கொண்டிருந்த படையினரும் அக் காட்சியைக் காணத்தவறவில்லை.

அவர்களும் அறியவேண்டும் என்பதற்காகவே அமீன் அந்தக் காரியத்தைச் செய்தான்.

தன் அருகே இருந்த நாற்காலியில் அவளை அமருமாறு கூறினான். அவள் தயங்கவே அவள் கையைப் பிடித்து இழுத்து நாற்காலியில் தள்ளினான். அவள் அமர்ந்து கொண்டாள்.

'இவள் இனி என் உடமை' என்று பிரகடனம் செய்ததற்கு ஒப்பானதே அமீன் அவளைத் தன்னருகே அமர்த்திய செயல்.

அதனைச் செய்யத் தவறினால் தனது பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எவனாவது ஒருவன் அவளைக் கொத்திக்கொண்டு போய் விடலாம் என்று அமீன் நினைத்தான்.

அமீனின் அருகே சாரா அமர்ந்ததை இசைக்குழுவில் இருந்த ஒரு ஜோடிக் கண்கள் கூர்ந்து நோக்கின.

அந்தக் கண்களில் சந்தேகம் இருந்தது. பொறாமை இருந்தது. கோபம் இருந்தது.

அந்தக் கண்களுக்கு உரியவன் சாராவின் காதலன். அந்த இசைக்குழுவில் வாத்தியக் கருவி ஒன்றை இசைப்பவன்.

சாராவும் அவனும் காதலர்கள். சாதாரண காதலர்களல்ல. முற்றும் துறந்த காதலர்கள். ஒருவரை ஒருவர் முற்றும் உணர்ந்த காதலர்கள்.

முற்றும் உணர்ந்தபோது முன்னெச்சரிக்கை இல்லாமல் போனதால் சாரா கர்ப்பமானாள். ஒரு மாதக் கரு அவள் வயிற்றில் இருந்தது.

விரைவில் திருமணம் செய்ய இருந்ததால் கருவைக் கலைக்கவில்லை.

இசைக்கச்சேரி முடிவடைய முன்னரே அமீன் எழுந்து கொண்டான். சாராவிடம் **"என்னோடு வா, உன்னோடு தனியாகப் பேச வேண்டும்!"** என்று கூறினான்.

சாராவுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. அமீனை நேரில் பார்த்து, தன் பாடலை நிறுத்துமாறு கூறியது ஏன்? என்பதை அறியவே விரும்பினாள்.

அந்த விருப்பம் இப்படிக் கொண்டு வந்து வம்பில் மாட்டும் என்பது தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டாள்.

அவள் பதிலுக்குக் காத்திருக்காது அமீன் மலைபோல எழுந்து, பூட்ஸ் சப்தம் கேட்க நடந்து சென்றான்.

ஒரு பொம்மையைப் போல அவளும் அமீனின் பின்னாலேயே சென்றாள். பாதுகாவலர்கள் இருவரும் பின் தொடர்ந்து சென்றனர்.

அமீனின் பிரத்தியேக அறைவந்ததும், வாயிலோடு காவலர்கள் நின்றுகொள்ள, சாராவும் தயங்கி நிற்க, அமீன் திரும்பி "நீ உள்ளே வா!" என்றான். பலியாட்டை அழைப்பது போலிருந்தது.

உள்ளே பிரமாண்டமான அறை. பிரமாண்டமான கட்டில். பிரமாண்டமான சிருங்கார ஓவியங்கள்.

அறையை அலங்கரிக்கும் சிருங்கார ஓவியங்களை இந்தியாவில் இருந்து விசேஷமாக தருவித்திருந்தான் அமீன்.

அந்த ஓவியங்களில் விதம் விதமான சிற்றின்பக் காட்சிகள் இருந்தன. அந்த அறையின் சூழ்நிலையைப் பார்த்ததுமே சாராவுக்கு அமீன் தன்னை அழைத்த காரணம் தெரிந்து விட்டது.

அமீனிடமிருந்து எவ்வித சுற்றிவளைப்பும் இல்லாமல் நேரடியாகவே வார்த்தைகள் வந்து விழுந்தன.

**"உன் பெயர் என்ன சொன்னாய்?"**

"சாரா கியோலாபா" என்றாள். குரல் பிசிறடித்தது.

அமீன் சட்டென்று: **"சாரா உன்னை என் மனைவியாக்க முடிவு செய்திருக்கிறேன். மறுக்காதே என்ன?"**

சாராவுக்கு அமீன் தமாஷ் பண்ணுகிறானா, உண்மையாகவே கூறுகிறானா என்று தெரியாததால், அவனது முகத்தை ஏறிட்டாள். அமீன் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான். முகத்தில் தீவிரம் இருந்தது.

சாராவுக்கு பதில் சொல்வதற்கு இடையே நா வறண்டு போய்விட்டது.

திக்கித் திக்கி, தட்டுத் தடுமாறியபடி:

துணிவையெல்லாம் திரட்டி சாரா உண்மையைக் கூறினாள்.

அடுத்து நிகழ்ந்தது விபரீதம்.

(இடி தொடரும்)

# விஜய் தற்கொலை முயற்சியா?

நடிகர் விஜய்-சங்கீதா திருமணச் செய்தி பழையதாகிவிட்டது. புதிய செய்தி ஒன்று சென்னையைக் கலக்கிவிட்டது.

விஜய் மனைவியுடன் தகராறு ஏற்பட்டு தற்கொலை செய்துகொண்டார். அவரது உடல் அப்போலா மருத்துவமனையில் இருக்கிறது என்று செப்டம்பர் முதலாம் திகதி செய்தி பரவியது.

வைரத்தை அரைத்துக் குடித்துவிட்டு விஜய் இறந்து போனதாகவும், கலவரம் ஏற்படும் என்பதால் உடலை இரகசியமாக மருத்துவமனையில் வைத்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகின.

இத்தகவல்கள் சென்னையில் பரவிக் கொண்டிருக்கையில் விஜய் தன் மனைவியுடன் மொரிஷியஸ் தீவில் தேனிலவை கொண்டாடிக் கொண்டிருந்தார்.

வதந்தியை உண்மை என்று நம்பிய வட சென்னை விஜய் ரசிகர்கள் அப்பகுதியில் உள்ள கடைகளைத் தாக்கி கடையடைப்பு செய்ய வைத்தனர்.

விஜய் வீட்டுக்கு ஃபோன் மேல ஃபோன். "விஜய்க்கு என்னாச்சு?" என்று பெண் ரசிகைகள் அழுதபடி கேட்க, விஜய்யின் அம்மா ஷோபாவும் இப்படி வதந்தி பரப்புகிறார்களே என்று அழுது புலம்ப ஆரம்பித்து விட்டார்.

இதனால் தன் மகனுடன் தொடர்பு கொண்ட சந்திரசேகர் மகனையும், மருமகளையும் உடனடியாக சென்னை வருமாறு அழைத்துவிட்டார்.

08.09.99 அன்று தேனிலவை பாதியில் முடித்துவிட்டு சென்னை வந்தனர் புதுத் தம்பதி. விமான நிலையத்திலேயே வரவேற்பு கொடுத்து, அதனை பத்திரிகைகளில் இடம்பெறச் செய்து வதந்திக்கு புத்திசாலித்தனமாக முற்றுப்புள்ளி வைத்தார் சந்திரசேகர்.



விஜய்-சங்கீதா

இதுபற்றி பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய விஜய், "அந்த வதந்தியைக் கேட்டதும் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. என் திருமணத்திற்கு முன்பிருந்தே என்மீது வதந்தி பரப்பி வருகின்றனர்." என்று கூறியிருக்கிறார்.

இந்த வதந்தி பரவுவதற்கு சில வாரங்களுக்கு முன்புதான் இன்னொரு வதந்தி பரவியிருந்தது.

'காதலர் தினம்' படத்தின் நாயகன் குணால் விபத்து ஒன்றில் இறந்துவிட்டதாக அந்த வதந்தி கூறியது.

'காதலர் தினம்' படத்தை வெற்றிகரமாக ஓடவைக்க படத்தின் தயாரிப்பாளரே ஆட்களை வைத்து வதந்தி பரப்பியதாக கூறப்பட்டது.

அதேபோல 'மின்சாரக் கண்ணா' படம் பரபரப்பாக போகவேண்டும் என்று யாராவது வதந்தி பரப்பியிருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்திருக்கிறது.

'தொழிலில் போட்டி இருக்கலாம். இப்படி மனுசத்தன்மை இல்லாமல் கதை பரப்பலாமா?' என்று நொந்து கொள்கிறார் விஜய்யின் அப்பா சந்திரசேகர்.

# ஆண் குழந்தைகள்

ஜெர்மனியில் உள்ள மியுன்ஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லெர்ச்சி என்னும் மருத்துவத்துறை ஆராய்ச்சியாளர் புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இனிமேல் சில வருடங்களுக்கு ஆண் குழந்தைகள்தான் அதிகம் பிறப்பார்கள் என்று கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார்.

இதற்காக 1946 முதல் 1995 வரை பிறந்த குழந்தைகளது திகதிகளையும், ஆண் பெண் இருபாலாரையும் எந்தெந்தக் காரணங்களால், எந்தெந்தக் குழந்தைகள் பிறக்கின்றன என்கிற ஆதாரங்களையெல்லாம் அலசி ஆராய்ந்துள்ளார்.

உலகின் தட்ப வெப்பச் சூழலில் உஷ்ணம் அதிகரிக்கும்போது ஆண் குழந்தைகளே அதிகம் பிறக்கிறார்கள் என்னும் முடிவுக்கு வந்திருக்கிறார்.

தற்போது உலகின் சீதோஷ்ணத்தில் வெப்பம் அதிகரித்து வருகிறதாம். ஆகவே இன்னும் கொஞ்சக் காலத்திற்கு ஆண் குழந்தைகளது பிறப்பு வீதம் அதிகமாக இருக்கும் என்கிறார் லெர்ச்சி.

# இன்டர்நெட் அழைப்பு



உலகின் கலர்க்கனவு நகரமான ஹொலிவூட்டில் வசிக்கும் ஒரு இளம்பெண்ணுக்கு ஏற்பட்ட அனுபவம் சங்கடமானது.

அந்தப் பெண்ணைத் தேடிவந்தார் ஒரு ஆசாமி. என்னவென்று கேட்டதற்கு, "நீதானே வரச் சொன்னாய்" என்று கேட்டாராம். அவரை தர்ம அடி கொடுக்காத குறையாக விரட்டினார் அந்த இளம்பெண்.

சில தினங்கள் சென்றபின்னர் இன்னொரு நபர் தேடி வந்தார். இப்படியாக தொடர்ச்சியாக பலர் தேடிவந்தபோது அந்தப் பெண் பொலிசில் புகார் செய்தாள்.

பொலிஸார் தீவிரமாக விசாரித்தபோது உண்மை தெரிந்தது. அந்த இளம் பெண்ணை ஒருவன் காதலித்தான். இவள் அவன் காதலை ஏற்கவில்லை.

அதனால் அப்பெண்ணை பழிவாங்க நினைத்து, இன்டர் நெட் மூலம் அந்தப் பெண்ணின் பெயர், முகவரி எல்லாம் கொடுத்து, 'என்னுடன் உறவாட ஆசையாக இருந்தால் வாருங்கள்' என்று அழைப்பு விடுப்பதாக செய்தி போட்டானாம்.

ஸ்டீவன் என்னும் அந்த நபரைப் பிடித்து பொலிஸ் வழக்குத் தொடுத்தது. இப்போது ஆசாமிக்கு ஆறு ஆண்டு சிறைத்தண்டனை கிடைத்துள்ளது.

# படை கலக்கம்

ஏமன் நாட்டின் இராணுவ கூடாரம் ஒன்றில் இராணுவ வீரர்கள் எல்லாரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த நள்ளிரவு நேரம் திடீரென்று தபதபவென்று கூடாரத்திற்குள் யாரோ புகுந்து விட்டது தெரிய... எதிரிப்படைகள்தான் புகுந்து விட்டதோ என்று திடுக்கிட்டு எழுந்த இராணுவ வீரர்கள் படுக்கைக்குப் பக்கத்திலேயே தயாராக வைத்திருந்த துப்பாக்கிகளை எடுத்துப் படபடவென்று நாலா திசைகளிலும் சுட ஆரம்பித்துவிட்டனர்.

சற்று நேரத்திற்கு ஒரே களேபரம். யாரோ ஒரு இராணுவ வீரருக்கு வேறென்னவோ வித்தியாசமாகத் தெரிய வர சுடுவதை நிறுத்தச் சொல்லி உத்தரவு போட்டார். பிறகுதான் தெரிந்தது தங்கள் கூடாரத்திற்குள் நுழைந்தது எதிரிப்படையல்ல. ஒரு ஒட்டகம் என்பது.

வழி தவறி வந்துவிட்ட ஒட்டகம் எப்படியோ கூடாரத்திற்குள் நுழைந்து எல்லாரையும் கண்மண் தெரியாமல் மிதித்து விட்டதுதான் இத்தனை ரகளைக்கும் காரணம். பல இராணுவ வீரர்கள் மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்து காயங்கள் ஏற்பட்டுவிட... அந்த ஒட்டகம் அமைதியாக அங்கிருந்து கிளம்பிச் சென்றது.

# இன்னொரு இந்திரா



சோனியா காந்தியைவிட பிரியங்காவுக்கு இந்திய மக்களிடம் பலத்த வரவேற்பு இருக்கிறது.

என்றாவது ஒருநாள் இந்தியாவின் பிரதமராக பிரியங்கா வருவார் என்பது உறுதி. அதற்கான அறிகுறி இப்போதே தெரிகிறது.

ஸ்டார் தொலைக்காட்சி நடத்திய கருத்துக் கணிப்பில் பிரியங்கா அரசியலுக்கு வரவேண்டும் என்று 50 வீதமானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

சோனியாவுக்கு இல்லாத வரவேற்பு பிரியங்காவுக்கு கிடைத்திருப்பதற்கு அவரது தோற்றமும் ஒரு காரணம்.

தன் பாட்டியான இந்திரா காந்தியை அப்படியே பிரதிபலிக்கும் தோற்றம் கொண்டவர் பிரியங்கா.

பெல்லாரித் தொகுதியில் பிரியங்காவின் பிரசாரம்தான் சோனியாவை காப்பாற்றியுள்ளது.

முரசின் இந்திய நிருபரது கணிப்பின்படி பெல்லாரியில் கடும் போட்டி இருந்தாலும், சோனியா வெல்வது உறுதியாம். அவ்வாறு வெற்றி பெற்றால் அந்த வெற்றிக்கு காரணம் சோனியா அல்ல, பிரியங்காதான்.



படிப்பகம்

www.padippakam.com



## காதல்

↑ இந்தப் படத்தில் உள்ள சங்கதியை விளக்க வேண்டிய தேவை இல்லை. இக் காட்சியை புகைப்படம் எடுக்க பின்னால் ஒருவர் நிற்கப்போகிறார் என்பது இவர்களுக்கு தெரியாதாக்கும். பாவம் அந்த அப்பாவிக் காதலன். செமர்த்தியாக ஏமாறுகிறான் அல்லவா!

## குளியல்



↘ குளிர் சாதனப் பெட்டிக்குள் குந்திமிருப்பது போலத் தெரிகிறதா?! இல்லை ஐயா, இது ஒரு மருத்துவ முறை. தமிழ்நாடு சென்னையில் அரும்பாக்கம் பகுதியில் சென்னை அரசினர் இந்திய மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவ மனையில் இயற்கை வைத்திய முறையிலும் சிகிச்சை தரப்படுகிறது. படத்தில் உள்ளது நீராவிக்குளியல்.

தோல் நோய் உள்ளவர்களை இதுபோன்ற பெட்டிக்குள் இருக்கவைத்து 42 டிகிரி சென்டிகிரேட் வெப்பநிலையைக் கொண்டு சிகிச்சை தருகிறார்கள்.

உடம்பில் உள்ள நச்சுக்கள் வியர்வை மூலம் வெளியேற்றப் படுகின்றன. இந்த சிகிச்சை பிரபலமானதால் தோல் நோயாளர்கள் உட்பட ஏராளமான நோயாளர்கள் இயற்கை வைத்தியம் தேடி இந்த மருத்துவமனைக்கு படையப்பா, படையம்மாக்களாக படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

## தகவல் பெட்டி

## மொத்த உருப்படி 25


↓ உலக சாதனைகள் பலரகம். அதில் இது ஒரு ரகம். மிகச் சிறிய காருக்குள் அதிகமானவர்களை திணித்து உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நியூயோர்க் நகரில் இச் சாதனை நிகழ்ந்தது. மொத்தம் 25 பேர் அமர்ந்து சாதனை படைத்தனர். இதற்கு முன்பு 1967ல் சிறிய காருக்குள் 24 பேர் அமர்ந்ததுதான் உலக சாதனையாக பதியப்பட்டிருந்தது.

அந்தச் சாதனையை இவர்கள் உடைத்து விட்டார்கள். நல்ல வேளை கார் உடையவில்லை.

## சாதனைக்கு தயார்

→ மாபெரும் சாதனை ஒன்றுக்காக இவர் தயாராகிக்கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் சென்னை லயோலா கல்லூரி மாணவரான வள்ளியப்பன் 30 ஆயிரம் மதுக் கோப்பைகளை கோபுரமாக அடுக்கி உலக சாதனை செய்யப் பயிற்சி எடுத்துவருகிறார்.

30 ஆயிரம் மதுக்கோப்பைகளையும் கோபுர வடிவில் அடுக்கிவிட்டு, மேல் உள்ள ஒரு கோப்பையில் 6 ஆயிரம் லீட்டர் சாம்பைன் பானத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்ற வேண்டும். அது 30 ஆயிரம் கோப்பைகளிலும் வழிந்து நிரம்பவேண்டும்.



↑ ஏற்கனவே 23 ஆயிரத்தி 642 மதுக்கோப்பைகளை அடுக்கி சாம்பைன் ஊற்றும் உலக சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. 1993 ஜூலை 19 முதல் 23 வரை ஐந்து நாட்களில் அச்சாதனையை பேட்ரிக் கோர்டின் என்பவர் செய்திருந்தார்.

அதனை முறியடிக்கவே இந்த சாதனை. இதற்கான செலவு எவ்வளவு தெரியுமா? ஒரு கோடி ரூபாய். எதிர்வரும் டிசம்பர் மாதம் இந்த உலக சாதனை நிகழ்த்தப்பட உள்ளது. ●



## கவர்ச்சிக் கார்

↓ அங்கங்கள் தெரிய ஆடை அணியும் நாகரிகத்திற்கு போட்டியாக வந்துள்ள கார் இது. இந்தக் காரின் உறுப்புக்களான இன்ஜின் போன்றவை வெளியே தெரிந்து கொண்டிருக்கும்.



எஸ். 2000 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஹோண்டா கார் விளையாட்டுப் பந்தயங்களுக்காகத் தயாராகியுள்ளது. சாதாரணக் காராகவும் பாவிக்கலாம்.

சுற்றுப் புறச் சூழலை பாதிக்காத விதமாக காரில் இருந்து வெளியாகும் புகை போன்றவற்றை கட்டுப்படுத்தும் வசதியும் இருக்கிறதாம்.

## வெளியீடு 4

→ பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி பெற்ற தாய்க்கு பெருமை சேர்ப்பார்கள். இந்தத் தாய்க்கு பிள்ளைகள் பிறந்த சூட்டோடு சூடாகவே பிரபலம் கிடைத்துவிட்டது.

ஒரே பிரசவத்தில் நாலு குழந்தைகளை ஈன்றெடுத்துத்தான் இவர் பிரபலமானார்.

ஈராக்கில் பாக்தாத் மருத்துவமனையில்தான் ஒரே சூலில் நான்கு குழந்தைகளை ஈன்றுள்ளார் இந்தப் பெண்மணி. பெற்றாள். பிரபலமும் பெற்றாள்.




படிப்பகம்

www.padippakam.com

- நாசர் அடுத்து இயக்கும் 'மாயன்' படத்தில் பிரசாந்தை நடிக்க வைக்க திட்டமிட்டிருந்தார். இப்போது அப்படத்தில் பிரசாந்திற்குப் பதிலாக அஜித்குமார் எனத் தெரிகிறது.
- தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழிமாற்றப்பட்டு வரும் 'காதலே சாட்சி' படத்தில் கதாநாயகியாக நடித்துள்ள சாந்தினி 'ஆசையில் ஓர்கடிதம்' படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்து வருகிறார்.
- 'நீ வருவாய் என..' வெற்றிப் படத்தை இயக்கிய ராஜகுமாரன், அடுத்து இயக்கும் படத்திற்கு 'தேவதை வந்து விட்டாள்' என்று பெயர் வைத்துள்ளார்.
- 'காதலே நிம்மதி' படத்தில் நாயகியாக நடித்தவர் ஜீவிதா சர்மா. இவர் அண்மையில் இந்தியில் இருந்து தமிழுக்கு வந்திருக்கும் 'தாளம்' படத்தில் ஐஸ்வர்யா ராயின் தோழியாக நடித்துள்ளார்.
- முரளிக்கு ஜோடியாக நடித்துள்ள தேவயாணி 'கண்ணுக்கு கண்ணாக' படத்தில், முரளிக்குத் தங்கையாக நடிக்கிறார். முரளிக்கு ஜோடியாக 'சங்கமம்' விந்தியா நடிக்கிறார்.
- மம்முட்டி-நெப்போலியன் இணைந்து நடித்த 'எதிரும் புதிரும்' தெலுங்கில் 'வீரண்ணா' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெளியாகப் போகிறது.
- 'வாலி' படத்தை இயக்கிய சூர்யா அடுத்து இயக்கும் படத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார். இதில் விஜய்க்கு ஜோடியாக முதன்முறையாக ஜோதிகா நடிக்கவுள்ளார்.
- 'பாரதி கண்ணம்மா' படத்தில் ஜோடியாக நடித்த பார்த்திபன்-மீனா மறுபடி இருவரும் இணைந்து நடிக்கும் படம் 'உன்னருகே நானிருந்தால்'. இதில் பார்த்திபன் வில்லத்தனமான நாயகனாக நடிக்கிறார்.
- 'இனியெல்லாம் சுகமே' படத்தில் இரண்டு நாயகிகளில் ஒருவராக நடித்த லக்ஷி, கன்னடத்தில் சவீதா என்ற பெயரிலும் மலையாளத்தில் சுருதிராஜ் என்ற பெயரிலும் நடித்து வருகிறார்.
- அப்பாஸ்-சிம்ரான் ஜோடியாக நடித்த 'பூச்சூடவா' படத்தை இயக்கிய உதயசங்கர் தற்போது வெங்கடேஷ் நடிக்கும் தெலுங்குப் படமொன்றை இயக்கி வருகிறார்.

## மினி சினி

## திருமண முன்னோட்டம்

'வாலி' பட நூறாவது நாள் விழா அமர்க்களமாக நடந்தது. அஜித் நடித்த 'அமர்க்களம்' படமும் அமர்க்களமாக ஓடுகிறது.

'வாலி' பட விழாவை தனது திருமண முன்னோட்ட விழாவாக நடத்தினார் அஜித். அஜித்தின் வருங்கால மனைவி ஷாலினிதான் அஜித்துக்கு கேடயம் வழங்கினார்.

அஜித்தின் அம்மா, அப்பா, ஷாலினியின் அம்மா, அப்பா ஆகியோரும் அஜித் ஷாலினியுடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர். 'வாலி' படம் தன் நண்பரின் பெயரில் அஜித்குமார் தயாரித்த சொந்தப் படம் என்பது பலருக்கு தெரியாத சமாச்சாரம்.

## சொந்தக் குரலில் ஷாருக்கான்

'ஹேராம்' படத்தில் தமிழில் தன் சொந்தக் குரலிலேயே முதன் முதலாக பேசுகிறார் இந்தி கதாநாயகன் ஷாருக்கான்.

இதற்கு முன்னர் மணிரத்னத்தின் 'தில்சே' படம் தமிழில் 'உயிரே' என்று வெளிவந்தது. அதில் அரவிந்த சாமி குரல் கொடுத்திருந்தார்.

ஹேராம் படத்தில் இந்தி நடிகை ராணி முகர்ஜியும் தமிழில் தனது சொந்தக் குரலிலேயே பேசுகிறாராம்.

ஷாருக்கானுக்கு தமிழில் வசனம் சொல்லிக் கொடுத்தவர் கமல்.

ஹேராம் படத்தில் கமலுக்கு ஜோடி வசுந்தரா. இவரை கமல் புத்தம் புதிதாக, தன் மோதிரக் கையால் குட்டி அறிமுகம் செய்கிறார்.




திவ்யா தத்தா

## காதோடு சொல்லுகிறோம்

விசித்திரமான கவர்ச்சி நடிகைக்கு சமீபத்தில் அதிர்ச்சிகரமான அனுபவம் ஏற்பட்டுவிட்டது. சென்னை அடையாறு செல்லும் பாதையில் அண்ணா பல்கலைக்கழகம் அருகில் அவர் காரில் போய்க்கொண்டிருந்தார். காரைத் துரத்திவந்து வழி மறித்தனர் மோட்டார் சைக்கிள் இளைஞர்கள். நடிகை தனியாக காரைச் செலுத்தி வந்தது அவர்களுக்கு வசதியாகிப் போய்விட்டது. காரின் கதவைத் திறந்து நடிகையை தொடக்கூடாத இடங்களில் தொட்டு இம்சை பண்ணிவிட்டு, காற்றாகப் பறந்து போய்விட்டனராம். பொலிசில் புகார் கொடுத்தால் வீண் வம்பு என்று மெல்ல அமுக்கிவிட்டாராம்.

'கோபிக' நடிகை கதாநாயகர்களை கிண்டல் பண்ணித்தான் வெளியே பேசுகிறார். 'இளம் ஹீரோக்கள் மட்டுமல்ல, கிழக் ஹீரோக்களும் ரொம்பத்தான் மோசமப்பா. கையை வைத்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள். தெலுங்கில் ஒரு அரைக் கிழ ஹீரோ செய்த விஷமம் சொல்லி மாளாது' என்று சக நடிகை ஒருவரிடம் கூறினாராம் கோபிக நடிகை.

பழம் பெரும் நடிகையான ஜெயமான சதா தெலுங்கில் ஒரு படத்தில் நடிக்கிறார். அந்தப் படத்தின் இளம் இயக்குநரை தன் திறமையால் மடக்கி கைக்குள் போட்டுக் கொண்டாராம் நடிகை. தமிழிலும் கமல், ரஜினி போன்றோருடன் கலக்கமாக நடித்தவர்தான் அவர். தற்போது பழம் பெரும் நடிகையாகி விட்டாலும், பழம் பெரும் திறமையைக் கைவிடவில்லை.

ரம்ப நடிகை சுந்தரமான இயக்குநரின் மூன்று படங்களில் நடித்து வருகிறார். மேலும் மூன்று படங்களுக்கு ஒப்பந்தமாகியுள்ளார். சுந்தர இயக்குநரின் ஆஸ்தான நடிகையாகி விட்டார் ரம்பம்.

நட்சத்திர குடும்பத்தின் வாரிசு 'தா' நடிகை 'பாஸ்' நடிகரை 'யப்பா' படத்தில் கணக்குப் பண்ணி, தன் வீட்டுக்கே அழைத்துவந்தாராம். மஞ்சளான அம்மா நடிகையும் தடபுடலாக உபசரித்து 'பாஸ் நடிகரை தங்கள் வீட்டு விருந்தினர்களில் ஒருவராக்கி விட்டாராம். 'பாஸ்' நடிகருக்கு கஷ்டகாலம் தான்.

திரையுலக மறுபக்கம் 120

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## நன்றி மறந்த தி...


நடிகை மோகினிக்கு சமீபத்தில் திருமணம் நடந்தது. திரையுலகப் பிரபலங்கள் எவரும் கண்டுகொள்ளவில்லை.

'ஈரமான ரோஜாவே', 'புதிய மன்னர்கள்' போன்ற பல படங்களில் நடித்தவர் மோகினி. தனது திருமண நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் அனுப்பியும் திரையுலகத்தினர் திரும்பியும் பார்க்கவில்லை என்று மோகினியும் வருத்தம் தெரிவித்திருந்தார்.

மோகினியின் உதவியாளராக இருந்த பெண் ஒருவரை அண்மையில் சந்தித்தேன். அவரும் மோகினிக்கு திரையுலகம் துரோகம் செய்துவிட்டதாகப் பொருமினார். மோகினியுடன் ஐந்தெழுத்து இளம் நடிகர்தான் முதலில் ஐக்கியமாக இருந்தவர். மோகினியை



ஐஸ்வர்யா ராய்
படம்: கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்



## ஜெயா ரீ.வி

நம்நாட்டில் சாதாரணமாக 'சன் ரீ.வி'... முடிகிறது. டிஷ் ஆன்டனா இருந்தால் ... விஜய் ரீ.வி, ராஜ் ரீ.வி போன்ற பல ... அலைவரிசைகளைக் காணலாம் ... ஜெயா ரீ.விதான் சன் ... பலத்த போட்டி. ... அரட்டைகள் ... கொக்கி ... கள். பிரமா... ங்களுட... கலக்கு... குப்ப... ரீ.வி... தி...

## ரஜினி ரசிகை

ஜப்பானில் ரஜினி ரசிகர்கள், ரசிகைகள் தொகை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

ஜப்பானில் தமிழ்ச் சினிமா பாடல் காட்சிகளில் வருவது போன்று நடனம் கற்றுத்தரும் பயிற்சி நிலையங்களும் ஆரம்பமாகியுள்ளன.

'முத்து' படத்தின் 'தில்லானா தில்லானா' பாடல்தான் ஜப்பானில் தற்போது பிரபலமாம். மேடைகளிலும் இப்பாடலுக்கு ஏற்ப ஆண்களும், பெண்களும் ஆடுகிறார்கள். ஜப்பான் மொழியிலும் அதனை மொழி பெயர்த்துப் பாடி மகிழ்கிறார்களாம்.

ஜாக்கிசானின் ரசிகை ஒருவர் ரஜினி ரசிகையாக மாறியதுடன், டோக்கியாவில் இருந்து தமிழ்நாடு வந்து ரஜினியைச் சந்தித்துள்ளார். அவரது பெயர் ஃப்யூஜிட்டா. கம்பியூட்டர் டிசைனராக வேலைபார்க்கிறாராம்.

இந்த டோக்கியோ ரசிகை ரஜினியைச் சந்தித்த காட்சிகள் தமிழகப் பத்திரிகைகளிலும் வெளியாகி இருந்தன.



சத்யன்-கௌசல்யா
படம்: இளையவன்

## தாமதப் பாட்டு

'என்றென்றும் காதல்' படத்தை இயக்கியவர் மனோஜ் பட் நாகர். தற்போது அவர் இயக்கி வரும் படம் 'குட்லக்'. இந்தப் படத்தின் இசையும் அவர்தான்.

இப் படத்திற்காக நாட்டுப்புற, தமாஷ் கலந்த பாடல் ஒன்றை எழுதியுள்ளார் வைரமுத்து.

இந்தப் பாடலில் வரும் தமாஷ் சமாச்சாரத்தில் உதாரணத்துக்கு ஒன்று.

"மருமகள் ஒருத்தி
டாக்டரைப் பார்த்தாள்.
தேள் உதட்டில் கொட்டியதென்று.

உதட்டில் தேள்கடி எப்படி
என்று டாக்டர் கேட்க,

எனது மாமியாரைக் கடித்த
தேள் என்று எடுத்து
முத்தம் தந்தேன்
பொல்லாத தேள் எந்தன்
உதட்டில் கடித்தது
உதடும் தடித்ததென்றாள்.."

இப்படிப் போகிறது அந்தப் பாடல். ஏற்கனவே அருணாச்சலம் படத்தில் புதிர் கதையை வைத்து பாட்டு எழுதி இருந்தார் வைரமுத்து.

## சினிமா விமர்சனம்

நமது விமர்சனக்குழு 38/100

ரசிக்கக்கூடிய படம்

**படம்** : ரோஜாவனம்

**நடிப்பு**: கார்த்திக், லைலா, மாளவிகா, ஆகாஷ், நம்பியார், காக்கா ராதாகிருஷ்ணன், குமிலி, மனோரமா

**இயக்கம்** : செல்வா.

**இசை** : பரத்வாஜ்

ரோஜாவனம் என்பது ஒரு முதியோர் விடுதி. அங்கு பணியாற்றி பெரிசுகளின் அன்பை மொத்தமாக கொள்ளையடித்து வைத்திருப்பவர் கார்த்திக். விடுதி உரிமையாளரின் மகள் லைலா கார்த்திக்கை விரும்புகிறார். கார்த்திக்கும் விருப்பம்தான்.

லைலாவின் முறைமாப்பிள்ளையான ஆகாஷ் லைலாவில் உயிரையே வைத்திருப்பதை அறிந்ததும் கார்த்திக் ஒதுங்க, லைலா துரத்த, முடிவு திருப்பம். கண்களில் ஈரம்.

கார்த்திக் வழக்கம்போல நடிக்கிறார். புதுமை ஏதுமில்லை. லைலா துடைத்து வைத்த ஆப்பிள் மாதிரி ஜொலிக்கிறார். தாராளமாக கவர்ச்சியும் பொழிகிறார். போதாக்குறைக்கு மாளவிகாவும் கவர்ச்சி விருந்தை வழங்கியிருக்கிறார்.

முதியோர் இல்லத்தில் பெரிசுகளாக வரும் நம்பியார், காக்கா ராதாகிருஷ்ணன், ஜெயகணேஷ் கூட்டணி கலகல. காக்காராதாகிருஷ்ணன் ஜொள்ளு மன்னராக ஜமாய்க்கிறார்.

மனோரமா பிள்ளையால் கைவிடப்படும்போது நம்மையும் உருக்குகிறார்.

லைலாவை காதலிப்பவராக நடிக்கும் புதுமுகம் ஆகாஷ் முதல் பரீட்சையிலேயே தேறியிருக்கிறார்.

மொத்தத்தில் ரசிக்கக் கூடிய வனம் ரோஜாவனம்.

## வருகிறார் நிரோஷா

ராதிகாவின் சகோதரி நிரோஷா ராம்கியுடன் வாழ்ந்து வருகிறார். ஆனால் ராம்கிக்கும் பிரபல அடிதடி நடிகைக்கும் இடையே உள்ள உறவினால் நிரோஷா கோபமடைந்திருக்கிறார்.

இதனால் ராதிகாவிடம் முறையிட்டார் நிரோஷா. 'தொலைக்காட்சித் தொடர்களில் நடி.. நீயும் சம்பாதித்து சொந்தக் காலில் நில்' என்று தங்கைக்கு ஆலோசனை கூறியுள்ளார் ராதிகா.

ராதிகாவின் யோசனைப்படி தொலைக்காட்சி படங்களில் நடிக்க ஆரம்பித்துள்ளார் நிரோஷா. இனி நிரோஷாவை சின்னத்திரையில் காணலாம்.

## விஜய் நேர்த்தி

'மின்சாரக் கண்ணா' படம் நன்றாக ஓட வேண்டும் என்று விஜய் நேராத தெய்வம் இல்லையாம். விஜய்யின் மனைவி சங்கீதாவும் நேர்த்திக் கடன் செய்கிறார்.

திருமணமான பின்பு முதன் முதலாக வெளிவரும் படம் சரியாக ஓடாவிட்டால், 'வந்தவள் ராசி' என்று கூறிவிடுவார்களோ? என்று சங்கீதாவுக்குப் பயம்.


படிப்பகம்

www.padippakam.com

# ...ரையுலகம்

...கப்படுத்திய இயக்குநரின் பின்னர், ...டன் நெருக்கமாக இருந்தவர் நடிகர்தான்.

அப்போது நடிகருக்கும் திரையுல... ...திது என்பதால், அனுபவங்களும் ...வு. மோகினிக்கும் அதே நிலைதான். ...ால் இருவரும் புதிய அனுபவங் ... அறிவதில் வேகம் காட்டினார்கள்.

...மாகினியின் தாயாருக்கு இது ...வந்ததால் நடிகரின் தந்தையிடம் ...டியாகப் புகார் செய்தார்.

...தன் பின்னர் இருவரும் தனிமை ...ங்களை ஆராயும் வாய்ப்பை இழந் ... சில வருடங்களுக்குள் திரையுலக ...வு சுழிவுகளை கற்றுக்கொண்டார் ...கினி. சொந்தக் காலில் நிற்கவும் ...ந்தது.

...றுபடி நடிகரை தன் வீட்டுக்கே ...த்து. விட்டார் முன்பாகவே தனது ...பறைக்கு அழைத்துச் சென்று ...வ முடிக்கொள்ளுவார்.

இந்த உறவும் நீடிக்கவில்லை. மோகினிக்கு மார்க்கெட் சரிந்துவிட்டது. நடிகரோ இளம் கதாநாயகனாக பிரபலமானார்.

இளம் நடிகைகள் முதல் அம்மா நடிகைகள் வரை நடிகரின் இளம் துடிப்பைக் கண்டு அவருடன் நட்பை வைத்துக்கொண்டார்கள். படப்பிடிப்பு இருக்கிறதோ இல்லையோ காதல் லீலைகள் தினமும் நடந்தன.

ஒரு கட்டத்தில் நடிகருக்கே திகட்டிவிட்டது. அதுமட்டுமன்றி அவரது மார்க்கெட்டும் சரியத்தொடங்கியது. வரிசையாகப் பல படங்கள் அடிவாங்கின.

சோர்ந்துபோன நடிகரை மறுபடி மோகினிதான் அழைத்து உற்சாகப்படுத்தினார். மடியில் கிடத்தி அவருக்கு ஆறுதல் அளித்தார். மீண்டும் ஒருவிதமாக நடிகரின் மார்க்கெட் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

புதிய நடிகைகள் ஜோடியாக தேடிவர, மோகினிக்கு புறமுதுகு காட்டினார் நடிகர்.

அந்த நடிகரிடம்தான் தனது முதலாவது திருமண அழைப்பிதழைக் கொடுத்தார் மோகினி. ஆனால் நடிகரோ திருமண நிகழ்ச்சியை எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

இந்த நடிகர் மட்டுமல்ல, மோகினியிடம் அசடு வழிந்த பல இயக்குநர்களும் திருமணத்தன்று திரும்பியும் பார்க்கவில்லை.

"நன்றி கெட்ட திரையுலகம். நண்பர்கள் போல நடிப்பார்கள். அதிலும் நடிகைகளிடம் காரியம் நடக்கும்வரை காலைச் சுற்றிக் கிடப்பார்கள். ஆசை தீர்ந்ததும், நடிகைக்கு மவுசும் போனதும் மறந்து போவார்கள்" என்று கூறிவிட்டுப்போனார் அந்த உதவியாளர்.

## மாற்றம்

'அம்பிக' நடிகை தொலைக்காட்சி தொடர் ஒன்றில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வந்தார்.

அந்தத் தொலைக்காட்சித் தொடர் இலங்கையிலும் ஒளிபரப்பாகி வருகிறது.

தனது பாத்திரம் பிரதான பங்கு வகிப்பதையும், வரவேற்பு பெற்றிருப்பதையும் புரிந்து கொண்ட நடிகை, திடீரென்று ஊதியத்தை உயர்த்திக் கேட்டிருக்கிறார்.

தயாரிப்பாளர்கள் மறுத்து விட்டனர். தயாரிப்பாளர்களில் ஒருவரோடு ஏடாகூடமாக தர்க்கம் செய்துவிட்டு படப்பிடிப்பின் இடை நடுவே குழப்பிக் கொண்டு போய் விட்டார் நடிகை.

தற்போது 'அம்பிக' நடிகைக்குப் பதிலாக வேறு நடிகையைப் போட்டு மேற்கொண்டு கதையை நகர்த்துகிறார்கள்.

இதனால் வெகுண்ட நடிகை தனக்கு நெருக்கமான அரசியல் பிரமுகரைச் சந்தித்து முறையிட்டாராம். நடிகைகள் என்றால் ஜொள்ளுவிடும் அந்தப்பிரமுகரும் தொலைக் காட்சித் தொடரின் தயாரிப்பாளர்களிடம் தொடர்பு கொண்டு, மறுபடி 'அம்பிக' நடிகைக்கே வாய்ப்புத் தருமாறு சிபாரிசு செய்திருக்கிறார்.

இந்த விவகாரம் குறிப்பிட்ட தொடரை ஒளிபரப்பும் இரண்டெழுத்து தொலைக்காட்சி நிறுவனத்தின் இயக்குநரிடம் சென்றது.

அந்த அரசியல்வாதிகளைத் தொடர்பு கொண்டு தாறுமாறாகக் கிழித்துவிட்டார் தொலைகாட்சி நிறுவன இயக்குநர்.

அரண்டுபோன அரசியல்வாதி ஒதுங்கிக் கொண்டார். பாவம் 'அம்பிக' நடிகை. தூக்கப்பட்டது தூக்கப்பட்டதுதான்.

அவர் சரியான நேரத்துக்கு படப்பிடிப்புக்களுக்கு வருவதில்லை. அதனையும் பொறுத்துக் கொண்டோம். பின்னர் ஊதியத்தையும் அநியாயத்துக்கு உயர்த்திக் கேட்டார். தூக்கிக் கடாசிவிட்டோம்" என்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

## மணியின் மனிதாபிமானம்

'சன்' தொலைக்காட்சியில் 'கலாட்டா குடும்பம்' என்றொரு நாடகம் ஒளிபரப்பானது. தற்போது சக்தியில் ஞாயிறு இரவு இங்கு ஒளிபரப்பாகிறது.

மிஸ்டர் பீன் என்பவருடைய ஆங்கில நகைச்சுவை காட்சிகளை அப்படியே நகலெடுத்து செய்கிறார்கள். ஏன் கற்பனைக்குப் பஞ்சமா?!

இதே நாடகத்தில் ஜமீன்தார் வீட்டு பையன் போன்று நடிப்பவர்தான் பாரி வெங்கட். துள்ளாத மனமும் துள்ளும் படத்தில் ட்ரவுசர் பாண்டியாக நடித்தவரும் இவரே.

பாரிவெங்கட் விபத்தில் இறந்ததும், அநாதைப் பிணமாக பொலிஸ் அவரைப் புதைத்ததும், பின்னர் விஷயமறிந்து அவரது உடலை மறுபடி எடுத்து இறுதிக் கிரியை நடந்ததும் பழைய செய்தி.

பாரி வெங்கட்டுக்காக அவரது நண்பர்களான நடிகர் வையாபுரி, விவேக், மயில் சாமி ஆகியோர் நிதி திரட்டி வருகின்றனர். இதற்காக மணிவண்ணன் பெரும் தொகை கொடுத்துள்ளார்.

பெரிய நடிகர்கள் பலரே சிறு தொகைதான் கொடுத்தனர். பாரி வெங்கட்டுடன் ஒரு படம்கூட நடிக்காத மணிவண்ணன் அள்ளிக் கொடுத்து தன் மனிதாபிமான உள்ளத்தைக் காட்டிவிட்டார்.

## விவேக் கடி

'வாலி' பட வெற்றி விழாவில் விவேக் பேசும்போது அஜித்தையும், ஷாலினியையும் கடித்துவிட்டார். எப்படிக் கடித்தார் தெரியுமா? இப்படி:

"நல்லவேளை.. அமர்க்களம் படத்தின் போது ஷாலினி அஜித்தை மணமகனாக தெரிவு செய்தார். 'வாலி' படத்தின் போது தெரிவு செய்திருந்தால் குழம்பிப் போயிருப்பார்.

இப்படிக் கூறிவிட்டு விவேக் சில நிமிஷம் இடைவெளி விட்டுத் தொடர்ந்தார்:

"ஏன் தெரியுமா? 'வாலி' படத்தில் இரண்டு அஜித் ஆயிற்றே. எந்த அஜித்தை தெரிவு செய்வது என்று தான் தடுமாறி இருப்பார்"

விவேக் இதனைக் கூறியபோது மேடையில் இருந்த ஷாலினி வெட்கப்பட்டு முகம் சிவந்தார்.



கார்த்திக்-லைலா
படம்: ரோஜாவனம்




ராதிகா சௌத்ரி
படம்: கண்ணுபடப் போகுதய்யா

முகப்பில்
மோகினி மாதவன்
படம்: அலைபாயுதே

...ான் பார்க்க ... ஜெயா ரி.வி. ...தாலைக்காட்சி

...ி.விக்கு இப்போது ...திய நாடகங்கள். ...ற நேயர்களைக் ...டு இழுக்கிறார் ...ட்டமான விளம்பர ... தேர்தல் நேரத்தில் ...றது ஜெயா ரி.வி ... ரி.வியுடன் பிணைக் ...ட பலரை ஜெயா ...வலை வீசிப் பிடித் ...க்கிறது.



## சினிமா விமர்சனம்
நமது விமர்சனக்குழு 45/100

### தீனி தேடும் அஜித்

**படம்** : அமர்க்களம்
**நடிப்பு** : அஜித்குமார், ஷாலினி, ரகுவரன், நாசர், வையாபுரி, தாமு.
**இயக்கம்** : சரண் **இசை** : பரத்வாஜ்

'வாலி' படத்தின் பின்னர் வில்லத்தனமாக அஜித் வெளுத்து வாங்கியுள்ள படம் இது. நடிப்புப் பசியோடு அலையும் அஜித்குமாருக்கு வாலியின் பின்னர் தீனி போட்டிருக்கிறது அமர்க்களம். அஜித்குமாரிடம் இன்னமும் திறமைகள் உண்டு. தோண்டியெடுப்பது இயக்குநர்களது திறமையைப் பொறுத்தது.


ரவுடியாக அலையும் அஜித்குமாரிடம் ஷாலினியை காதலிப்பதுபோல நடிக்குமாறு கூறுகிறார் ரகுவரன். வழக்கம் போல நடிப்பு நிஜமாகிறது. வழக்கம் போல காதலிக்கச் சொன்ன ரகுவரனே காதலுக்கு வில்லனாகிறார். நாசரின் மகளாக வளரும் ஷாலினி ரகுவரனின் மகள் என்பது தெரிந்ததும் கதையில் திருப்பம் வருகிறது.

வழக்கமான கதைதான். இதற்கு முன்பும் பல படங்களில் அரைத்த மாவுதான். ஆனால் அஜித்தின் நடிப்பும், ஷாலினியின் இளம் துள்ளலும் அமர்க்களமாக இருப்பதால், திருப்தியாகப் பார்க்கமுடிகிறது.

நாசருக்கு நல்ல ஒப்பனை. ரகுவரன் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் வில்லத்தனம் செய்கிறார்.

'சத்தம் இல்லாத பூமி கேட்டேன்' பாடலுக்கு அஜித்தின் நடிப்பு ஜோர். பாடல்கள் யாவும் காதுக்கு இதம்.

மொத்தத்தில் அமர்க்களம் அமர்க்களம்தான்!




பிரசாந்த்-சிம்ரான்
படம்: ஜோடி

## ஆங்கில பிரமாண்டம்

தெலுங்கு பட உலகின் சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி. இவர் இப்போது ஆங்கிலப் படம் ஒன்றிலும் நடித்து வருகிறார். ஹொலிவூட் இயக்குநர்தான் இப்படத்தை இயக்குகிறார்.

இந்திய பண மதிப்பில் 45 கோடி ரூபாய் செலவில் இப்படம் தயாராகிறது. இப்படத்தை தெலுங்கிலும் தயாரிக்கப் போகிறார்கள்.

தெலுங்கில் அதனை இயக்குவதற்கு இயக்குநர் தெரிவு நடந்தது. தமிழ்ப்படவுலக பிரபல இயக்குநர்கள் பத்துப் பேர் இயக்கிய படங்களை போட்டுப் பார்த்தாராம் ஹொலிவூட் இயக்குநர்.

இறுதியாக அவர் தெரிவு செய்தது 'பாட்ஷா' பட இயக்குநர் சுரேஸ் கிருஷ்ணாவை.

தமிழிலும் மொழி மாற்றம் செய்து வெளியிடுவார்களாம்.

மேலதிகச் செய்தி: சிரஞ்சீவி ரம்யாகிருஷ்ணன் நடித்த தெலுங்குப் படம் ஒன்று 'சிங்க நடை' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு தற்போது வெளியாகியுள்ளது. நம் நாட்டிலும் வீடியோவில் உலாவுகிறது.

## ...ணையுடன் அஜித்

...ஜய்யின் திருமணத்துக்கு நட்சத்திரப் பட்டாளமே ...டிருந்தது. தனது வருங்காலத் துணைவியான ...ியுடன் சென்று வாழ்த்தினார் அஜித்குமார்.

"உனது திருமணத்துக்கு எனது வாழ்க்கைத் துணைவியுடன் வந்து வாழ்த்துவேன் என்று கூறினேன் சொன்னபடி வந்துவிட்டேன் பார்த்தாயா?" என்று விஜய்யிடம் கூறினார் அஜித். அடுத்த வருடம் அஜித்தை வாழ்த்துவார் விஜய்.

www.padippakam.com

# இனக் கொலை வேட்டை



இது வெளிநாடுகளில் நிகழ்ந்த மனித வேட்டை யல்ல! இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையில் ஒரு காட்சி. தமிழ் மீனவர் ஒருவரை படுகொலை செய்தபின் கட்டி இழுத்துச் செல்கிறார்கள். இப் புகைப்படம் 1984இல் வெளியானது. இதனையடுத்தே சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட உலக மனித உரிமை அமைப்புக்களுக்கு இங்குள்ள இனப்படுகொலை வேகம் புரிந்தது.

## கால்

வீடு நோக்கியோடி வந்த எங்களை
விதி கரம் நீட்டியழைத்தது தெரியவில்லை.
போரரக்கனின் பிடிக்கு நழுவி.
சல்லடி, பொல்லடி
கல்லடி, துனை குண்டடி தப்பி,
காடுபோய் காய்ந்து கருகி
தண்ணீருக்கும் தலைசாய்க்கும் நிழலுக்கும்,
தயவு கேட்டுத் தவித்தோம் அலைந்தோம்.
▫▫
கால்களிருந்தன. இரண்டு கால்களுமிருந்தன;
காடு வெட்டி கம்பு தேடினோம்.
குடில் போட்டு குடிபுகுந்தோம்.
▫▫
பருப்புக்கும், அரிசிக்கும் எரிக்கிற
எண்ணெய்க்கும்
எண்ணுக் கணக்கில் நீளமாக கடுக்க நின்றோம்.
கால்கள் கடு கடுக்க நின்றோம்.
▫▫
உங்கள் ராச்சியம் உங்களுக்கென்று
உலங்கு வானூர்திகள்
உவப்பான செய்திப் பிரசுரங்களை
உதிரிப்பூக்களாக, உதிர்த்தபோது
ஓடியோடிப் பொறுக்கினோம்.
கால்களால் ஓடியோடிப் பொறுக்கினோம்.
▫▫
எங்கள் மண்ணில் எங்களவர்களுடன்
இயல்பாக வாழலாம் இனியென்ன கவலையென்று
கால் நோக நடந்தோம்.
வாழ்விடங்களை கண்டதும்
கால் வலியையும் மறந்தோம்,
மனது கொள்ளா மகிழ்ச்சியில்.
▫▫
கஞ்சி குடிச்சாலும் போதும்
கனவுகளுடன் போராடும் நினைவுகளுடன்
நிமிஷத் துள்ளல் விநாடியில் மறைய
வைத்த கால்களிலொன்று பாதியாக
ஒற்றைக் காலில் நின்றேன் கொக்காக.
இரத்தம் சொட்டியது.
▫▫
எங்கோ ஓடி என்னோடு வந்த
என்னிரண்டு காலிலொன்று எங்கேயென
அங்கே கிடந்தன இரண்டு கால்கள்.
மடிந்து கிடந்த மச்சான்.
▫▫
மரண வோலம் மனசை பிராண்ட
மண்ணை எங்கள் மண்ணை பார்க்கிறேன்;
அங்கே சிந்தலும், சிதறலுமாக
சிவப்பு கருஞ்சிவப்பு திட்டாக, திரவமாக,
சாய்கிறேன் என் மண்ணில்
இன்னமும் இரத்தத்தில் பச்சைத் தன்மையாக
குடிருக்கிறது!

ஜெ. சூரியன்

## அம்மம்மா

அம்மம்மா,
நீ போயே போய்விட்டாய்!
–o–
உனது வீடு,
நீ நாள்தோறும் பேணி வளர்த்த
அந்த மரங்கள் அடர்ந்த தோப்பு
இவைகளிடையே–நீ
இன்றுமொருதரம்
வாழ வர மாட்டாய்!
–o–
நீ பருகிய
மரணமெனும்
கசப்பான நச்சுக் கிண்ணத்தின்
சிதிலங்கள்
எனது இதயத்தில்
ஆழமாகப் பதிந்து போயின!
–o–
உன்னைக் கடைசியாகக் காணும்
பாக்கியம் கூட
இல்லாத தொலைவில்
தனித்துப் போனேன்!
–o–
நீண்ட தூரத்தில் இருந்தாலும்
ஒவ்வொரு அந்திப் பொழுதிலும்
மயானத்தில்
நீ தனித்துத் துயிலும்
மண்ணறையின் நினைவு
என்னைக் கதறியழவைக்கிறது;
–o–
உனது அன்பின்
சிறகுகளுக்குள்–எனைக்
காப்பாற்றி வளர்த்தபோது
எனக்கு
எத்தனை அழகிய
சிறகுகளைத் தந்திருந்தாய்;
–o–
உனக்குப் பறக்க முடியாமலிருந்த
வானவெளியின்
எல்லாச் சுதந்திரங்களையும்
ஆனந்தங்களையும்
எனக்காகத் தந்திருந்தாய்!
–o–
நீ இல்லாத வீட்டில்
இனி எனது
சிறகுகள் படபடக்க மாட்டா.
நீ தூங்கிப் போனாலும்
எனது விழிகளுக்குள்
உனது அன்பின் சுடர் மட்டும்
அணையாமல் துடிதுடிக்கும்!
–o–
அம்மம்மா!
உனது நினைவில்
அழுதழுது சோர்ந்து
தூங்கிப்போகும் போதெல்லாம்
உனது அன்புக் கரங்களால்
எனது தலை தடவுவாயா?
கனவிலாவது வந்து!

பஹ்மா ஜஹான்–
அட்டாளைச்சேனை.

## தேன் கிண்ணம்

## நான் நினைத்தபடியே!

யாழ் மக்களின்
இடம் பெயர்வுபோல
நான் நினைத்தபடியே!
உன் உறவு முறிந்து போகும்
கடைசி நிமிடங்களிலும்...
உன்னிடமிருந்து;
பிரிவதை நினைக்கிறேன்!
**
தமிழ் மக்களை
ஏமாற்றும் பொதி போல
நீ சொன்ன
காதல் மொழியையெண்ணி
நொந்து சிரிக்கின்றேன்.
**
உன்னிடமிருந்து
வரும் தென்றல்
சுடும்போதும்;
நீயுதிர்த்திய
வார்த்தைகளின்
நினைவுகள் வரும்போதும்;
நெருங்கிய ஷெல் வீச்சச்
சத்தத்தில் அலறும்
சிறு குழந்தைபோல
நானும் அலறியடிக்கின்றேன்.

அழகு கிருபா–
செட்டிபாளையம், வடக்கு.

## பயணிகள் கவனிக்கவும்

நினைவுள்ளவரை
உன் ஞாபகம்!
''
உன் நினைவுச் சின்னமாக
சுருள் சுருளாக
பெருமூச்சுக்கள்
சுழன்றடிக்கின்றது இந்த–
நுரையீரத்திடலில்!
''
ஏன் இந்த
செப்டம்பரின்
பஸ் கட்டண அதிகரிப்பு
உன் வருகையை
தாமதப்படுத்துகின்றதா?
''
இந்த பொருளாதாரத்தில்
பணம் இருக்கிறது
'சில்லறை' இல்லை
அதுதான் இந்த அதிகரிப்பு!
''
முத்திரை கட்டண
அதிகரிப்பால் கடிதம்–
எழுதாத நீ
நேரிலாவது வந்து சென்றாய்;
இப்போது பஸ் கட்டணமும்
அதிகரித்துவிட்டது!
''
இனி–
தொலைபேசியிலும் பேசாதே!
அதுவும் 'அதிகரிக்கக்கூடும்!!

தஸ்ரிப்

## நில் – கவனி – முன்னேறு

ஒரு செட்டி வெள்ளைக் கவரில் ஒரு பெரியவர் பத்து நூறு ரூபாய் நோட்டுக்களை போட்டு, அது ஆபத்து சமயத்திற்கு உதவும் என்று தன் கைப்பெட்டியில் வைத்திருப்பது வழக்கம். அந்தக் கவர் கிழிந்து போனால் கூட அதேமாதிரி வெள்ளைக் கவரிலேயே மீண்டும் போட்டு வைப்பார்!

ஒருநாள் தன் கைப்பெட்டியை ஒழுங்கு படுத்திக்கொண்டிருக்கும் பொழுது, கூக்குரல் போட்டார். ஏனெனில் அவருடைய வெள்ளைக் கவர் கிடைக்கவில்லை. பணம் போய் விட்டது என்ற எண்ணத்தில், அதில் இல்லை, இதில் இல்லை, வெள்ளைக் கவரில்தான் என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

அவர் பேரப்பையன் ஒரு பழுப்புக் கவரை எடுத்து, அதில் பணம் இருக்கிறதே என்று சொன்னான். பெரியவர் அசடு வழிந்தார். ஏதோ ஒரு சமயம் வெள்ளைக் கவர் இல்லை என்று அந்த பழுப்புக் கவரில் போட்டது நினைவு வந்தது!



ஆகவே நமக்கு பழக்கமாயிருக்கும் அடையாளங்களை மாற்றலாகாது.

படிக்கும் பொழுது படித்துவிட்ட இடத்திற்கு அடையாளம், நம் வீட்டிற்கு அடையாளம், புது ஊர்களுக்குச் சென்றால் அடையாளம், நாம் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் அடையாளம், எதற்கும் அடையாளம் இருந்தால்தான் நம் அன்றாட வாழ்க்கை சுலபமாக நடக்கும்!

வீட்டின் வெளித் தோற்றத்தை மாற்றி விட்டால், உற்றார் உறவினர்கூட அடையாளம் தெரியாமல் தள்ளிப் போய் விடுவார்கள்.

அலுவலகங்களிலும், அவரவர் பதவிகளுக்குள்ள அடையாளத்துடன் நிர்வாகத்தில் செயல்பட்டால்தான் மதிப்பு நிலைக்கும்.

பிரமுகர்கள் பெரிய சாதனைகளை செய்துவிடுவார்கள். ஆனால் அன்றாட வாழ்க்கைக்குப் பயனுள்ள சில சிறிய பணிகளை செய்ய அவர்களால் முடிவதில்லை. ஆகையால் பிறரை நாடியே வாழ வேண்டிய ஒரு கட்டாயம் அவர்களுக்கு உள்ளது.

உதாரணமாக, ஒரு பொறியியலாளருக்கு தன் பென்சிலை கூருடன் சீவ வராது! பௌண்டன் பேனாவிற்கு மை போடத் தெரியாது! ஆகாய விமானங்களை பழுது பார்ப்பவருக்கு சைக்கிள் பஞ்சர் அடைக்க தைரியம் இராது. இயந்திர உற்பத்தித் தொழிற்சாலையில் பணிபுரிபவருக்கு நெருப்புக் குச்சி ஏற்றுவதில் ஏமாற்றம். ஒரு படி சந்தனம் அரைப்பவரை அதில் கொஞ்சம் பச்சைக் கற்பூரமும் கலந்து கொடுங்கள் என்றால் முழிப்பார்! நவநாகரிக வாலிபருக்கு வாழை இலையில் பாயசம் சாப்பிடத் தயக்கம்!

'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்ற பழமொழியை அனுசரித்து நாம் கற்ற சிறிய வித்தைகளும் நம் உதவிக்கு திடீரென்று வரும்.

பொதுவாக ஜீவனத்திற்கு மனிதன் ஒரு தொழிலை செய்ய வேண்டிய கட்டாயமாக இருந்தாலும், அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் சிறிய சிறிய வேலைகளையும் ஒரு பொழுது போக்காகவாவது அறிந்து, அதை எப்படிச் செய்வது என்று தெரிந்து வைத்துக்கொண்டால் அன்றாட வாழ்க்கையில் சிக்கலான சூழ்நிலைகளை சமாளிக்க வழிகாட்டும்.

ஒரு தொழில் உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது என்ற மனப்பான்மையை "தூ" வென்று உதறித் தள்ள வேண்டும். கண்டது கற்க பண்டிதனாவான்!

## இந்தவாரம் உங்கள் பலன்

19.09.99 முதல் 25.09.99வரை

ஜோதிடர் 'கீர்ணா'

**மேடம்:**
பயணத்தால் அனுகூலமுண்டு. எடுத்த விடயங்களில் தடைகள் விலகும். சுக்கிரன் 5ல் பலம் கொள்வதால் அச்சுவினிக்காரருக்கு அதிஷ்ட வாய்ப்புக்களுண்டு. நோய் துன்பங்கள் தீரும். தனுசு, சிங்கராசிக்காரர்கள் உதவுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 20, 22.

**இடபம்:**
உள்ள கஷ்டங்கள் குறையும். நிம்மதியான நிலையும், புதிய வேலை வாய்ப்புக்களும், நண்பர்கள் குடும்பத்தவர்கள் வருகையும் இடம்பெறும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் காணப்படும். போசன சுகமும் சயன சௌக்கியமும் காணப்படும். ரோகிணி நட்சத்திரகாரர் நன்மையடைவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மண்ணிறம்; எண்:9.
அதிஷ்ட திகதிகள்: 21, 24.

**மிதுனம்:**
11ம் இடத்தில் வக்கிரக பலம் அடைவதால் புதிய தொழில்கள் விருத்திபெறும்.சிக்கல்கள் பல தீரப்பெறும். பல காலம் நிலவிய தடைகள் விலகும் வாய்ப்புண்டு. திருவாதிரை, புநர் பூச நட்சத்திரர் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 19, 25.

**கடகம்:**
மனதில் சிறுபயம் ஏற்படும். பயண அனுகூல முண்டு. வெற்றிகிட்டும். அத்துடன் எதிர்பார்த்த விடயங்கள் வாரஇறுதிவரை தடைப்படும். நோய் துன்பங்கள் வாட்டி வதைக்கும். திருமண விடயங் கள் கைகூடும். ஆயிலிய பூச நட்சத்திரருக்கு வாய்புக்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய்; வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 8.
அதிஷ்ட திகதிகள் : 20, 23.

**சிம்மம்:**
ஒன்பதில் கிரகபலம் சிறப்பாக அமைவதால் பெரியோர் சந்திப்புண்டு. திருமண பலமுயற்சி, பயண விடயங்களில் வெற்றியும் மகிழ்ச்சியும் கிட்டும்.பணம் கடன் பிரச்சனைகள் தீரும். மக நட்சத்திரர் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 19, 21.

**கன்னி:**
மனதில் திருப்தியற்ற நிலையும் வார இறுதியில் நோய் துன்பங்களும் ஏற்படும். முக்கியமான உறவினர் நண்பர்களைச் சந்திப்பார்கள். ஆலய தரிசனமும் தலயாத்திரைக்கும் வழிஉண்டு. உத்தர நட்சத்திர பெண்கள் பிரயானை பலனைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 7
அதிஷ்ட திகதிகள்: 25, 22.

**துலாம்:**
பல நாட்கள் தடைபட்ட விடயங்கள் விலகி மகிழ்ச்சியடைவார்கள். கல்வி தொழில் விடயங்கள் முன்னேற்றம் காணும். சகோதரர்களின் உதவியும் பலரின் பாராட்டுக்களும் மனதில் மகிழ்ச்சிதரும். சிம்ம, மேட ராசியினரால் உதவியும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி திங்கள்.
அதிஷ்ட நிறம்: மருண்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 19,23.

**விருட்சிகம்:**
கவலைகள் தீரப்பெறும். பிள்ளைகளின் மகிழ்ச்சியான சம்பவங்களால் பூரிப்பும், மனத்திருப்தியும் ஏற்படும். நோய் துன்பங்கள் வந்து போகும். அத்துடன் வார இறுதியில் முயற்சிக்கேற்ற பலனும் பண வருவாயும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**தனுசு:**
பண வசதிகள் ஏற்படுவதுடன் முயற்சிகள் பல நடைபெறும். வேலை வாய்ப்புக்கள், கல்வி அமைப்புக்கள் உயர்வடையும். மனதில் நம்பிக்கையும் காரியசித்தியும் ஏற்படும். உத்திராட, மூல நட்சத்திரருக்குப் பண வருமானம் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 21, 23.

**மகரம்:**
தொழில் பிரச்சனைகள் தீரும். இட மாற்றங்கள் அல்லது பயண நிலை ஏற்படும். பெண்களுக்கு சில வீண் பிரச்சனைகள் வந்து போகும். திருவோணம் நட்சத்திரருக்கு நற்சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 23, 25.

**கும்பம்:**
எதிர்பார்த்த கருமங்கள் தாமதமடையும். மனதில் வெறுப்பு ஏற்படும். வார இறுதியில் திருமண விடயங்கள் கைகூடும். ஆலயவழிபாட்டுக்கு சென்று வருவீர்கள். சதய நட்சத்திரருக்கு சில அதிஷ்டங்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம்: சாம்பல்; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 20, 22.

**மீனம்:**
சிக்கல்கள் விலகும். கல்வி ஊக்கமளிக்கும். தூரஇடப் பயணங்கள் ஏற்படும். உறவினரது உதவிகள் கிடைக்கும். மனதில் நம்பிக்கைக்கூடும். பல பிரச்சனைகள் விலகும். மனம் நிம்மதி அடையும். புதிய திட்டங்கள் கைகூடும். உத்திரட்டாதிக்காரருக்கு நன்மை உண்டு.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 24, 21.


படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கண்களும் கண்ணாடியும்



டீன்-ஏஜ் பெண்களில் பெரும்பாலானவர்கள் கண்ணாடி அணிகிறார்கள்.

கன்டக்ட் லென்ஸ் இப்போது பயன்படுத்தப்பட்டு வந்தாலும், கண்ணாடிக்கு இருக்கும் மவுசு குறையவில்லை.

கண்ணாடி உபயோகிப்பவர்கள் கவனிக்க வேண்டியவை:

* லென்ஸ் இருக்கும் பகுதி தரையையோ, மேசையையோ தொடும் வகையில் வைக்க வேண்டாம்.
* அடிக்கடி கண்ணாடியைக் கழற்றுவதும் அணிவதுமாக இருந்தால் ஃபிரேமின் ஓரத்தில் இருக்கும் 'ஸ்குரு' இளகிவிடும். அதனால் அடிக்கடி ஸ்குருவை இறுக்கி விடவும்.
* கீறிய கண்ணாடிகளை உபயோகிக்காதீர்கள். அது கண்களுக்குப் பெரும்பாதிப்பைத் தோற்றுவிக்கும்.
* சவர்க்காரத் தண்ணீரைப் பயன்படுத்தி சுத்தமான பஞ்சால் வாரத்தில் ஒருநாள் கண்ணாடியைக் கழுவுங்கள். கண்ணாடி ஃபிரேமையும் சுத்தம் செய்யுங்கள்.
* தொடர்ந்து கண்ணாடியை உபயோகிப்பவர்கள், மூக்கில் கோடு விழாமல் இருக்க இரவு தூங்கச் செல்வதற்கு முன்னால் ஏதாவது நல்ல கிறீமைத் தடவுங்கள். கோடு விழாது.

## நக நயம்



இப்போது பெரும்பாலான பெண்கள் பலவிதமான வண்ணங்களில் நகத்தில் 'நெயில்பொலிஷ்' எனப்படும் சாயங்களைப் பூசிக் கொள்கின்றனர். இதற்காகவே நகங்களை நீளமாக வளர்த்து, அவற்றை வளைவாக வெட்டி சீர் செய்கின்றனர். நகப்பூச்சுக்கள் விரல்களுக்கு அழகைக் கொடுக்கின்றன. ஆனால் நகப் பூச்சுக்களை நீண்ட நாட்களுக்கு நகங்களில் பூசி வைத்திருக்கக்கூடாது.

அதனால் நகங்கள் பாதிக்கப்படும். நகங்களின் வர்ணம் பழுப்பாக மாறிவிடும். மாற்றி மாற்றி நகப்பூச்சுக்களை பூசுவதைவிட விருந்துகள், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது பூசலாம்.

நகப்பூச்சை நீக்கும் இரசாயனம் மூலம் நகப்பூச்சை நீக்கிவிட்டு சில நாட்களாவது நகங்களைப் பூச்சின்றி வைத்தித்தல் நலம். நகங்களை அழுக்கின்றி சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். நகப்பூச்சை நீக்கியவுடன், நகங்களை, விரல்களை நன்கு சுத்தம் செய்துவிட்டு பாதாம் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் தடவி ஊறவிட்டு வெதுவெதுப்பான நீரில் அலம்ப வேண்டும்.

நகங்கள் செழிப்பாக வளர நிறைய பால் குடிக்க வேண்டும். கல்சியம் அதிகமுள்ள உணவுகளை உண்ண வேண்டும். நகங்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் நீளமாக வளர்க்கக்கூடாது. அவற்றை ஒரே சீராக வெட்டிப் பராமரிக்க வேண்டும்.

நல்ல தரமான நகப்பூச்சுக்களைதான் பயன்படுத்த வேண்டும். விரல்களுக்கு மருதோன்றி வைப்பதும் நல்லது. நகங்களில் பூச்சி அரிப்பு, நகச்சுத்தி போன்ற தொல்லைகள் ஏற்படாமல் தடுக்கவல்லது மருதோன்றி.

## புருவ அழகு

பெண்களில் சிலருக்கு இளம் பருவத்திலும் புருவமயிர் குறைவாக இருக்கும். அத்தோடு முகத்தில் பருக்களும் ஏற்படும். அதைப்போக்க என்ன செய்யலாம்?



இப்படிப்பட்டவர்கள் உணவில் சிறு பயறு, பால், முட்டை போன்ற புரதச் சத்து அதிகமுள்ள உணவுகளைச் சேர்க்க வேண்டும். மருந்துக் கடைகளில் 'ட்ரிங்கிங் கஸ்டர் ஒயில்' வாங்கலாம். அதில் இரண்டு துளி எடுத்துத் தூங்கச் செல்வதற்கு முன்னால் புருவத்தில் தேயுங்கள். சிலருக்கு இது புருவ வளர்ச்சிக்கு ஒத்துழைக்கும்.

முகத்தைச் சுத்தமாக வைத்திருந்தால் முகப்பரு தோன்றாது. தினமும் இரண்டு மூன்று தடவை குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். முகம் கழுவ காரம் குறைந்த சவர்க்காரத்தை அளவோடு மட்டும் பயன்படுத்த வேண்டும். அதிகமான அளவு கீரையும், காய்கறி உணவும் சாப்பிட வேண்டும். மலச்சிக்கலும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆடை நீக்கிய பாலில் கஸ்தூரி மஞ்சள் தூளைக் கலக்கி அரைமணி நேரம் முகத்தில் பூசிக் கழுவி விடுங்கள். தினமும் இவ்வாறு குளிப்பதற்கு முன்பு செய்தால் முகப்பரு மறையும்.

சிலருக்கு முகத்தை நன்றாக சவர்க்காரம் போட்டுக் கழுவினாலும முகத்தில் எண்ணெய்த் தன்மை காணப்படும். முகத்தில் இருக்கும் அதிக எண்ணெய்த் தன்மையைப் போக்க வீட்டிலே கிறீம் தயாரித்து விடலாம்.

கடலைமாவு, எலுமிச்சம் பழச்சாறு, பன்னீர் ஆகியவைகளைக் கலந்து முகத்தில் தேயுங்கள். காய்ந்ததும் கையால் தேய்த்துக் கழுவுங்கள். தினமும் இவ்வாறு செய்தால் எண்ணெய்த்தன்மை குறையும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GL

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-09-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா 08

# மோனிக்கா என் மோனிக்கா

பல்கலைக்கழகம் சென்று நான்கு வருடங்கள் படிப்பதற்கு மோனிக்கா ஆசைப்பட்டாள். தந்தையார் பண உதவி செய்யாதது அவளுக்கு மிகுந்தவருத்தமளித்தது.

மோனிக்காவின் மனக் கவலையைப் போக்குவதற்கு தாயார் ஒரு ஏற்பாடு செய்தார். பல்கலைக் கழகத்தில் இருவருடங்கள் சேர்ந்து படிப்பதற்கு இணையான இளநிலைக் கல்லூரியில் மோனிக்கா சேருவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்.

அங்கு கட்டணம் குறைவு. இருவருடங்கள் அங்கு படித்தால், ஏனைய இருவருடங்களை பல்கலைக்கழகத்தில் படிக்க முடியும்.

1991ம் ஆண்டு இங்கு மோனிக்கா சேர்ந்து கொண்டாள். இங்கு படித்தபோதும் மோனிக்காவின் மனக்கவலை மறையவில்லை.

தன்னுடன் படித்த மாணவிகள் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கிறார்கள். அங்கேயே விடுதியில் தங்கி சந்தோசமாக இருக்கிறார்கள். 'நாம் மட்டும் அந்த வாய்ப்பை இழந்து விட்டோமே' என்று மோனிக்கா வருந்தினாள்.



இதன் பின்னர் எந்தவொரு சிறிய சம்பவமானாலும் அதனை யிட்டு அதிகளவாக மனதைக் குழப்பிக் கொள்ளுவாள்.

'நான் ஒரு அதிஷ்டம் இல்லாத பெண்' என்று தாயாரின் மடியில் தலைவைத்து அழுது புலம்புவாள்.

கல்லூரியில் மோனிக்கா தன்னுடைய ஜீப் வண்டியை வழக்கமாக நிறுத்தும் இடத்தில், ஒருநாள் பிறிதொரு வண்டி நிறுத்தப்பட்டிருந்தது.

இது ஒரு முக்கியத்துவம் இல்லாத விடயம். ஆனால் மோனிக்கா இதனை ஒரு பெரிய பிரச்சனையாக்கிவிட்டாள்.

அன்று கல்லூரிக்குச் செல்லாது திரும்பவும் வீடுபோய்விட்டாள். "எனக்கு எல்லோருமே தீங்கு செய்கிறார்கள்," என்று தாயாரிடம் கூறிப் புலம்பினாள்

மகளின் நிலையைக் கண்டு தாயார் கலக்கமடைந்தார். இப்படியே போகுமானால் மனநோய் பீடிக்கலாம் என்று பயந்துபோனார்.

ஏற்கனவே மோனிக்காவுக்கு உளவியல் நிபுணர்கள் சிகிச்சை அளித்தனர். அச் சிகிச்சை செய்து நீண்டகாலமாகியிருந்தது.

மறுபடியும் உளவியல் மருத்துவ நிபுணரான இரானி கசோர்லாவை அணுகி மோனிக்காவைக் காண்பித்தார்.

அந்த மருத்துவ நிபுணர் மூன்று துறைகளில் மோனிக்காவுக்குப் பயிற்சி கொடுத்தார்.

படிப்பில் முழுக் கவனம் செலுத்துதல், தந்தையாரான லிவின்ஸ்கியுடன் நல்லுறவை வளர்த்தல். உடல் எடையைக் குறைத்து உடல் நலத்தைப் பேணுதல் ஆகிய மூன்று துறைகளிலும் போதுமான பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

### மாற்றம்

மோனிக்காவிடம் சிறப்பான மாற்றம் தெரிந்தது. அவள் மனம் அழுக்கில்லாத கண்ணாடி போல் மாறியது.

தந்தையுடன் அளவுக்கு அதிகமாக முரண்பட்டுக் கொண்டுவிட்டதாக மோனிக்கா நினைத்தாள்.

"ஒவ்வொருத்தருக்கும் தமது சொந்த வாழ்க்கையை தமது விருப்பப்படி அமைத்துக் கொள்ளும் உரிமையும், சுதந்திரமும் இருக்கின்றன.

தந்தை மகளாக இருந்தாலும் ஒருவரது தனிப்பட்ட விவகாரத்தில் இன்னொருவர் அளவுக்கதிகமாக தலையிடுவது தவறுதான். அது உறவுக்கே பகையாகலாம்."

இவ்வாறெல்லாம் உறவுகள் தொடர்பாக உளவியல் நிபுணர் மோனிக்காவுக்குத் தெளிவு ஏற்படுத்தி இருந்தார்.

மோனிக்கா தந்தையாருடன் தொடர்பு கொண்டாள். "நான் ஏதாவது வரம்புமீறி நடந்திருந்தால் மன்னியுங்கள் அப்பா!" என்று கூறியபோது லிவின்ஸ்கி நெகிழ்ந்து போனார். "நேரில் வந்து என் கையால் ஒரு கோப்பை சூடான தேநீர் அருந்து!" என்று அன்பொழுக அழைத்தார்.

மோனிக்காவும் அழைப்பை ஏற்றுச் சென்றாள். அங்கு ஆச்சரியம் காத்திருந்தது.

லிவின்ஸ்கியும், அவரது மனைவியான பார்பராவும் மோனிக்காவை கன்னத்தில் முத்தமிட்டு வரவேற்றனர்.

பார்பராவுடன் முதல் முறையாக சிநேகமாக புன்னகைத்தாள் மோனிக்கா. சித்தி என்று உறவு முறை கூறி அழைத்தாள்.

அந்த நாள் மிக இனிமையாக இருந்ததாக நினைவு கூர்ந்திருக்கிறாள் மோனிக்கா.

"பிறர் மாறவேண்டும் என்று நாமும் பிடிவாதமாக மாறாது இருந்தால் பிரச்சனைகளும், சிக்கல்களும், அது தொடர்பான கவலைகளும்தான் மிஞ்சும். நாமும் நம்மை மாற்றிக் கொள்ள முன்வந்தால் நாம் எதிர்பாராத சந்தோசங்கள் எங்களை மூடி மேகமாய் கவியலாம். எங்களை திக்குமுக்காடச் செய்யலாம்.



மோனிக்காவின் தர்யார்

அதனைத்தான் நான் அனுபவ பூர்வமாக அன்று உணர்ந்தேன்" என்று நினைவு கூர்ந்திருந்தாள் மோனிக்கா.

தந்தையார் லிவின்ஸ்கியையும், சிறிய தாயாரையும் பார்த்துவிட்டு வந்ததைத் தாயாரிடம் கூறினாள் மோனிக்கா.

தாயாருக்கு கோபம் வரும் என்று எதிர் பார்த்த மோனிக்காவுக்கு ஏமாற்றம் தான் முகத்தில் அறைந்தது.

"அப்படியா?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்ட தாயார், "உன் சிறிய தாயார் எப்படி இருக்கிறார்கள்?" என்று எவ்வித குரோதமும் இல்லாமல் கேட்டாள்.

மோனிக்காவுக்கு கேட்கவேண்டும் என்று தோன்றியதை கேட்டு விட்டாள்: "ஏன் அம்மா, உனக்கு வருத்தம் இல்லையா? சித்திமீதும் அப்பா மீதும் கோபம் இல்லையா?"

அம்மா தன் தோள்களைக் குலுக்கிக்கொண்டு வெகு அலட்சியமாகப் பதிலளித்தாள். "இல்லை இல்லவே இல்லை!"

மோனிக்கா கல்லூரியில் கூடுதல் நேரத்தைச் செலவிட்டதால் இக்கால கட்டத்தில் பிளேய்லரை அடிக்கடி சந்திக்க முடியவில்லை.

எப்போதாவது சந்திக்கும் போது பிளேய்லர் அவளிடம் மிக ஆசையாக நடந்து கொள்ளுவான். மோனிக்காவும் அவனுக்குத் தாராளமாக அனுமதித்தாள்.

கல்லூரியிலும் மோனிக்காவுக்கு ஒரு மாணவ நண்பன் கிடைத்தான். அவன் கூச்ச சுபாவம் உள்ளவன். அலன் என்பது அவனது பெயர்.

பெண்களைக் கண்டால் கூச்சப்பட்டு விலகும் அவனது சுபாவம் மோனிக்காவைக் கவர்ந்தது.

விலகிப்போன, ஒதுங்கிப் போன அவனை மோனிக்கா நாடிப்போனாள். அவனை சிற்றூண்டி விடுதிக்கு அழைத்துப் போவாள். நூலகத்திற்கு கை கோர்த்துச் செல்லுவாள்.

## நண்பனின் சோகம்

மோனிக்காவின் நட்பால் அவனது கூச்ச சுபாவம் விலகிக்கொண்டிருந்தது.

ஒருமுறை அவனை தனது ஜீப்பில் ஏற்றிச் சென்றாள் மோனிக்கா. அவனுக்கு வாகனம் செலுத்தத் தெரியாது. மோனிக்கா ஜீப்பை வேகமாக செலுத்துவதை பிரமிப்போடு பார்த்துக்கொண்டு இருந்தான்.

### சீண்டல்

மோனிக்கா ஜீப்பை ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் நிறுத்தினாள். அது காதலர்கள் தனிமையில் சந்திக்கும் பகுதி.

ஆங்காங்கே பல கோணங்களில் ஒருவர் பிடியில் ஒருவராக, ஒருவர் மடியில் ஒருத்தராக, மேலும் விபரிக்க முடியாத நெருக்கங்களில் எல்லாம் ஜோடிகள் குலாவிக் கொண்டிருந்தன.

மோனிக்கா தன் அருகே இருந்த அலனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

அவனுக்கு முகமெல்லாம் பெண்கள் போன்று சிவந்து போனது. மோனிக்காவுக்கு அவனைச் சீண்டிப்பார்க்க ஆசையாக இருந்தது.

அவனது தொடையில் கைவைத்து கிறங்கடிக்கும் புன்னகை ஒன்றை உதிர்த்தாள்.

அவன் அவளது கையை விலக்க முயன்றான். மோனிக்கா கட்டாயமாக கையை மேலே கொண்டுசெல்ல, அவன் ஓங்கி அவளது கன்னத்தில் அறைந்துவிட்டான்.



நண்பியுடன் மோனிக்கா

மோனிக்கா இதனை எதிர்பார்க்கவில்லை. அவனுக்கும் வியர்த்து சட்டையெல்லாம் தொப்பலாய் நனைந்திருந்தது. அவனது கை கால்கள் நடுங்கின.

ஜீப்பைவிட்டு இறங்க முயன்றவனை கையைப்பிடித்து இழுத்து நிறுத்தி, "ஏன், உனக்குப் பிடிக்கவில்லை என்றால் சொல்ல வேண்டியதுதானே? ஏன் அடித்தாய்? சொல்லி விட்டுப்போ!" என்றாள்.

அவன் திடீரென்று ஒரு குழந்தைபோல அழத்தொடங்கிவிட்டான். அவனை ஆதரவாக தோளில் தொட்ட மோனிக்கா நேரடியாக கேட்டாள்: "என்ன உன் பிரச்சனை?"

அவன் சொன்ன பதில் மோனிக்காவை தூக்கிவாரிப்போட்டது.

"நான் ஆணுமல்ல பெண்ணுமல்ல" என்றான் விம்மல்களுக்கிடையே.

மோனிக்கா தவித்துப்போனாள்.

(வருவாள்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | எஸ். விஜி, 1215, பாலையூற்று, திருகோணமலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்






சக்தி தனக்கே கருவியாக்கு-அது
சக்தியினை எத்திசையும் சேர்க்கும்-
மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-அது
தான் விரும்பில் மாமலையைப் போக்கும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# விநோத வாத்து



ஒரு குளத்தில் வாத்து ஒன்று வாழ்ந்து வந்தது. அது மிகவும் பேராசை கொண்டது.

ஒருநாள் அன்னப்பறவை ஒன்று அந்தக் குளத்திற்கு வந்தது. அதன் நீண்ட கழுத்தைப் பார்த்து, தனக்கும் அதைப் போல் கழுத்து இருந்தால் எப்படி இருக்கும் என நினைத்தது.

மறுநிமிடம் அதன கழுத்து, அன்னத்தின் கழுத்துப் போல் மாறியது. அது கர்வத்துடன் நடந்து சென்றது. அப்போது, அலகு பெரிதாக உள்ள பறவை ஒன்றைப் பார்த்தது.

அதேபோன்ற அலகு தனக்கும் வேண்டும் என நினைத்தது. அலகும் வந்தது. சந்தோஷத்துடன் நடையைக் கட்டியது வாத்து. வழியில் ஒரு கொக்கைப் பார்த்தது.

கொக்கின் கால்களைப் போல் தனக்கும் நீண்ட கால்கள் வேண்டும் என நினைத்தது. அதன் கால்கள் கொக்கின் கால்களைப் போல் மாறின.

சிறிது தூரத்தில் மயில் ஒன்று தனது வண்ணத் தோகையை விரித்து நடனமாடிக் கொண்டிருந்தது. தனக்கும் மயிலைப்போல் தோகை வேண்டும் என்று நினைக்க, அதற்குத் தோகை வந்தது.

அப்போது சேவல் ஒன்று கூவியது. கூவிய சேவலின் கொண்டையைப் பார்த்து ஆசை கொண்டது. உடனே அதன் தலையில் அழகான கொண்டை ஒன்று தோன்றியது.

இப்போது விநோதப் பறவையாக மாறிவிட்டது வாத்து. அதன் தோழர்கள் எல்லாரும் விநோத வாத்தைப் பார்த்து அதிசயித்தன.

ஆனால் முன்பைப் போல விநோத வாத்தினால் சரியாக உணவு உண்ண முடியவில்லை. நீர் அருந்த முடியவில்லை.

நீண்ட கால்கள், பெரிய அலகு, பாரமான தோகையைக்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டது வாத்து.

அந்த நேரத்தில் நரி ஒன்று அங்கு வந்தது. விநோத வாத்தைக் கண்டதும் அதனைக் கொல்ல ஓடி வந்தது.

விநோத வாத்தால் ஓட முடியவில்லை. சறுக்கி விழுந்துவிட்டது. அப்போது மற்ற வாத்துக்கள் ஓடி வந்து நரியைக் கொத்தித் துரத்தி விட்டன.

ஒருவழியாக விநோத வாத்து நரியிடமிருந்து உயிர் தப்பியது.

'எனது பேராசையால்தானே இவ்வளவு கஷ்டமும் ஏற்பட்டது,' என்று நினைத்துக் கண்ணீர் விட்டது வாத்து.

'பழைய வாத்தாக இருப்பதே போதும். இந்த விநோத உருவம் வேண்டாம்!' என்று நினைக்க, மறுநிமிடம் பழையபடி வாத்தாக மாறியது.

அன்றுமுதல் பேராசையை விட்டொழித்து போதுமென்ற மனதோடு சந்தோஷமாக வாழ்ந்தது வாத்து.

## அதிசயம் - ஆனால் உண்மை!



→ இந்தியாவின் சென்னையில் இருந்த சேர்.எட்வேர்ட் வின்டர் என்ற ஆங்கிலத் தளபதி ஒரு முறை பெரும்புலி ஒன்றை கழுத்தை நெரித்துக் கொன்றார்.



↑ சுமாத்திராத் தீவுக்காக 4ம் நூற்றாண்டில் ஜாவாவுக்கும், மலாயாவுக்கும் இடையே நடந்த போரின்போது இரண்டு பக்கத்திலிருந்தும் ஒவ்வொரு எருமையை விட்டு சண்டையிட வைத்தனர். இச்சண்டையில் மலாயா எருமை வென்றதால், சுமாத்திரா அவர்களுக்கு வழங்கப்பட்டது.



→ ஸ்பானிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் 1483ல் அளித்த விருந்தின்போது அனா-டி-மென்டோஸா என்ற பெண்ணின் கையுறை சிங்கங்கள் நிறைந்த கிடங்கில் விழுந்துவிட்டது.

அந்தப் பெண் அந்தக் கிடங்கில் குதித்து எவ்வித ஊறுமின்றி கையுறையை எடுத்துவந்தார்.

## கொடி பிறந்த கதை



முற்காலத்தில் மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்தபோது, ஒவ்வொரு கூட்டத்தினரும் தாம் எந்தக் கூட்டத்தவர் என்று காட்டுவதற்கும், இடம்விட்டு இடம் செல்லும்போது தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளவும் முதன் முதலில் கொடியை உபயோகித்தார்கள்.


இந்த வழக்கமே பிற்காலத்தில் நாடுகள் உருவானபோது ஒவ்வொரு நாட்டுக்கும் அடையாளச் சின்னமாக கொடி இருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

சில நாடுகளின் கொடிகளில் அந்நாட்டின் மதம் மற்றும் பிரதான தொழிலைக் குறிக்கும் விதத்தில் அடையாளச் சின்னங்கள் அமைந்திருக்கும். போர்த்துக்கல் நாட்டுக் கொடியில் கப்பல் உபகரணங்களின் படங்கள் இடம்பெற்றிருக்கும்.

அதேபோன்று இஸ்லாமிய நாடுகளின் கொடிகளில் பிறையும் நட்சத்திரமும் இடம்பெற்றிருக்கும். ரஷ்ய நாட்டுக் கொடியில் தொழிற் புரட்சியைக் குறிக்கும் வகையில் அரிவாளும், சுத்தியலும் உள்ள படம் இடம்பெற்றிருக்கும்.

ஜூலை மாதம் 4ம் திகதி 1776ம் ஆண்டு அமெரிக்கா சுதந்திரமடைந்தது. அதை அறிவிக்கும் பொருட்டு கொடி ஏற்றப்பட்டது. அதிலிருந்தே சுதந்திர தினத்தன்று கொடி ஏற்றும் வழக்கம் உலக நாடுகளில் பரவியது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.09.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 314
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 312

பரிசுக்குரியவர்:
ஸ்ரீஸ்கந்தராஜா வினோதன்,
ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ர. கஜந்தினி, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | எவ். ஷிவ்னா முஸம்மில், அமினா தேசிய பாடசாலை, மாத்தளை. |
| தர்மிக்கா-தர்மதாஸ், மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்னார். | மாணிக்கராசா ஜசோதரன், விபுலானந்தா த.ம.வித்தியாலயம், திருகோணமலை. |
| பா. சகிலா, ஹோல் புறூக் த.ம.வித்தியாலயம், அக்கரப்பத்தனை. | போல் தேவரஞ்சன் ரஞ்சித், சாகிராக் கல்லூரி, மாத்தளை. |
| பர்ஸானா ரவூப், இ/பலாங்கொடை, தமிழ் மகா வித்தியாலயம். | பி. கிசோக்குமார், கிரான்லி த.பாடசாலை, அக்கரப்பத்தனை. |
| எஸ்.அஷ்ஃபக் மௌலானா, வேலுவன வீதி, கொழும்பு-09. | ச. குணதீபன், நு/நட்போர்ன் த.வி. டயகம. |

## விடுகதைகளும் விடைகளும்

1. குட்டிக் குதிரைக்கு நூற்றியெட்டு கடிவாளம்.
அது என்ன?
2. அழுது கொண்டே ஒளி தருவாள்.
அவள் யார்?
3. ஒற்றைக் கால் குள்ளனுக்கு எட்டுக் கை.
அது என்ன?
4. பந்தலிலே தொங்குதடி பாம்புக் கூட்டம்.
அது என்ன?
5. குண்டு முழி ராசாவுக்கு குடலெல்லாம் பல்.
அது என்ன?
6. முள்ளுக்குள்ளே முத்துக் குவியல்.
அது என்ன?
7. சலசலப்பாள், சந்தைக்குப் போவாள்.
அவள் யார்?
8. சின்னச் சிட்டுக்கு எட்டு முழச் சேலை.
அது என்ன?
9. வெள்ளை மாளிகைக்கு உள்ளே செல்ல வழியில்லை.
அது என்ன?
10. அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள்.
அது என்ன?

### விடைகள்

1. தறி
2. மெழுகுவர்த்தி
3. குடை
4. புடலங்காய்
5. மாதுளம் பழம்
6. பலாப்பழம்
7. செத்தல் மிளகாய்
8. வெங்காயம்
9. முட்டை
10. அம்மி-குளவி.

## அல்பட்ரோஸ் (ALBATROSS)



கடற்கரையோரங்களில் வசிக்கும் பறவைதான் அல்பட்ரோஸ். கடற்பறவைகளில் மிக நீளமான இறக்கைகளைக் கொண்டது அல்பட்ரோஸ் பறவைதான். இதன் இறக்கை நீளம் 9.8 அடி ஆகும்.

அல்பட்ரோஸ் பறவை ஒரே ஒரு முட்டைதான் இடும். அடைகாக்கும் பொறுப்பை ஆண்பறவைகளே ஏற்றுக் கொள்ளும். 79 நாட்கள் அடைகாத்த பின்னர் குஞ்சு பொரிக்கும். 34 வாரங்களுக்குப் பின்னரே குஞ்சு பறக்க ஆரம்பிக்கும்.

இவை முழுவளர்ச்சி அடைவதற்கு 5 வாரங்கள் ஆகின்றன. அல்பட்ரோஸ் பறவைகளுக்கு மிகவும் பிடித்த இரை மீன்கள்தான். குறிப்பாக ஸ்குவிட் மீன்கள்.

தமக்கு இரை கடற்பகுதியில் கிடைப்பதால் கடற்கரையோரமுள்ள மலைப்பாங்கான முகடுகளில் இவை கூடு கட்டிக் கொள்கின்றன.

அல்பட்ரோஸ் பறவைகள் தென் துருவத்தில்தான் அதிகம் காணப்படுகின்றன.

## யாங்ஷே நதி



நைல் நதி, அமேசன் நதிகளுக்கு அடுத்தாற்போல் உலகின் மிகப் பெரிய 3வது நதி யாங்ஷே நதி. இதன் நீளம் 6380 கிலோமீட்டர்.

திபெத்-சீனாவின் கின்சாட் மாகாண எல்லையில் இது உற்பத்தியாகி சீனாவின் ஷங்காய் நகர் அருகே, கிழக்கு சீனக் கடலில் போய்க் கலக்கிறது.

அகன்ற, ஆழமான இந்த நதியில் நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் கப்பல், படகு போக்குவரத்துக்கு பெரிதும் உதவியாக உள்ளது. கடந்த நூற்றாண்டுவரை சீனாவின் பெரும்பகுதி வர்த்தகப் போக்குவரத்து இந்த நதியின் வழியாகத்தான் நடந்துள்ளது.

யாங்ஷே நதி பல்வேறு மலை இடுக்குகளில் பாய்ந்து ஓடுவதால் இது உலகின் மிக அழகிய நதிகளில் ஒன்றாகவும் இருக்கிறது.

அத்துடன் பென்ஜி என்னுமிடத்தில் 190 கிலோமீட்டர் வரை மிக செங்குத்தாக இந்நதி பாய்கிறது. அப்போது கியூடாங், வூ, ஷிலிங் ஆகிய 3 மலை முகடுகளையும் இது கடக்கிறது.

மழைக்காலத்தில் யாங்ஷே நதியின் நீர்மட்டம் சிடுகிடுவென உயர்கிறது. இந்நதியின் குறுக்கே உலகிலேயே மிகப் பிரமாண்டமான அணை ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது.

## புதையுண்ட ஊர்

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் தாலக்குடி என்ற ஊர் உள்ளது. மிகப் பழமையான இந்த ஊரின் பெரும்பகுதி மணலால் மூடப்பட்டிருக்கிறது. மக்கள் வாழும் பகுதிகள் மணலால் மூடிக்கிடப்பதால் இங்குள்ளவர்கள் இந்த ஊரை விட்டு வேறிடத்தில் குடியேறி விட்டார்கள்.



இங்கு 15 மீட்டர் உயரத்திற்கு மணல் குவிந்துள்ளது. இங்குள்ள கோவில் ஒன்றும் மணலால் மூடப்பட்டுள்ளது. இருப்பினும் காலை வேளைகளில் மணல் படுகை குறைந்து பக்தர்கள் வர வழி ஏற்படுகிறது. மாலை வேளைகளில் மறுபடி மணல் மூடிக்கொண்டுவிடுவதுதான் பெரிய அதிசயம்.

இந்த ஊருக்கு சற்றுத் தூரத்தில் காவிரி நதி ஓடுவதால், அதன் கரைப்பகுதியில் உள்ள இந்த ஊரில் மணல் குவிகிறது என்கின்றனர். இப்பகுதியில் பலமான காற்று வீசுவதாலும் மணல் அதிக அளவில் பரவ ஒரு காரணமாகிறது.

www.padippakam.com

# கைவிட்டுச் சிக்கிய மின்னல் 21



> **இதுவரை**
> பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. வர்ணாவிடம் உள்ள அதிசய சக்திதான் அதற்கு காரணம் என்று டாக்டர்கள் நினைக்கின்றனர். சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலை தொடர்பான விசாரணையும் மறுபுறம் சூடுபிடிக்கிறது.. **இனி...**

"என் பேர் பிரதாப்...!" டெலிஃபோன் மறுமுனையில் ஒலித்த குரலைக் கேட்டதும் டாக்டர் ஒரு பெரிய மலர்ச்சிக்கு உட்பட்டார்.

"பிரதாப்... உங்களைப் பத்தித்தான் இப்போ பேசிட்டிருக்கோம்.. ஆமா... இப்போ நீங்க எங்கேர்ந்து பேசிட்டிருக்கீங்க... வெளியூரா... லோக்கலா...?"

"லோக்கல்தான்... கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் கல்கத்தாவிலிருந்து திரும்பினேன். பூவிழியோடு பேச நினைச்சு அவ ஆபீசுக்கு ஃபோன் பண்ணினேன். அவ கொலை செய்யப்பட்ட விவரம் தெரிந்ததும் எனக்கு பயங்கர ஷாக். கேஸை யார் இன்வெஸ்டிகேட் பண்றாங்கன்னு தெரிஞ்சுக்கறதுக்காக போலீஸ் ஸ்டேஷனுக்கு ஃபோன் பண்ணி பேசின போதுதான் இன்ஸ்பெக்டர் பலராமனும் பூவிழியோட அப்பாவும் உங்களைப் பார்த்து பேசறதுக்காக ஹாஸ்பிடல் புறப்பட்டு, போயிருக்கிறதாக தகவல் சொன்னாங்க. உடனே உங்களுக்கு ஃபோன் பண்ணிட்டேன். பூவிழி கொலை சம்பந்தமா இன்ஸ்பெக்டர் பலராம்ன்கிட்ட பர்சனலா ஒரு விஷயம் சொல்லணும்."

"இன்ஸ்பெக்டர் கிட்ட ரிஸீவரைத் தர்றேன். பேசுங்க...!" சொன்ன டாக்டர் சந்திராதேவி பலராமனிடம் ரிஸீவரை நீட்ட அவர் வாங்கி காதுக்கு ஒட்ட வைத்து "ஹலோ!" என்றார்.

"ஸார் நான் பிரதாப். பூவிழியும் நானும் ஒருத்தருக்கொருத்தர் உயிர்க்கு உயிரா நேசிச்சிட்டிருந்தோம். பட் கொஞ்ச நாளாவே அவ என்னை விட்டு விலகிப் போக ஆரம்பிச்சா...!"

"காரணம்?"

"தெரியலை ஸார். ஆசையோடு பேசப் போனா பூவிழி முகத்தைத் திருப்பிக்கிட்டு போயிடுவா. காரணம் தெரியாமே இப்பகூட குழம்பிக்கிட்டிருக்கேன்..."

பலராமன் பேச்சில் குறுக்கிட்டு அவசரக் குரலில் கேட்டார்.

"பிரதாப்...! பூவிழியோட நடத்தையில் நீங்க என்னிக்காவது சந்தேகப்பட்டதுண்டா...?"

"சந்தேகப்பட்டதில்லை. காரணம் அவ ரொம்பவும் ஜோவியல் டைப். எல்லார்கிட்டேயும் சிரிச்சுப் பேசுவா. அதை நானும் தப்பா எடுத்துக்கிட்டதில்லை..."

"சரி... பிரதாப்! பூவிழி கொலை செய்யப்பட்டதுக்கு யார் காரணம்... என்ன காரணம்னு உங்களுக்குத் தெரியுமா?"

"யார் காரணம்னு எனக்குத் தெரியாது ஸார். பட் ஏன்ன காரணம்னு தெரியும்."

"சொல்லுங்க... என்ன காரணம்?"

"அதை ஃபோன்ல சொல்லிட்டிருக்க முடியாது ஸார். உங்களை நேரில பார்த்துத்தான் சொல்லணும்."

"சரி... உடனே புறப்பட்டு ஹாஸ்பிடலுக்கு வாங்க... உங்களுக்காக நான் இங்கு வெயிட் பண்ணிட்டிருக்கேன்... ஒரு அரைமணி நேரத்துக்குள்ளே வந்துடுவீங்களா...?"

"வந்துடறேன்... ஸார்"

"நீங்க வந்து ஏதாவது தகவல் சொன்னாத்தான் பூவிழியோட கொலைக் கேஸுக்கு ஒரு விமோசனம் பிறக்கும்."

இன்ஸ்பெக்டர் பலராமன் ரிஸீவரை வைத்துவிட்டு இரண்டு கைகளாலும் மோவாயைத் தாங்கிக் கொண்டு டாக்டர் சந்திராதேவியையும் நீலமேகத்தையும் பார்த்தார்.

"பிரதாப் இன்னும் அரைமணி நேரத்துல இங்கே வந்து பூவிழி கொலை செய்யப்பட்டதுக்கான காரணத்தைச் சொல்லப் போறான். அவன் சொல்லப் போகிற விஷயத்தை வெச்சுத்தான் கொலையாளியை ட்ரேஸ் பண்ணியாகணும்."

காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

நேரம் பந்தயக் குதிரையாய் ஓடியது.

☎ ✚ ☛

வர்ணா தயக்க நடையோடு திலகத்துக்கு அருகே போய் நின்று வெளிறித் துவண்டு போயிருந்த அவளுடைய கையைப் பற்றினாள்.

திலகத்தின் உடலில் எந்த அசைவும் நிகழவில்லை. அதே இறுகிப்போன முகம்.

டாக்டர் ரத்னவேல் பின்பக்கமிருந்து மெல்லக் குரல் கொடுத்தார்.

"அந்த அம்மாவுக்கு தைரியம் சொல்ற மாதிரி ரெண்டொரு வார்த்தை பேசு வர்ணா..." வர்ணா தலையசைத்து விட்டு, திலகத்தின் கையை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டு மெல்லக் கூப்பிட்டாள்.

"அம்மா..."

"....." திலகம் அப்படியே கிடக்க வர்ணா தொடர்ந்தாள். "அம்மா...! உங்களுக்கு உடம்பு சீக்கிரமே குணமாயிடும். தைரியமா இருங்கம்மா..."

ரத்னவேல் பின்னாலிருந்து குரல் கொடுத்தார்.

"இன்னொரு தடவை சொல்லும்மா..." வர்ணா சொன்னாள்.

"அம்மா... உங்க மகன் கல்யாணத்தை நீங்க கண்டிப்பா பார்ப்பீங்க. உங்களுக்கு சீக்கிரமே உடம்பு குணமாயிடும்."

திலகம் அசைவில்லாமல் அப்படியே கிடக்க, ராஜ் நாராயணன் டாக்டர் ரத்னவேலை சின்னதாய் ஒரு அவநம்பிக்கை பார்வை பார்த்தார்.

"என்ன டாக்டர் ஏதோ அற்புதம் நிகழும்னு சொன்னீங்க. இந்தப் பொண்ணு தொட்ட பின்னாடியும் உடம்புல ஒரு சின்ன அசைவு கூடத் தெரியலையே...?"

"அதான் எனக்கும் ஆச்சர்யமாயிருக்கு. எதுக்கும் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப் பார்க்கலாம்." சொன்ன ரத்னவேல் வர்ணாவைத் திரும்பிப்பார்த்தார்.

"வர்ணா...! இன்னும் ஒரு தடவை அந்த அம்மாவோட கையைப் பிடிச்சுகிட்டு மனப்பூர்வமா அந்த வார்த்தைகளைச் சொல்லிப்பாரம்மா..."

வர்ணா முகம் சிவந்தாள். "ஸாரி டாக்டர்! என்கிட்ட ஏதோ திறமை இருக்குன்னு நீங்களாகவே நினைச்சுகிட்டு என்னை உங்க இஷ்டப்படி ஆட்டி வைக்கிறதுக்கு நான் ஒன்னும் விளையாட்டு பொம்மை கிடையாது. ஒருத்தர் உயிர்வாழறதுக்கு நிச்சயமா நான் காரணமா இருக்க முடியாது. இந்த அம்மா உயிர் பிழைக்கறதும் பிழைக்காததும் அந்த ஆண்டவன் கையில இருக்கு. ப்ரே பண்ணுங்க. விதிப்படி எது நடக்குமோ அது நடந்துட்டு போகட்டும். நான் வர்றேன்."

வர்ணா படபடவென்று பொரிந்து விட்டு கிளம்ப முயல ரத்னவேல் கைநீட்டி மறித்தார்.

"இரும்மா... நானே உன்னை கார்ல கொண்டு போய் ட்ராப் பண்ணிடறேன்."

"வேண்டாம் டாக்டர்... என்னோட வீட்டுக்குப் போக எனக்கு வழி தெரியும். நான் வர்றேன்..."

ராஜ்நாராயணன் ஏதோ பேச முற்பட வர்ணா கையமர்த்தினாள்.

"ஸாரி ஸார்... நான் யார் கிட்டேயும் எதையும் பேசத் தயாராயில்லை."

ரிவால்வரிலிருந்து பீறிட்ட தோட்டா மாதிரி வேகமாய் நடைபோட்டு அறையினின்றும் வெளிப்பட்ட வர்ணா மாடிப்படிகளில் சரிந்து பங்களாவை விட்டு வெளியே வந்து ஓர் ஆட்டோவைத் தேடினாள்.

கிடைக்கவில்லை.

பக்கத்துத் தெரு முனையில் பஸ் ஸ்டாப்பைப் பார்த்ததாக ஞாபகம்.

நடந்தாள்.

பத்து நிமிஷ நடை.

பஸ் ஸ்டாப் வந்தது. ஒரு இரண்டு நிமிஷம் காத்திருப்பதற்குள் டவுன் பஸ் ஒன்று வர ஏறிக்கொண்டாள். கூட்டமில்லாத பஸ்ஸில் ஜன்னலோரம் வசதியாய் சீட் கிடைக்க உட்கார்ந்து கொண்டாள்.

பஸ் வேகம் பிடித்து காற்றை இறைத்தது. நிறுத்தங்களில் நின்று சிலரை உதிர்த்து சிலரை ஏற்றிக் கொண்டது.

வர்ணாவின் மனசுக்குள் இப்போது கோபம் ஒரு குத்தீட்டி மாதிரி சொருகிக் கொண்டு அவளை ஒரு பதட்டத்துக்கு உட்படுத்தியிருந்தது.

'டாக்டர் ரத்னவேலின் பேச்சைக் கேட்டுக்கொண்டு ராஜ் நாராயணனின் பங்களாவுக்கு போயிருக்கக் கூடாது. என்னிடம் எந்த சக்தியும் கிடையாது. நாய்க்குட்டி பிங்கியும் எதிர்வீட்டு பார்கவியும் உயிர் பிழைத்தது தெய்வச் செயல். இது என்னால் நிகழ்ந்தது என்று மனசால் நினைப்பதுகூட பாவம். ராஜ் நாராயணனின் பங்களாவுக்குப் போய் ஏதோ கடவுளின் அவதாரமாக என்னை நினைத்துக் கொண்டு அந்த அம்மாவைத் தொட்டுப்பேசியது பெரிய முட்டாள்தனம்!

யோசனையில் முப்பது நிமிஷங்கள் கரைந்து போயிருக்க வர்ணா இறங்க வேண்டிய பஸ் ஸ்டாப் வந்தது. இறங்கிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

"எங்கே போனாய்?" என்று அம்மா கேட்பாள். பொருத்தமாய் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்ல வேண்டும். இல்லா விட்டாள் அம்மா குடைந்து எடுத்து விடுவாள்.'

'என்ன பொய்யைச் சொல்லலாம்?'

மூளையைக் கசக்கிக்கொண்டே நடந்து தன் வீட்டு தெருமுனைக்கு வந்த வர்ணாவின் பார்வை அவளுடைய வீட்டு வாசலில் நின்றிருந்த அந்த நீளமான பென்ஸ் காரைப் பார்த்ததும் சூடுபட்ட கண்ணாடித் தாளாய் சுருண்டது.

'இது யாருடைய கார்?'

வியப்பு முளைத்துக்கொண்ட இருதயத்தோடு வேகமாய் வீட்டை நோக்கிப் போக வாசலில் அம்மா பாக்யம் பதட்டமாய்த் தெரிந்தாள்.

வர்ணாவைப் பார்வையில் வாங்கியதும் தன் வயதையும் மறந்து ஒரு சின்னக் குழந்தையைப் போல் ஓடி வந்தாள்.

'அம்மாவின் முகத்தில் இருப்பது பயமா சந்தோஷமா...?'

படிக்க முயன்றாள்.

முடியவில்லை.

**(தொடர்ந்து வரும்)**



**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஷ்குமார்**

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**


# தர்மயுத்தம் 06

அன்று நான் ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டிருந்தேன். அரசியல் முக்கியஸ்தர்களும், கலையுலகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்ட விழா அது.

மாலை 6.30க்கு விழா துவங்கும் என்று அழைப்பிதழில் அச்சிடப்பட்டிருந்தது. என்னை எப்படியும் ஏழு மணிக்குள் வரச் சொல்லிக் கேட்டுக் கொண்டார்கள். ஏழு மணிக்குத் துவங்கினால்தான் 9 அல்லது 9.30க்கு நிகழ்ச்சி முடியும். பஸ் பிடித்து வீட்டுக்குப் போகிறவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று சொன்னார்கள்.

நான் மாலை 6 மணிக்கெல்லாம் புறப்படத் தயாரானேன். போக்குவரத்து நெரிசலில் போராடி போய்ச்சேருவதற்கு ஒரு மணி நேரம் ஆகும் என்பது எனக்குத் தெரியும். காரை எடுத்து காம்பவுண்டுக்கு வெளியே நிறுத்தச் சொல்லிவிட்டு, காலில் செருப்பை மாட்டிக் கொண்டு, படியிறங்கி வெளியில் வந்தேன். என்ன கோபமோ தெரியவில்லை, கார் நகர மறுத்தது.

அதைத் தட்டிக்கொடுத்து, சமாதானப் படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல தடவை பானட்டைத் திறந்து மூடினார்கள். பெட்ரோல் இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்தார்கள். முன்னும் பின்னும் தள்ளினார்கள். அவரவருக்குத் தெரிந்த கார் மெக்கானிஸம் அனைத்தும் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன. எந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.



## பலி உணர்வு

எனது பழைய கார், தான் திடீரென்று மேற்கொண்ட வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதாக இல்லை. 'இன்று ஸ்டார்ட் ஆவதில்லை' என்ற கொள்கையில் அது உறுதியாக இருந்தது!

காலம் யாருக்காகவும் காத்திருக்காது என்பார்கள். என் காருக்காகவா அது காத்திருக்கப் போகிறது? மணி ஏழு. இனிமேல் புறப்பட்டு எப்போது போய்ச் சேருவது?



### ஆட்டோ

சினிமாக்காரர்கள் என்றால் நேரத்திற்கு வரமாட்டார்கள் என்று பெயர் உண்டு. அதை நிரூபிப்பது போல் இருந்தது என் நிலைமை.

போன் பண்ணிச் சொல்லிவிடலாம் என்று நினைத்தேன். அழைப்பிதழில் பெயர் போட்டிருந்தார்கள். நான் போகவில்லை என்றால் ஒட்டுமொத்த சினிமாக்காரர்களுக்கும் திட்டு கிடைக்கும். தாமதமானாலும் பரவாயில்லை; எப்படியும் போய்விடுவது என்று முடிவெடுத்தேன். ஒரு ஆட்டோ கொண்டு வரச் சொன்னேன்.

ஆள் பறந்தது. ஆட்டோ கொண்டுவரச் சொல்லிவிட்டேனே தவிர, மனதுக்குள் குழப்பம். ஆட்டோ ஓட்டுநர் நல்லவராக இருக்க வேண்டும்; மீட்டர் சூடு இதமாக இருக்க வேண்டும்; மேடு பள்ளங்களில் மெதுவாகச் செல்லவேண்டும்; மின்னல் வேகத்தில் பறந்து, போக்குவரத்து விதிகளை மறந்து, சந்து பொந்துகளில் நுழைந்து, தனது ஆட்டோ ஓட்டும் திறமையை வெளிப்படுத்தாமல் இருக்கவேண்டும்; எல்லாவற்றுக்கும் மேலாக இடையில் புகுந்து போகும் சைக்கிள்காரர்களுடன் சென்னை பாஷையில் சண்டை போடாமல் இருக்க வேண்டும்.

இவையெல்லாம் வரப்போகும் ஆட்டோவைப் பற்றி எனது எதிர்பார்ப்புகள். நம் நாட்டில் எந்த சராசரி இந்தியனின் எதிர்பார்ப்புகள் நிறைவேறியிருக்கின்றன, என்னுடையது நிறைவேற! விதி விட்ட வழி என்று மனதைத் தேற்றிக்கொண்டேன்.

ஆட்டோ வந்தது. ஓட்டுநரைப் பார்த்தேன். இளைஞராக இருந்தார். காக்கிச் சீருடை சுத்தமாக இருந்தது. எப்படிப்பட்டவர் என்பது தெரியவில்லை. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்களே என்று முகத்தைப்பார்த்தேன். முகம், எதுவுமே எழுதப்படாத கரும்பலகையாக இருந்தது.

ஏறி உட்கார்ந்தேன். போகவேண்டிய இடத்தைச் சொன்னேன். வண்டி புறப்பட்டது.. நான் எதிர்பார்த்த மின்னல் வேகத்தைக் காணோம். நிதானமாகவே சென்றது. நான் இருந்த மனநிலையில் சற்று வேகமாகப் போனால் நல்லது என்று எனக்கே தோன்றியது. ஆனால் சொல்லவில்லை. அதுவே வம்பாகிவிடக் கூடாதல்லவா!

அடுத்தடுத்து ஆச்சரியங்கள் காத்திருந்தன எனக்கு. ஸ்பீட் பிரேக்கர் இருந்த இடங்களில் மெதுவாக ஏறி இறங்கினார். பின்னால் வந்த வாகனங்களுக்கு ஓரமாக ஒதுங்கி வழி கொடுத்தார். சிக்னல் உள்ள இடங்களில் அந்தந்த விளக்குகளுக்குத் தரவேண்டிய மரியாதையைத் தந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

### ஆச்சரியம்

சென்னையில் இப்படியும் ஒரு ஆட்டோ ஓட்டுநரா என்று அவரிடம் மரியாதை பிறந்தது. திரும்பி வருவதற்கு இதே மாதிரி ஒரு ஆட்டோ கிடைக்குமா? ஏன் இவரையே கேட்டால் என்ன? இதற்குள் நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு வந்துவிட்டோம்.

வெளியில் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் காத்திருந்தார்கள். தாமதத்திற்கான காரணத்தை அவர்களிடம் கூறிவிட்டு, ஆட்டோ நண்பரைக் கூப்பிட்டேன். "உங்களுக்கு வெயிட்டிங் சார்ஜ் குடுத்துர்றேன். உள்ளே வந்து நிகழ்ச்சிகளைப் பாருங்க. முடிஞ்சதும் என்னை வீட்டுல விட்டுருங்க. என்ன பணம் வேணுமோ குடுத்துர்றேன்." என்றேன்.

அவர், "இல்லை சார், நான் நைட்ல ரொம்ப நேரம் வண்டி ஓட்டுறதில்ல. இப்ப உங்களை எறக்கி விட்டுட்டு நேரா ஷெட்டுக்குத்தான் போறேன்." என்றார்.

எனக்கு அவரை விட, மனம் வரவில்லை. நான் வற்புறுத்தினேன். "சரி, சார், எத்தனை மணிக்கு ப்ரோகிராம் முடியும்?" என்றார். "9லிருந்து 9.30மணிக்குள் முடியும்" என்றேன். "நான் அந்த இடத்துல வந்து நிக்கிறேன்" என்று ஒரு இடத்தைக் காட்டினார்.

நான் அவரை ஹாலுக்குள் அழைத்தேன். உடனே அவர், சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரில் இருந்த படங்களைக் காட்டி, "இவனுக மூஞ்சியெல்லாம் நான் பார்க்கவே விரும்பல்ல சார். 9க்கெல்லாம் வந்துர்றேன்." என்று வண்டியை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்.

நான் போஸ்டரைத் திரும்பிப் பார்த்தேன். நல்லவேளை, அந்த போஸ்டரில் என் மூஞ்சி இல்லை. அந்த ஓட்டுநரிடம் ஏதோ விஷயம் இருப்பதாக எனக்குத் தோன்றியது.

(அனுபவங்கள் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்–
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மறைந்த உறங்கும்
எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன்

## 03

அவனுடைய நண்பர்களிடம் வெடி குண்டுகள் தீர்ந்து போயின. சிலருடைய றிவோல்வர்களில் குண்டுகளில்லை. ஆனால், எதிரிகளிடமிருந்தும் குண்டு வரக் காணோம். ஆங்கிலத் துருப்புகள் பீனிக்ஸ் தோட்டத்தைப் பாதுகாக்க விரைந்தோடி விட்டன.

அவ்வளவு நேரம் நடந்த போராட்ட முடிவு-களத்தில் உடைந்து சிதறிப்போன இரண்டாவது மோட்டார் வண்டியும் அதை ஓட்டுபவனான மாக் இவாய் என்றவனும், முதன் முதல் குண்டுபட்ட பொலிஸ்காரன் ஒருவனும், இறந்து போன மார்ட்டின் ஸாவேஜின் உடலுமே தான்பிரீன் கூட்டத்தார் கையில் சிக்கிய பொருட்கள். டிரைவருக்கு மிகுந்த காயம் ஏற்பட்டிருந்ததால் அவனை அவர்கள் விடுதலை செய்துவிட்டார்கள்.

தான்பிரீனும் தோழர்களும் பதில் ஆளுநரைச் சுட்டுத் தீர்த்து விட்டதாக உறுதியுடன் நம்பினர். அவரைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியாத முறையில், பதில் ஆளுநர் பலருக்கு மத்தியிலே மாறுவேஷத்துடன் இருந்தார்.

இறந்தவர் யார் யாரென்றும் விலக்கப்பட்டவர்கள் விவரம் என்ன என்றும் தெரியவில்லை. போராட்டம் முடிந்தவுடனே தான்பிரீன் கூட்டத்தார் ஒரு விநாடியும் வீண் போக்காது நகருக்குள் சென்றுவிட வேண்டும் என்று கருதினர். ஏனென்றால் சில நிமிஷ நேரத்தில் அங்கு பல்லாயிரம் பட்டாளங்கள் வந்து விடும்.

எங்கும் லோர்ட்பிரெஞ்ச் சுடப்பட்ட செய்தியே காட்டுத்தீ போல் பரவிநிற்கும். எனவே அவர்கள் சைக்கிள் வண்டிகளில் ஏறிக்கொண்டு ஆஷ்டவுனை விட்டு வெகு வேகமாய் வெளியேறினர்.

ஸாவேஜ் களப்பலியாகக் களத்திலேயே விடப்பட்டான். அவன் உடல் கெல்லியின் விடுதியில் வைக்கப்பட்டது. தோழர்கள் புறப்படு முன்னால் அவனுடைய ஆன்மா சாந்தியடையும்படி பிரார்த்தித்தனர். அதுவே அந்தப் போர் வீரனுக்குத் தோழர்கள் செலுத்திய கடைசி மரியாதை.

பதில் ஆளுநரைத் தாக்கச் சென்ற பதினொரு வாலிபரில் ஒன்பது பேருக்குக் காயமில்லை; ஸாவேஜ் வீரசுவர்க்கம் புகுந்தான்: தான்பிரீன் காலில் அடிபட்டு இரத்தம் பெருகிக்கொண்டேயிருக்கவும், சைக்கிளில் சவாரி செய்துகொண்டு சென்றான்.

உயிர் தப்பிய பதின்மரில் றொபின்ஸனுடைய சைக்கிள் இடையில் உடைந்து பிரயாணத்திற்கு உதவாது போயிற்று. எனவே அவன் ஸின்டிரீஸியின் சைக்களில் அவனுக்குப் பின்னால் ஏறி நின்று கொண்டு சென்றான்.

ஒரு சைக்கிள் இருவரைத் தாங்கி வேகமாகச் செல்லமுடியாது. வேகமாய்ச் செல்லாவிடின் பகைவர்கள் எட்டிப் பிடித்து விடுவார்கள். அந்நிலையில் எதிரே ஒருவன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

றொபின்ஸன் கீழே குதித்து, றிவோல்வரை அவனுக்கு நேராகப் பிடித்து, அவனைக் கீழே இறங்கும்படி உத்தரவிட்டான். வந்தவன் மறு பேச்சில்லாமல் சைக்கிளைக் கொடுத்துவிட்டான்.

றொபின்ஸன்தான் திருடனில்லை என்றும், தனக்கு அந்த சைக்கிள் தேவை என்றும், அன்று மாலையில் அதி 'கிறெஷாம் ஹோட்ட'லில் வைத்து விடுவதாயும், அங்கு வந்து அவன் எடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறினான். பிறர் சைக்கிளைப் பிடுங்கினாலும் அதிலும் ஒரு மரியாதை இருந்தது!

திருட்டுச் சொத்து வேண்டாமென்று றொபின்ஸன் சொன்ன வாக்குப்படியே பின்னால் செய்து விட்டான். சொந்தக்காரன் அந்த ஹோட்டலுக்குச் சென்று சைக்கிளை எடுத்துக்கொண்டானோ, இல்லையோ என்பது தெரியாது.

பிறகு பத்துப் பேர்களும் சௌக்கியமாக டப்ளின் நகருக்குச் சென்று மறைந்து விட்டனர்.

இவர்கள் யார்? எதற்காக இம்மாதிரிக் காரியங்களைப் புரிந்தார்கள்? இவர்கள் ஐரிஷ்



புரட்சிக் கூட்டத்தார். அயர்லாந்தைக் கொடுமையாக ஆண்டுவந்த ஆங்கில அரசாங்கத்தை அழித்து, அங்கு குடியரசை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் புரட்சி செய்து வந்த கூட்டத்தாரில் இவர்கள் முக்கியமானவர்கள். தான்பிரீன் இவர்களுடைய தலைவன். இவர்கள் அனைவரும் யுத்தப் பயிற்சி பெற்று, புரட்சிப் பட்டாளத்தில் பதவிகள் வகித்து வந்தார்கள்.

லோர்ட் பிரெஞ்ச் அரசாங்கத் தலை

**கடந்த வாரம்**

ஐரிஷ் தொண்டர்படை போராளிகள் தான் பிரீன் தலைமையில் பதில் ஆளுநரைக் கொல்வதற்கு தாக்குதல் நடத்துகிறார்கள். அயாலாந்தை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் அரசுக்கு எதிர்ப்புக் காட்டவே இந்த நடவடிக்கை.

**இனி...**

மைப்பதவி வகித்து வந்ததால், அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டால் ஆங்கில அரசாங்கத்தை அயர்லாந்து மக்கள் விரும்பவில்லை என்பது உலகமெங்கும் விளக்கமாய்த் தெரிந்துவிடும் என்பதும், அதிலிருந்து உள்நாட்டில் புரட்சி கொழுந்து விட்டெரியும் என்பதுமே புரட்சிக்காரர்களின் கருத்து.

புரட்சிக்காரர்கள் பதில் ஆளுநரைச் சுட்டுக் கொன்றதாக எண்ணிக் கொண்டார்களே தவிர, பதில் ஆளுநர் இறக்கவில்லை. காயப்படவுமில்லை. ஏனெனில், அவர் வழக்கத்திற்கு விரோதமாக அன்று முதல் காரிலேயே சென்று விட்டார்.

ஐரோப்பிய யுத்தம் 1914 ஆம் ஆண்டு ஆரம்பமாயிற்று. மனித சமூகத்தின் வளர்ச்சியில்–நாகரிகத்தில்–இந்த யுத்தம் மிகமுக்கியமான இடம் பெற்றிருக்கிறது.

இதுவரை நாம் அரசியல் புரட்சிகளையும், சமூகப் புரட்சிகளையும், தாழ்த்தப்பட்டோர் புரட்சிகளையும், பொதுவாகத் தேசப் புரட்சிகளையும் பற்றியே கேட்டிருக்கிறோம். ஐரோப்பிய யுத்தம் உலகப் புரட்சிக்கு வித்தாக அமைந்ததே விந்தையாகும்.

அதை ஆரம்பித்தவர்களும், நடாத்தியவர்களும் அவ்வாறு ஏற்பட வேண்டுமென்று கனவிலும் கருதவில்லை. சிறிய தேசத்தார்களுடைய சுதந்திரங்களைப் பாதுகாக்கவும், உடன்படிக்கைகளின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கவும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் அவர்கள் போராடுவதாகக்கூறி வந்ததில் எவ்வளவு உண்மை உண்டென்பதை உலகம் தெரிந்து கொண்டது.

யுத்தத்தில் பலநாடுகள் தங்களுடைய உடன்படிக்கைகளைக் காற்றில் பறக்க விட்டதை நாம் கண்ணால் கண்டோம். சிறு நாட்டார்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தொடுக்கப்பட்ட அறப்போரில் பெரிய நாட்டார்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது.

யுத்தத்தில் சம்பந்தப்பட்ட வல்லரசுகள், தாங்கள் முன்னதாக அடிமைப்படுத்தி வைத்திருந்த நாடுகளுக்குப் பிறப்புரிமையாகிய சுதந்திரத்தைக் கொடுக்க மறுத்துத் தங்களுடைய பிடியைத் தளர்த்துவதற்குப் பதிலாக உறுதிப்படுத்தின.

## தமிழில் ப.ராமஸ்வாமி

புதிய நாடுகளைப் பிடிப்பதில் தங்களுக்குள்ள ஆசையையும் வெறியையும் அவைகள் மறைக்கவும் இல்லை. அறத்தை நிலைநாட்டவும் மானிட சமுதாயத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றவும் யுத்தம் தோன்றியதாகக் கூறினார்கள்.

யுத்தத்தில் கலந்து கொண்ட அமெரிக்கா (ஐக்கிய மாகாணம்), பிலிப்பைன்ஸ் தீவுகளின் சுதந்திரத்தைப் பறித்து அவற்றை அடிமைப்படுத்திக் கொண்டிருந்தது. ஜப்பான், கொரியா தேசத்தின்மேல் ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஜெர்மனி, ஆபிரிக்கா முதலிய நாடுகளில் தன் கைவசமுள்ள பிராந்தியங்களை விடுவிக்கப் பிரியப்படவில்லை.

ஜார் சக்கரவர்த்தியின் ரஷ்யா மண் வெறியே உருவாக விளங்கியது. இந்தியா, எகிப்து, அயர்லாந்து நாடுகளை இங்கிலாந்து அடிமைப்படுத்தி வைத்திருந்தது. இத்தனை வல்லரசுகளும், சந்திரனைப்போல் தங்கள், குறை தெரியாமல், பிறர் குறைகளைக் களையும் நோக்கத்துடன், போராடின. இடைவிடாது நான்கு ஆண்டுகள் போராடி உயிரையும் பொருளையும் ஆற்று நீரைப்போல் அள்ளிக் குடித்தன.

ஐரோப்பிய யுத்தத்தில் 97, 43, 914 பேர் மடிந்தனர். 2, 09, 27, 456 மக்கள் காலிழந்தும், கையிழந்தும், கண்ணிழந்தும் அங்கங்களையிழந்தனர். முப்பது இலட்சம் பேர் போன இடமே தெரியவில்லை. மொத்தம் ஏழாயிரம் கோடி பவுண் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு உதிரத்தையும் பொன்னையும் பலியாக விழுங்கிய யுத்தத்தின் முடிவு என்ன?

பிரிட்டிஷ் பிரதம மந்திரியான லொயிட் ஜோர்ஜ் உலகத்தில் யுத்தத்தைத் தொலைப்பதற்கே இந்த யுத்தம் தொடுக்கப்பட்டதாக ஒருமுறை, இருமுறையல்ல 76 முறை உலகறியக் கூறினார்.

பிறநாடுகளை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் வல்லரசுகள் உண்மையில் உலக சமாதானத்திற்காக உழைக்க முடியுமா? உழைத்தாலும் அது பலிக்குமா?

யுத்தத்திற்கு இந்தியா பதினான்கு இலட்சம் மனிதர்களையும் இருபதினாயிரம் பவுணையும் கொடுத்து உதவியது. அயர்லாந்து 1,34,000 வீரர்களை யுத்தத்திற்குக் கொடுத்தது. ஆனால் யுத்த முடிவில் இந்தியாவும் அயர்லாந்தும் என்ன நிலைமையில் இருந்தன? இந்தியா யுத்தத்திற்கு பின்புதான் அதன் பாடத்தைக் கற்றுக் கொண்டது. அயர்லாந்து யுத்த ஆரம்பத்திலேயே உண்மையைத் தெரிந்து கொண்டது. முதல் ஆண்டிலேயே அது தனது சுதந்திரப்போராட்டத்தைத் தீவிரமாய் நடத்த ஆரம்பித்து விட்டது.

அயர்லாந்து சிறிய தீவு. உலகில் பெரிய ஏகாதிபத்தியத்தையுடைய 'கடலரசி' இங்கிலாந்தை எதிர்த்து அயர்லாந்து சுதந்திரத்தைப் பெறுவது எங்ஙனம்? இங்கிலாந்துக்கு வெளியிலிருந்து ஒரு பெரிய ஆபத்து ஏற்படும்பொழுது அந்நியர் அதைத் தாக்கும்பொழுது, அயர்லாந்து அதை எதிர்த்துப் போராடினால் ஒரு வேளை வெற்றியடையக்கூடும். ஏனெனில் இங்கிலாந்து தன் முழு வலிமையுடன் அதை எதிர்த்து நிற்க அப்பொழுது இயலாது போகும்.

இந்த நோக்கங் கொண்டே அயர்லாந்து 1914 ஆம் ஆண்டு முதல் தனது போராட்டத்தை ஆரம்பித்தது. அதன் தலைவர்கள் ஆங்கில ராஜதந்திரிகளுடைய பசப்பு வார்த்தைகளை நம்பவில்லை.

ஒரு வல்லரசு துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது அதன் வாயில் இருந்து உண்மை, உரிமை, உடன்படிக்கை முதலிய இனிய சொற்கள் வெளிவந்தபோதிலும், பின்னால் துன்பம் நீங்கிய காலையில், அவை காலடியில் மிதிபட்டு இழிவடையும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவர்கள் போரை விரும்பினார்கள்; போரையும் உடனேயே வேண்டினார்கள்.

(பயணம் ...தொடரும்)

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.** **28**

# அரங்கம் அந்தரங்கம்

அனைத்தையும் கவனித்த குமாரசாமி, "நீதான் அனுபவிக்கும் மகாராணி?" என்றான் அவளிடம்.

அதற்கு அவள், "வாழ்க்கையில் என்ன இருக்கிறது? அனுபவித்தவரை மிச்சம்!" என்றாள்.

சுற்றியிருந்த வேலைக்காரர்களை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்; எல்லோரும் வேறு பக்கம் போய்விட்டார்கள்.

"உன்னிடம் பழகுவதில் இருக்கும் சந்தோஷமே அலாதி!" என்று சிரித்தபடியே சொன்னான் குமாரசாமி.

அவள் சிரித்துக்கொண்டே, "எனக்கும் கூடத்தான்!" என்றாள்.

"நேற்று இரவு அனுபவித்ததைப்போல் வேறு எந்த நாளிலும் அனுபவித்ததில்லை!" என்றான் அவன்.

"அப்படியா...!" என்றாள் அவள்.

"நாங்கள் பல ஊர்களுக்குப் போகலாம் என்று வந்தோம். ஆனால் உன்னைச் சந்தித்த பிறகு, இன்னும் ஒரு மாதமாவது இங்கு இருக்கலாம் போல் தோன்றுகிறது!" என்றான் அவன்.

"உங்கள் மனைவிகூட அழகாகத்தான் இருந்தார்கள்!" என்றாள் அவள்.

"அவளும் அழகுதான். ஆனால் உன்னோடு ஒப்பிட முடியாது!" என்றான் அவன்.

"இன்றைக்கும் மலபார் ஹில் சந்திப்பு உண்டா?" என்று கேட்டாள் அவள்.

"வேண்டாம். கீசேஞ்சுக்குப் போனால் நீதான் எனக்குக் கிடைப்பாய் என்பதற்கு என்ன நிச்சயம்? இங்கேயே நாமிருவரும் இருப்போம்!" என்றான் அவன்.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இன்னும் நாலைந்து நாட்களுக்கு மதன்லால்கூட அங்கே வரமாட்டார். என் வீட்டு அறை மாதிரி அழகான அறை ஹில்டன் ஒட்டலில் கூடக் கிடையாது. வாருங்கள் அங்கே போவோம்!" என்று அவனை அழைத்துக்கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

வானம்போல் அலங்கரிக்கப்பட்ட

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> –கண்ணதாசன்–

மேல்கூரை; அதிலே சந்திரனைப்போல் நட்சத்திரங்களைப்போல விளக்குகள் செயற்கை மேகங்கள் ஓடிக்கொண்டிருப்பது போன்ற பிரமை; பன்னிரண்டாயிரம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட கட்டிலும் மெத்தையும்; குளு குளு வசதி.

உள்ளே சென்றதும் வழக்கம்போல மது பாட்டிலை எடுத்துக்கொண்டு வந்து அவன் அருகிலே அமர்ந்தாள் ராஜி.

ஏதோ டெலிஃபோன் வந்தது. ஆங்கிலத்தில் பேசினாள். "எப்போது பம்பாய்க்கு வருகிறீர்கள்?" என்று கேட்டாள். சிரித்தாள். 'ஓ.கே!' என்று சொல்லிவிட்டு வைத்து விட்டாள்.

"யாரது?" என்று கேட்டான் குமாரசாமி.

"வெளிநாட்டில் இருந்து ஒரு டிரங்கால். உங்களுக்கு இண்டஸ்டிரியலிஸ்ட் நாராயண சாமியைத் தெரியுமா? அவர் நாளைக்கு வருகிறார், சிங்கப்பூரில் இருந்து" என்றாள் அவள்.

குமாரசாமியின் கைபட்டுக் கண்ணாடித் தம்ளர் கீழே விழுந்து உடைந்தது.

***

கற்பகம் நிலை தடுமாறினாள்.

ஒரு பக்கம் சந்திரசூரியன்; மறுபக்கம் கமலநாதன்; இக்கட்டான நிலையில் நடுஹாலில் வனஜாட்சி. கமலநாதனும், சந்திரசூரியனும் இருப்பதை வனஜாட்சி பார்த்துவிட்டால்?

எங்கே தான் ஒரு விடுதியே நடத்துவதாகக் கருதி விடுவாளோ என்று கலங்கினாள் கற்பகம்.

பணம் சேர்க்கும் ஆசை எவ்வளவு அடுக்கடுக்கான அவமானங்களில் மாட்டி வைக்கிறது.

வனஜாட்சியை மெதுவாக அனுப்புவதற்குக் கற்பகம் திட்டமிட்டாள். முதலில் அவளைக் கீழே அழைத்துக் கொண்டு போய் டிரைவரை எழுப்பி அனுப்பிவிடலாம் என்று யோசித்த பொழுது பனியனும் வேட்டியுமாக அந்த ஹாலுக்கே வந்து விட்டார் கமலநாதன்.

கமலநாதனைப் பார்த்தவுடனே அடுத்த அறையில் இருந்த சந்திரசூரியன் கதவைச் சாத்திக் கொண்டார்.

வனஜாட்சியைப் பார்த்த கமலநாதன், "ஹலோ?" என்றபடி கையை நீட்டினார்.

பாவம் வனஜாட்சி!



கவியரசு கண்ணதாசன்

ஒரு தவறில் இருந்து கணவனை விடுவிக்கப்போய் மறு தவறில் வந்து மாட்டிக் கொண்ட நிலை இப்போது தான் அவளுக்குப் புரியத் தொடங்கிற்று.

அவள் கையைக் கொடுக்காமல், 'வணக்கம்' என்றாள்.

மாளிகை பெரிதாகப் பெரிதாக மர்மங்களும் அதிகமாகத்தான் இருக்கும் போலிருக்கிறது!

கமலநாதனுக்கு இருந்த போதையில், 'வனஜாட்சியும் ஏதோ ஒரு இடத்தில் சுற்றிவிட்டுத்தான் வந்திருக்கிறாள்' என்று எண்ணத் தலைப்பட்டார்.

'ரங்கநாயகியும், கற்பகமும் ஒன்றுதான்' என்று எண்ணினாள் வனஜாட்சி.

குழப்பத்தில் நின்றாள் கற்பகம்.

சூழ்நிலையைப் புரிந்துகொண்ட வனஜாட்சி, "என்னைக் கொண்டு போய் வீட்டில் விடுங்கள்" என்று கெஞ்சினாள்.

"நான் கொண்டுபோய் விடுகிறேன்" என்றார் கமலநாதன்.

"வேண்டாம்; போலீஸ் வண்டியில் வேண்டாம்!" என்றாள் வனஜாட்சி.

"அதற்காக ஒன்றும் பயப்படாதே!" என்று அவள் கன்னத்தில் தட்டினார் கமலநாதன்.

வந்ததே கோபம் வனஜாட்சிக்கு!

"சீச்சீ!" என்றபடி எழுந்து கதவைத் திறந்துக்கொண்டு 'மடமட' வென்று நடந்து போய்விட்டாள்.

தவறுகளிலேயே வளர்ந்த ஒரு சமுதாயத்தில் ஒழுங்காக வாழ விரும்பும் ஒரு குலமகள், இத்தகைய அவதிகளையும், அவமானங்களையும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

வனஜாட்சி போன பிற்பாடு கற்பகத்தைத் தன் அறைக்கு அழைத்தார் கமலநாதன்.

"நேரமாகி விட்டது. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்!" என்று கெஞ்சினாள் கற்பகம்.

சுதியின் உச்சக் கட்டத்தில் இருந்த கமலநாதனுக்குக் கோபம் வந்தது. பரபர வென்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அறைக்குள்ளே நுழைந்தார்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அதிரடி

சித்திரை மாத வெய்யில் அந்த முற்பகலிலேயே கொளுத்தத் தொடங்கியிருந்தது. வெளியே ஏதோ அவசர அலுவலாகச் சென்றிருந்த வரதர் அம்மான் மனைவியைக் கூப்பிட்டபடியே உள்ளே வந்து "கண்மணி நல்ல 'மயிலிட்டிச் சுறா' இண்டைக்கு கிடைச்சிருக்கப்பா. இனி உன்ரை கைவண்ணத்தைக் காட்டி என்ரை வயித்தைச் சந்தோசப் படுத்து," என்று சொல்லி மீன் பையை அவரிடம் கொடுத்துவிட்டு, கையில் எண்ணைப் போத்தலுடன் சென்று, அருகிலிருந்த வேப்ப மரத்தடியில் அமர்ந்து, எண்ணெயை தலைக்கு வார்க்கத் தொடங்கவும், கனகர் வெளிப்படலையைத் திறந்துகொண்டு உள்ளே வரவும் சரியாக இருந்தது.

"என்ன வரதரம்மான். இண்டைக்கு ஒய்வு நாளாக்கும்!" என்றபடியே கனகர் அருகில் சென்று அமர்ந்துகொண்டார்.

"ஓமப்பா, நேற்றுத்தான் ஒரு பகுதி வேலை முடிச்சனான். இனி இண்டைக்கு நல்ல ஒரு ஓய்வு எடுத்தாத்தான் நாளைக்கு உசாராக மற்ற வேலையைத் தொடங்கலாம்."

"அது சரி அம்மான், பிள்ளையளின்ரை கடிதங்கள் வருகுதோ?"



"ஓ! நாங்கள் இங்கு சுகம். நீங்கள் அங்கு எப்படி? என்று ஒழுங்காக எழுதுகினம்."

இப்படியே அவர்களின் சம்பாஷணை அந்த வேப்பமரக் காற்றோடு கலந்து கொண்டிருந்தது.

தன் சமையல் வேலையை முடித்துக் கொண்ட கண்மணி அக்காவும் வெற்றிலைத் தட்டோடு வந்து கலந்துகொள்ள மிகச் சுவாரசியமாக நேரம் போவது தெரியாமல் கதையில் மூழ்கிப்போயிருந்தார்கள். பசி வயிற்றைக் கிள்ளியபோதுதான் அவர்களது உரையாடல் முற்றுப் பெற்றது.

"தம்பி, கனகு! நீயும் இண்டைக்கு எங்களோடையிருந்து சாப்பிட்டிட்டுத்தான் போக வேணும்!" அவசர வேண்டுகோள் ஒன்றைக் கனகரிடம் விட்டார் வரதரம்மான்.

"அட்டமத்துச் சனியன் தொட்டநிலையிலிருந்து சனிக்கிழமையள்ளை முழுச்சைவம் அண்ணை. ஒவ்வொரு சனியும் விரதமிருந்து எள்ளெண்ணை எரிக்கிறனான். தயவு செய்து குறைவிளங்காதேங்கோ நானென்ன உங்களடை வீட்டிலை சாப்பிடாதவனே? இன்னொரு நாள் ஆறுதலாக வந்து சாப்பிட்டிட்டுப் போறன்!" என்று நாசூக்காக மறுத்துவிட்டு எழுந்தார் கனகர்.

"மறிக்க, மறிக்க கேட்கிறாயில்லை. சரி போட்டுவா. ஆறுதலாய்ப் பிறகு சந்திப்பம்," என்றபடியே கிணற்றடியை நோக்கிப் போனார் வரதரம்மான்.

அவருக்குத் தலைக்குப் பிரட்ட சீயக்காய் எடுக்கப்போன கண்மணி போட்ட சத்தத்தில் பதறித் துடித்து ஓடிவந்தார் வரதரம்மான்.

"என்னப்பா, என்ன நடந்தது?" கேட்டார் அம்மான்.

"பொரிஞ்சு போன நாய்வந்து பொரிச்சு வைச்ச மீனெல்லாத்தையும் தின்டிட்டுப் போட்டுதப்பா. இப்ப நான் என்ன செய்ய?" தலையில் கைவைத்துக் கூக்குரலிட்டார் கண்மணியக்கா.

சாப்பாட்டுக்கு மீன் பொரியல் இல்லை என்றவுடன் வரதரம்மானின் உடல்வெப்பம் 100 பாகைக்கு ஏறியது. அன்றிரவு எப்படியும் அந்த நாய்க்கு ஒரு முடிவு கட்டவேண்டுமென்று முடிவெடுத்துவிட்டார் அம்மான்.

மீன் பொரியல் இல்லாத சாப்பாடும் வேப்பங்காயாய் கசந்தது அம்மானுக்கு. பக்கத்து வேலியில் நல்லொரு பூவரசந்தடி வெட்டி பகலிலேயே ஆயத்தமாக குசினிச் சுவரோடு சாய்த்து வைத்து விட்டார்.

அவருக்கிருந்த கோபத்தில் பகல் பொழுது மிகவும் நீண்டிருப்பதுபோல் தோன்றியது. குசினியையே சுற்றிச் சுற்றி வந்து தாக்குதல் நடத்த பொருத்தமான இடமொன்றையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார். வானொலியில் பிபிசி. கேட்டு முடிந்த கையோடு வெளியில் வந்த அம்மான் தான் தெரிவுசெய்த இடத்திற்குச் சென்று பதுங்கி நிலையெடுத்து இருந்துகொண்டார்.

அன்று இலேசான மழைக்கோலம் இருந்ததால் நிலவு வருவதும் மறைவதுமாக இருந்தது. வயது அறுபத்தைந்தைத் தாண்டியிருந்ததால் கண்பார்வையும் கொஞ்சம் மங்கியிருந்தது. அப்படியிருந்தும் அந்த இலேசான நிலவு வெளிச்சத்தில் ஒரு உருவம் பதுங்கிப்பதுங்கி வருவதை அவதானித்து விட்டார். அவரையறியாமலே கோபத்தில் உடல் சூடேறியது. தடியை எடுத்து ஆயத்தமாக வைத்துக்கொண்டார். எதையோ உணர்ந்து கொண்டது போல் வந்த உருவம் திரும்பிச் சென்றுவிட்டது.

சிறிது நேரத்தின்பின் மீண்டும் ஒருதரம் இவ்வாறு நிகழ்ந்தது. இப்படியே நாலைந்து தடவைகள் அவரை ஏமாற்றிவிட்டது அந்த உருவம். ஏமாற்றம், உடல் அசதி எல்லாமாகச் சேர்ந்து "வா இண்டைக்கு ஒரு அடியிலையே பரலோகம் அனுப்பி வைக்கிறன்!" என்று கறுவிக்கொண்டிருந்தார் அம்மான்.

அதோ மீண்டும் அவ்வுருவம். குசினிக் கதவும் இலேசாகத் திறந்திருந்தது. பதுங்கிப் பதுங்கி அந்த உருவம் மெதுவாக வெளியே வரவும், அம்மானின் தடி குறி பிசகாது இறங்கவும் சரியாக இருந்தது.

"ஐயோ! என்ரை அம்மா..." கண்மணியக்காவின் குரல் கேட்டு, நடந்ததை உணர்ந்தவுடன் மயக்கம் வராத குறை அம்மானுக்கு. மழைவரப்போவதைக் கண்டு வெளியில் காயவிட்டிருந்த விறகை எடுத்து வைக்க வெளியில் வந்த கண்மணியக்காமீது தவறுதலாக அதிரடித் தாக்குதல் நிகழ்த்தப்பட, இம்முறையும் பொரியலைச் சுவைத்த நாய் தப்பிவிட்டது.

## ரஞ்சனி சோதி

# காதலையும் கற்று மற!

"என்னுடைய நண்பர்களை யார் தரக்குறைவாய் பேசினாலும் எனக்குப் பிடிக்காது." என்றுதான் ஆரம்பித்தாள் யோகா. அவள் 10ம் ஆண்டில் படித்துக்கொண்டு இருந்தாள். அப்போது அவளோடு கல்லூரியில் படிக்கும் மாணவிகள் சிலரும், ரியூசன் வகுப்புக்கு வரும் மாணவர்கள் சிலரும் நண்பர்களாக இருந்தார்கள்.

அப்போதெல்லாம் யார் என்ன சொன்னாலும் அதை அலட்சியப்படுத்தி விடுவாள். அவளுடைய அண்ணன் சொல்லும் புத்திமதிகள்கூட அதிகப் பிரசங்கித்தனமாய் தோன்றும் அவளுக்கு. அந்த நண்பர்கள் மத்தியில் இளங்கோ மட்டும் அவளுக்கு சற்று வித்தியாசமாய்த் தெரிந்தான். அப்படியே அவனை இரசிக்கவும், நேசிக்கவும் தொடங்கி இருந்தாள்.

தொலைபேசியில் அவனோடு மணிக்கணக்காய்ப் பேசுவாள். "யாரோடு பேசுகிறாய்?" என்று அம்மா கேட்டபோது "பிரியாவோடு" என்று பொய் சொன்னாள். அம்மா-அப்பாவை ஏமாற்ற தொடங்கியபோது அவள் முற்று முழுதாக காதல் கடலில் மூழ்கிக் கிடந்தாள்.

அப்போதெல்லாம் அவளுக்குத் தேவைப்பட்டது-ஒரு காதல், காதலன் மட்டும்தான். மற்ற உறவுகளைப் பற்றி எல்லாம் அவள் கவலைப்பட்டதே கிடையாது. மிகவும் குறைந்த வயதில் தொற்றிக்கொண்ட காதல் என்பதாலும், நீண்ட ஒரு கால இடைவெளிக்கு ஈடுகொடுக்க வேண்டி இருந்ததாலும்; மெதுவாக, ஆமை வேகத்தில் தான் ஊர்ந்துகொண்டு வந்தது. ஆரம்ப காலத்தில் இருந்த வேகம், ஈடுபாடு இப்போது அவ்வளவாக இல்லை. இந்த நிலையில் முக்கியமான தொரு முடிவை எடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள்.

அந்த இனிய மாலையிலே இருவர் முகங்களிலும் ஏதோ ஒருவித அமைதி. பச்சைப்புல் தரையில் எதிர் எதிரே அமர்ந்து இருந்தார்கள். மாமரத்தில் இருந்து ஒரு ஒற்றைக்குயில் இடைவிடாது கூவிக்கொண்டு இருந்தது. நீண்ட நேர சிந்தனையை குலைத்துக்கொண்டு இளங்கோ பேச்சை ஆரம்பித்தான்:

"யோகா! எங்கடை வீட்டிலையும் பெரிய எதிர்ப்பு. 'நீ விரும்புகிறவளோடை போறதென்றால் இப்பவே போய்விடு. எங்கடை கண்ணிலையும் முழிக்காதை.' என்று அப்பா சொல்லிவிட்டார். என்ன செய்யிறதென்றே தெரியவில்லை." அவளின் முகம் வாடி இருந்தது.

"இளங்கோ எங்கடை தாய் தகப்பன்ரை உறவை எல்லாம் முறித்துக்கொண்டு ஒரு வாழ்க்கை வாழத்தான் வேணுமா?" என்று கேட்டபடி அவனைப் பார்த்தாள் அந்த பார்வையில் ஏக்கம் இருந்தது.

"யோகா நீர் சம்மதித்தால் நான் வீட்டை விட்டு வெளியேறவும் தயார். அதனாலை நாங்கள் தனியான ஒரு



வாழ்க்கையை ஆரம்பித்தால் என்ன?" என்று கேட்டபோது இடை மறித்தாள்.

"வேண்டாம் இளங்கோ. எங்கடை சந்தோசத்துக்காக அவர்களின்ரை மனதை நோகடிக்கக் கூடாது. பெற்றோர் மனம் நொந்தால் பிள்ளையள் நல்லாய் வர ஏலாது."

"அப்போ இதற்கு என்னதான் முடிவு?"

"நாங்கள் பிரிய வேண்டியதுதான். நீங்கள் உங்களின்ரை பெற்றோர் விரும்புகிற மாதிரி ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொள்ளுங்கள்!"

"யோகா...!" கத்தினான்.

"நீர் இல்லாமல் ஒரு வாழ்க்கையை என்னாலையும் நினைச்சுக்கூட பார்க்க முடியாமல்தான் இருக்கு? ஆனால் என்ன செய்யிறது? எல்லாம் விதிப்படிதான் நடக்கும். கால ஓட்டம் கவலையையும் மறக்க செய்யும்!" என்றாள் யோகா.

"யோகா இதுதான் உன் இறுதி முடிவா?" கவலையோடு கேட்டான்.

"ம்ம்ம்." தலையைக் குனிந்து கொண்டாள்.

அந்த நிமிடத்தில் இருந்து அவர்களுடைய உறவு பிரியாவிடை பெற்றுக் கொண்டது.

♠♡

"டேய் இளங்கோ என்னாலை நம்பவே முடியேல்லை. இந்தக் காதல் விவகாரத்தை நீ இன்னும் உங்கடை வீட்டிலை சொல்லவே இல்லை என்றுதானே சொன்னாய்? பிறகு எப்பிடி வீட்டிலை எதிர்ப்புக் கிளம்பினது?" என்று திவா கேட்டபோது,

"அதில்லை மச்சான் எனக்கு வீட்டுக்காரர் நல்ல சீதனத்தோடை ஒரு திருமணம் பேசி முற்றாக்கி இருக்கினம். நல்ல இடம். வசதியான ஆக்கள். பிறகேன் அதை குழப்பிக் கொள்ளுவான் என்றுதான் வீட்டிலை என்ரை காதலைப் பற்றி சொல்லவில்லை. யோகா நல்ல பிள்ளைதான். ஆனால் காதல் வேறை; திருமணம் வேறை மச்சான். எங்கடை வீட்டிலை எதிர்ப்பு என்று ஒரு கதையை விட்டன். அவளாகவே என்னை விடுவித்துக் கொண்டாள். அவளை நான் ஏமற்றினதாய் இருக்கக்கூடாது பார், அதனால்தான்." என் றான் இளங்கோ.

அங்கே தன் டயறியில் இருந்து இளங்கோவின் நினைவாக வைத்து இருந்த ஒரே ஒரு புகைப்படத்தை கையில் எடுத்தாள் யோகா. புகைப்படத்தை ஒரு தடவை உற்றுப் பார்த்தாள்.

இளங்கோ என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. எனக்கு இலண்டனிலை இருக்கிற மச்சான் சந்திரனை நிச்சயம் பண்ணி வைச்சு இருக்கிறதை எப்பிடி உங்களிட்டை சொல்லுறதென்று தவிச்சுக்கொண்டு இருந்தன். நீங்களாகவே என்னை விடுவிச்சுக் கொண்டிங்கள். இவ்வளவு சுலபமாக எல்லாம் முடியும் என்று நான் நினைக்கவே இல்லை! ஏனென்றால் உங்களை நான் ஏமாற்றினதாக இருக்கக்கூடாது தானே? அதனால்தான்! என்றவள் அந்தப் படத்தை சுக்கு நூறாக கிழித்து வெளியே வீசினாள்.

முற்றத்து மாமரத்தில் அந்த ஒற்றைக் குயில் இப்போதும் கூவிக்கொண்டே இருந்தது.

## இணுவில் உத்திரன்

# இயலாமை

மெல்லிய தேகம், நாற்பதைக் கடந்துவிட்ட வயது. பளிச்சிடும் வெள்ளை ஆடையில், ஒரு கம்பீரத் தோற்றம். என்றும் நெற்றியில் ஒட்டியிருக்கும் சந்தனப் பொட்டு. சைக்கிள் ஓட்டத்திலும் ஒரு சீரான வேகம். கைப்பிடியில் தொங்கும் பையில் தொழிலின் முதலீடு. அவன் தோற்றத்திலும் நிதானத்திலும் தெரிகிறது தொழிலின் சுத்தம். எட்ட வரும்போதே தெரிந்துவிடும் வருவது யாரென்று. அவன் தான் தியாகு-சிகை அலங்கரிக்கும் தியாகு.

கிராமத்தில் பிறந்து, ஏழமையில் வளர்ந்தவன். குடிமனைகளுக்குச் சென்று தந்தை முடிதிருத்துவதில் கிடைப்பதுதான் வருமானம். குடும்பமோ பெரியது. வயிற்றுக்கே வருமானம் போதாது. கொட்டில் வாழ்க்கையும் அரைகுறை வயிறும்- எட்டாத தூரத்தில் இருக்கும் வாழ்வின் வசந்தம். தந்தை கொள்ளிச்சட்டி தூக்கி எங்கேனும் எட்டுவீடு அந்தியட்டி வந்துவிட்டால், படையல் சோற்று ஆரவாரம் வயிறு நிறைந்ததில் எதிரொலிக்கும்.

திறமை இருந்தும் தொடரமுடியாமல், கல்வியை முழுமையாக விழுங்கிவிட்ட ஏழ்மை. கல்வி அறிவு சிறுவயதிலேயே பறிக்கப்பட்டு, தொழிற் கல்விஆரம்பம். தந்தை சொல் மிக்க மந்திரம் ஏது? 'எறி பென்சிலையும் பேப்பரையும்- எடு கத்தியையும் கத்திரிக்கோலையும்!' ஏழைராட்சியத்தின் ராசாவான தந்தையின் கட்டளை இது. தந்தைக்கு உதவியாய், தொழில் பழக சைக்கிளின் பின்னே அமர்ந்து போகும்போது, புத்தகமும் கையுமாய்க் கடந்துபோகும் அவன் சோட்டுப் பிள்ளைகளைக் கண்டு, கலங்கிடும் அந்த இள நெஞ்சம்.

அவனுக்குக் கனவுகள் அதிகம். வளமோடு வாழவேண்டுமென்ற தீராத ஆசை. ஒருபோதும் அவன் சாதிகுறைவென்று கலங்கியதில்லை. ஆனால் வசதியை எண்ணி ஏங்கியதுண்டு. அலுப்போடு வீடுவந்து, கொட்டில் திண்ணையில் படுக்கும்போது, விழிப்பினூடே அவனுக்கு கனவுகள் வரும்.

குடியிருக்க ஒரு அழகான கல்வீடு. கூடவே துணைக்கொரு அழகான மனைவி. கட்டில் மெத்தை என இதமாகச் சாயும்போது கிடைக்கும் சுகம்- இப்படிக் கற்பனைகளோடே தூங்கி விடுவான் தியாகு.

கால ஓட்டத்தின் வேகத்தால் தோற்றத்தில், எண்ணத்தில் ஏற்பட்ட மாற்றம் வாழ்க்கையில் வசதியில் மாறவேயில்லை. சாதிக்க நினைத்ததைச் செய்ய முடியாமல், குறுக்கிட்ட தடைகளோ பல, மணமாகாத தங்கைக்கு மாற்றாகப் போகும்நிலை. மறுக்க முடியவில்லை அவனால். பட்டணத்து எல்லையில் பெண்வீடு. படிப்பு நாகரிகமென்று அடங்காமல் நடப்பாளோ? இப்படி அவளை நினைத்துச் சிறுகலக்கம் அவனுக்கு.

மணம் முடித்துப் புகுந்தவீடு நுழைந்தபோது, கிடைத்தது மீண் டும் ஒரு கொட்டில் வாழ்க்கை! பாய் விரித்த தரையில் முதல்முதல் அவளை, தொட்டணைத்தபோது கற்பனையில் ஒன்று நிறைவேறிய திருப்தி. சீதனமாகக் கிடைத்த கொட்டில் வீட்டில் தொடங்கிய வாழ்க்கை, விரைவில் தொட்டில் போடவும் வைத்தது. புதிய இடம்; புதிய மனிதர்கள், தொழிலில் பாதிப்பு இருக்கவே செய்தது.

அந்த நாற்சந்தியில் நாலைந்து கடைகள். அதன் நடுவேதான் அவனது தொழிற்கூடம். மேசை, கதிரை கண்ணாடி, ஒரு வாங்கு இது தவிர கத்தி கத்திரிக்கோல், இவைதான் அவனது முலதனம்.

தலை இழுக்கும் இள வட்டங்களும், ஓசியில் பேப்பர் படிக்கவரும் கிழங்களும், வம்பளக்க வருவோராலும் சலூன் எப்போதுமே நிறைந்திருக்கும். ஆனால் வருமானமோ வயிற்றை மட்டுமே நிறைத்தது.

பிள்ளைகள் இரண்டும் அடுத்துப் பிறந்ததால், கனவுகளை நனவாக்க எவ்வளவோ முயன்றும் அவனால் முடியவில்லை.

அன்றொருநாள் தூறலோடு ஆரம்பித்த மழை, புயலோடு கூடிப்பெருக்கெடுத்த வேளை, கூரை காற்றோடு போய்விட,பெரு வெள்ளம் வீட்டினுள் புகுந்துகொண்டது. அருகில் இருந்தது ஐயரின் கல்வீடு. தவித்து



## ரவீந்திரன்-கனடா

நின்ற மனைவி பிள்ளைகளோடு ஐயர் வீட்டு மாடத்தில் ஒதுங்க முயல- சாதி வெறிபிடித்த அந்தப் பேய், பள்ளிக் கூடப்பக்கம் கையைக் காட்டியது. இடுப்பளவு வெள்ளத்தில் புயலோடு அல்லாடி, தத்தளிக்கும் பிள்ளைகளை தோளில் சுமந்தபடி, பள்ளியில் தஞ்சமடைந்த நேரம்- ஏற்பட்டது அவன் மனதில் அந்த வைராக்கியம் 'கட்டவேண்டும் ஒரு சின்ன கல்வீடு!'

புயல் ஓய்ந்தது, வெள்ளம் வடிந்துவிட்டாலும் அவன் மனதில் அடித்த புயல் இன்னும் ஓயவில்லை. கொட்டில் வீட்டில் இருந்தபடி, கல்வீடொன்றுக்கு அத்திவாரம் போட்டான். மேசனுக்குத் துணையாக கூலிக்கு இணையாக அவனும், கூடவே அவளும், 'பட்ட கஷ்டங்களோ பற்பல.

சாணேற முழம் சறுக்கும் நிலையிலும், தளராது உறுதியோடு உழைத்ததில், வீடு முழுமைபெறப் பத்தாண்டுகள் பறந்து போயின. வாழைமரம் தோரணம் கட்டி, உற்றார் உறவினர் ஒன்று கூடி புதுமனை புகுந்தபோது, பெருமையோடு நிறைந்த மனது கடைசி நேரம் பட்ட கடனை எண்ணிக் கலங்கவும் செய்தது.

நாகரிக மோகத்தில் புதுமையை நாடி இளவட்டங்களெல்லாம் பட்டணத்துச் சலூன்களை நாடிவிட, அவனால் ஈ ஓட்டத்தான் முடிந்தது. பட்ட கடனுக்கு வட்டிகூட அவனால் கட்டமுடியவில்லை. கடன்காரர் வீடு தேடி வந்தபோது, தியாகு நிலை குலைந்து போனான். செய்வதறியாது கலங்கி நின்ற வேளை- கார்க்கார மணியம் தகவல் ஒன்று சொன்னான்.

"மாற்றலாகி வரும் ஒரு சிறாப்பர் ஐயாவுக்கு வாடகைக்கு ஒரு வீடு இந்தப்பக்கம் வேணுமாம். ஐநூறு ரூபா கொடுப்பாராம்."

தியாகு கணக்கொன்று போட்டான். வட்டி முன்னூறு போக இருநூறு மிச்சம். சீட்டொன்று போட்டால், பட்ட கடன்தீர இரண்டு வருசம்போதும். இவன் முடிவுக்கே வந்துவிட்டான் என்றாலும், மனைவி மக்களை எண்ணிச் சிறு தயக்கம்.

விவரம் சொல்லியபோது மனைவியும் உடன்பட்டாள் கவலைதான் என்றாலும், வேறுமார்க்கம் தான் ஏது? துன்பத்திலும் மனம் கோணாமல் துணைநிற்கும் மனைவியை எண்ணி உள்ளூர அவனுக்குப் பூரிப்பு. சிறாப்பர் ஐயா , வீடுவந்து பார்த்து எல்லாம் சரி. மறுவாரமே குடிவருவதாகச் சொல்லிச் சென்றார். ஒரு கிழமையில் எல்லாமே மாறிவிட்டது. ஒரு வருடம்தானும் ஆகாத கல்வீட்டு வாழ்க்கை ஓலைக் கொட்டிலுக்கு மாறியது. வீடு துப்பரவாக்கி, கிணறிறைத்து, வேலி போட்டு , எல்லாமே ஆயத்தம். நாள் நட்சத்திரம் பார்த்து சாமான் சட்டோடு பால்காய்ச்சிக் குடிபுகுந்தார் சிறாப்பர் ஐயா.

தற்காலிகமானது என்றாலும், வீட்டை வாடகைக்கு கொடுத்தது, எதையோ பறிகொடுத்ததுபோல் அவன் குடும்பமே ஏங்கி நின்றது. கொட்டில் தரையில் அவன் மீண்டும் வந்து படுத்தபோது இரவின் தூக்கம் அவனுக்குப் பறந்தே போனது.

விடிந்தபின் கேட்ட இயந்திர ஓசையால், தூக்கங் கலைந்து எழுந்தான் தியாகு. கிணறு இறைக்கும் சத்தம்- ஆச்சரியம் அவனுக்கு. இறைத்த கிணற்றை இன்று மீண்டும் இறைப்பதேன்? வேலிக் கடப்பை கடந்து சென்றவன், சிறாப்பரிடம் கேட்டான். "ஐயா கிணற்றில் ஏதும் விழுந்து செத்திட்டுதா...?" என்று.

"இதோ பார் தியாகு! வீடு உனதென்றாலும், வாடகை என்னது. ஆனால் கிணறு உனதென்றாலும் பாவனை என்னதாகத்தான் இருக்கவேண்டும். உன் வீட்டில் குடியிருப்பதால் நீயும் நானும் சமமென்றாகிவிடாது. துலாப்பிடித்து நீங்கள் யாரும் இனி, தண்ணீர் அள்ளக்கூடாது. கிணற்றை மீண்டும் இறைப்பதும் அதற்கே." சிறாப்பரின் சுடுசொல் கேட்டு சிலையானான் தியாகு.

சொந்த வீட்டில் வாழ வழியில்லை. அது அவனது இயலாமை. சொந்தக் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடிக்கவுமா வழியில்லை?!

www.padippakam.com



# பொய்யாரம்

தருவது ரசிகன்

இலக்கிய நயம்

முத்தே! மரகதமே!
பத்தரை மாற்று சித்திரமே!
சொத்தே! சிகரமே!
முத்திரை பதியாயோ?

கன்னத்தில் முத்திரை
கழுத்தினில் முத்திரை

நெற்றியில் முத்திரை
உச்சியில் முத்திரை.

நாசியில் முத்திரை
ஆசையில் முத்திரை
உதட்டினில் முத்திரை
திகட்டாத முத்திரை!

முத்தத்தால் முத்திரை
சித்தமெல்லாம் சர்க்கரை!

நாவிரண்டு கலந்தாட
நாசியிரண்டும் இணைந்தாட,
உச்சி குளிர்ந்து
உடல் துள்ளும்
உள்ளம் கிள்ளும்!

கண்ணே என்பேன்
கள் வடிப்பாள்!

கரும்பே என்பேன்
கண் அடிப்பாள்!

கரும்பில் உண்டு
பல பாகம்!
அரும் சுவையில்
முந்தும் அடிப்பாகம்!

அடியே! உன்னில்
பல பாவம்!
உன் தேகமெங்கும்
பல ராகம்!
சுவையில் யாவும்
சமபாகம்!

பொன்னே! பூவே!
என் கண்ணே-உன்
நெஞ்சில் உண்டு
பூங் குன்றே!

மஞ்சம் வேண்டாம்
மடி கொண்டா!

பஞ்சம் வேண்டாம்
பகிர் அமுதம்!

கஞ்சம் வேண்டாம்
கள் கொண்டா!

அஞ்ச வேண்டாம்
தஞ்சம் தா!

குஞ்சம் ஆடும் கூந்தலில்
நெஞ்சம் தொங்க
விட்டவன் நான்!

உன்னை தொடர்ந்து
கால் வலிக்க,
கூந்தல் ஏறிய
நெஞ்சம் மட்டும்
கூடவந்தது உன்னுடனே!

கூந்தல் பூவில்
தேனெடுக்க,
கூவும் வண்டுகள்
பின் தொடரும்!
பூவுக்கு வலிக்காமல்
தேனெடுக்கும்!

கண்ட காட்சி
களிப்பூட்டும்!
மனதில்
கள்வெறி எழுந்தாடும்!

மதுவுக்குள்
விழுந்த வண்டாவேன்!

பாலுக்குள் விழுந்த
பழமாவேன்!

தேனுக்குள் விழுந்த
பலாச்சுளையாவேன்!

மங்கைக்குள் விழுந்த
மனமெங்கும்
கங்கைக்குள் குளித்த
சிலிர்ப்பாகும்!

ஆஹா ஆஹா
பேரின்பம்!
ஆறா விருந்தாய்
பேரின்பம்!

சூறைக் காற்றாய்
பேய்க்காமம்!
உடல்கள் ஆடி
களைத்து விடும்!

தீயில் குளித்து
சுகம் காணும்,
புதுமைக் களமே
நய காமம்!

தேகமிரண்டும்
தேய்கையிலே,
'காயமே இது
மெய்யடா,
காதலுக்காக செய்த
பையடா!'
மனம் கூவும்.

நெற்றிகள் மோதும்.
வெற்றிகள் தேடும்.
குற்றிகளாக தேகம் இரண்டும்
ஒற்றி உருண்டு சதிராடும்!

நினைத்தால்
நெஞ்சுக்குள் அனல்!
வாணிபம் செய்ய
வந்த இடத்தில்,

வாலிப நெஞ்சம்
நினைவை அலசும்!

நினைத்து மயங்கி
தேகம் காய்ந்தபோது,
செவியால் நுனைந்தது
சலங்கை ஒலி!

மாங்கனி மேனி
கண்களில் தேனீ
கட்டழகுக் கேணி
பொங்கு எழில் ராணி
தாவித் துள்ளும் ஏணி!

வந்தவள் அவனை
வாரியணைத்தாள்!

ஆணழகா! உன்
தோள் அழகா?
தூண் போன்ற
தொடை அழகா?
கண்ணுக்குள் அடங்காத
விரிந்த மார்பழகா?
என்று தாவினாள்!

வாசனைத் திரவியத்தில்
ஊறிய மேனி
மனசை கிறக்கியது!
பஞ்சுப் பொதியாக
தேகத்தில் உரசியது!

ஊரிலே ஒருத்தி
இருப்பதை மறந்தான்!

உறவிலே கலந்து
உணர்விலே கரைந்த
துணைவியை மறந்தான்!

மஞ்சத்தில் புரண்ட
மஞ்சள் மேனியை
கொஞ்சத்தான் துடித்தான்!

வித்தைகள் கற்றவள்
அவனை
குத்தகை எடுத்தாள்!

கொஞ்சிக் கொஞ்சி
கொட்டிக் கொடுத்தாள்!

கட்டிலில் மன்னன்
கட்டழகு வேந்தன்
கொட்டுகின்ற வண்டு
தேனைக்குடி மொண்டு!

தாங்கவில்லை மேனி

தூங்கவில்லை நீ!
இரவெல்லாம் யுத்தம்
நினைவெல்லாம் வெல்லம்!

ஆண்களில் நீ சூரன்
ஆய கலை அறி தீரன்
உன்னைப் போல ஒருவன்
உலகில் இல்லை நம்பு!

இரும்பு போன்ற உடலும்
கரும்புபோன்ற உளமும்
ஒருங்கே அமைந்த திரு நீ!

எந்தன் தேகம் நசிய
வேந்தன் வேகம் புரிந்தாய்!
உந்தன் செயலை நினைக்க
எந்தன் தேகம் இனிக்கும்!"

அவள் வார்த்தைகளால்
வலை பின்னினாள்!

அவன் வலைக்குள்
கலை பயின்றான்!

ஆடினாள், பாடினாள்
ஊடினாள், ஊட்டினாள்
கூடினாள், கூட்டினாள்
இன்பம் தினம் கூட்டினாள்!

வாணிப இலாபத்தை
வனிதையிடம் வழங்கினான்!

வாலிப வேகத்தில்
வணிகத்தையும் மறந்தான்!

"மஞ்சத்தில் விழுந்து
கொஞ்சம் இதழ் அருந்து!
வேறு எந்த விருந்தும்
இதற்கு நிகர் வருமோ?
வீறு கொண்டு அருந்து!"
அவள் தீயைத் தூண்டினாள்.

"ஆஹா ஆஹா
என்னவள் என்று வந்தவளும்
என்னுடன் இவள்போல்
இசைந்தது உண்டா?
கட்டிலில் இவள்போல்
புகழ்ந்ததுதான் உண்டா?

இவள்தான் நங்கை
எழில்மிகு கங்கை!

குளிக்கலாம், குடிக்கலாம்
கொய்யலாம், மொய்க்கலாம்

கூடலாம், கொடுக்கலாம்.
சுவைக்கலாம், சுகிக்கலாம்!"

அவன் தன்னையே
அவளிடம்
அடகு வைத்தான்!

நீரின்றி ஆறில்லை
நீயின்றி நானில்லை!

ஒன்றாக வாழ்வதற்கு
ஒரு வழியில்லை என்றால்,
நன்றாக மலையேறி
நாம் விழுந்து மாள்வோம்!

சாவிலும்
ஒருயிர்தான்!
வாழ்விலும்
ஒருயிர்தான்!

என்று உரைத்தாள்
இவன் உருகினான்!

வணிக இலாபம்
கற்பூரமாய் கரைந்தது.
வனிதையின் தாயார்
அவனிடம் கறந்தாள்!
காலியானது கையிருப்பு!

"போடா வெளியே
போக்கற்றவனே!

கையில் பணமில்லை
கட்டில் சுகம் கேடா?"

தாயார் உரத்துக்
கூவினாள்!
அவனோ வெட்கிக்
கூனினான்!

அவளை நோக்கினான்,
பதுமையாய் நின்றாள்!

"நீயும் வா போகலாம்"
என்று அழைத்தான்!

"எங்கே போவது?"
என்றாள் இடக்காக.

"மலைக்குப் போகலாம்
சாவிலும் இணையலாம்
என்றவள் நீ தானே
வா மலையேறலாம்!"

அவள் வேறு புறம்
முகம் திருப்பி நின்று
கூறினாள்:

"வந்தது எனக்கு காலில் வாதம்
வருவது எப்படி மலையில் ஏற?"

அவனுக்குப் புரிந்தது
புத்தி தெளிந்தது!
துணைவிக்கு துரோகம்
இழைத்ததுக்கு
இதுவும் வேண்டும்
இன்னமும் வேண்டும்!
தன்னை நொந்து தள்ளாடினான்.

கையிருப்பு உள்ளபோது
ஒன்றாய் வாழ்வோம்.
இல்லையெனில்
மலையேறி மாள்வோம்
என்றவள்:

கையிருப்பு தீர்ந்ததும்
காலில் வாதம் என்று
கழன்று கொண்ட கதையை
நாலடியார் பாடலில்
நாம் காணலாம்!

"அங்கோட்டு அகல் அல்குல் ஆயிழையாள்
-நம்மோடு
செங்கோடு பாய்ந்துமே என்றாள் மன்-
செங்கோட்டின்
மேற்காணம் இன்மையான் மேலாது
-ஒழிந்தாளே
காற்கால் நோய் காட்டிக் கலுழ்ந்து"

◉ சிங்கள மக்களை ஒன்றுபடுமாறு அம்பாறையில் 'வீரவிதான' இயக்கம் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளதே?

நி.வீரசிங்கம், காரைதீவு.

'வீரவிதான' என்பது வெறும் அம்பு தான்! இதனை எய்துவிடுபவர்கள் பிரதான கட்சிகளின் பிரதான பிரமுகர்தான்! 'கல்லோயா' பொன்விழா நடந்தது நேற்று. வன்முறையைத் தூண்டும் பிரசுரம் வருகிறது இன்று. எல்லாமே ஒன்றுடன் ஒன்று கலந்தவைதான்!

◉ மன்னார் அரச அதிபர் கைது பற்றி என்ன கூறுகிறீர்?

க.அன்ரன், மன்னார்.

தமிழ் அரச அதிகாரிகளுக்கு மறைமுகமான மிரட்டல்! தன் வீட்டுப் பகுதிக்குள் வெடி பொருள் இருப்பது அவருக்குத் தெரியுமானால், சாரதி கைது செய்யப்பட்டதும் மறைத்திருப்பாரல்லவா? இரண்டு நாட்களாக பார்த்துக் கொண்டா இருந்திருப்பார்? இது ஒன்றே போதுமே, அவர் நிரபராதி என்று நிரூபிக்க!

◉ மாணிக்கதாசன் பலியானது பற்றி மனித உரிமை அமைப்புக்கள் உட்பட யாருமே அனுதாபப்படவில்லை. நீலன் மறைவுக்கு மட்டும் அனுதாபப்பட்டனரே?

எஸ். பாக்கியன், வவுனியா.

நீலன் கோட் சூட் போட்டுக்கொண்டு, மனித உரிமை பற்றி ஓயாது பேசிக்கொண்டு, இங்கு நடந்த மனித உரிமை மீறல்களுக்கு காரணமான இராணுவத்தீர்வை, அரசியல் தீர்வு முயற்சியாக உலகுக்கு விளக்கினார். மாணிக்கதாசனோ பகிரங்கமாக ஆயுதத்துடன் நடமாடினார். உலகுக்கும் மடிப்புக் கலையாத உடையோடு நடிப்பதுதான் பிடிக்கும்!

◉ சந்தேகப் புத்திக்கு மருந்தே கிடையாதா?

எம்.ஞானலட்சுமி, கண்டி.

மருந்தில்லா நோய்களில் இதுவும் ஒன்று. ஒரு குட்டிக்கதை கேளுங்கள்:

"என் கணவருடைய பிறந்த நாளுக்கு புதுவிதமான நாட்குறிப்பு வாங்கிப் பரிசளித்தேன்!" என்று ஒரு பெண் பெருமையாகக் கூறினார். "புதுமாதிரியான நாட்குறிப்பா?" என்று சிநேகிதி புரியாமல் கேட்டார்.

"ஆமாம், அந்த நாட்குறிப்பில் எழுதிய பின்னர், சாவியால் பூட்டிவிடலாம். அப்படியான வசதி உள்ளது," என்று கூறினார்.

குழப்பமான சிநேகிதி "சரி, உனக்கு ஏதாவது வாங்கிக் கொண்டாயா?" என்று கேட்டாள்.

அந்தப் பெண்மணி அதற்கு கூறினார்: "ம்.ம்... அந்த நாட்குறிப்புக்கு இன்னொரு மேலதிக சாவி வாங்கிக்கொண்டேன்!"

◉ தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுக்குக் கூட்டம் திரள்கிறதாமே? கூடும் கூட்டம் வாக்குப் போடுமா?

ம.ஜேம்ஸ், நீர்கொழும்பு.

போடும்! சென்ற முறைபோல் இல்லாது போனாலும் படுதோல்வி கிட்டவாய்ப்பில்லை!

◉ 'மலபார் பொலிசி'ல் கவுண்டமணி மிகவும் மெலிந்து காணப்படுகிறாரே?

ஏ.குகதாஸ், திருமலை.

செங்கமாரி நோய் செய்த வேலை!

◉ சக்தியில் 'கிராமத்துப் பறவை' நாடகத்தில் முதல் வாரம் ஒளிபரப்பானதையே மறுவாரமும் ஒளிபரப்பினார்களே. ஏன் இப்படிச் சோதிக்கிறார்கள்?

எல்.கோகிலா, தெகிவளை.

சாதிக்க நினைக்கும் ஆர்வமுள்ளவர்கள் ஒலி, ஒளிபரப்புத் துறையிலும் அரிதாகி வருவதால் இப்படியான சோதிப்புக்கள்!

◉ கார்த்திக்குக்கு பொருத்தமான ஜோடி யார்?

செல்வி ம.பவானி, மட்டுநகர்.

எதற்கும் வருந்தாத எவருமே பொருத்தமான ஜோடிதானாம்!



'உனக்காக எல்லாம் உனக்காக' படத்தில் கார்த்திக்-மும்தாஜ்.

◉ சிந்தியா! இந்தியாவின் அடுத்த பிரதமராக யார் வரவேண்டும் என்று விரும்புகிறீர்?

இ.கெங்காதரன், யாழ்ப்பாணம்.

ஒரு வாக்கில் கவிழ்க்கப்பட்டவர்!

◉ சமீபத்தில் இரசித்த கவிதை எதுவோ?

எம்.மொஹமட், கல்முனை.

தமிழக இதழ் ஒன்றில் படித்தது:

**வாக்குச் சாவடி**

"வரிசையில் நிற்கிறோம்
வாழ்க்கையை
அடகுவைக்க!"

◉ பாம்பின் கால் பாம்பறியும் என்றால் என்ன சிந்தியா?

கே.சுவேதா, கம்பளை.

ஒரு அமெரிக்க நாவலாசிரியர் தனது நாட்டு நாவலாசிரியர்களைப் பற்றி எழுதிய ஒரு அபிப்பிராயம் இது:

"அமெரிக்க நாவலாசிரியர்களுக்கு சிறந்த நாவலாசிரியர்கள் என்று பெயர் எடுப்பதைவிட பிரபலமான நாவலாசிரியர் என்று பெயர் பெறுவதில் தான் ஆர்வம் அதிகம். அந்த ஆர்வத்தினால் அவர்கள் இரண்டையும் எடுப்பதில்லை!"

◉ டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவை இலங்கை தோற்கடித்ததுக்கு என்ன காரணம்?

எம்.எம்.நஸார், மருதானை.

பழக்கமான ஆடுகளம், பழக்கமான காலநிலை, வெற்றிபெறும் ஆர்வத்துடனான ஆட்டம், மறுபடி வட்மோர் ஆகிய நாலும் தான் காரணம்.

◉ நல்ல விஷயங்களைத் தவறான கோணத்தில் பயன்படுத்துவோர் குறித்து என்ன நினைக்கிறீர்?

கு.சுதாகரன், அம்பாறை.

இந்தக் கதையை நினைக்கிறேன்!

காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்த ஒரு பாதிரியார் ஒரு சிங்கத்திடம் அகப்பட, சிங்கம் அவர் மேல் பாயத் தயாராக நின்றது. உடனே பாதிரியார் முழங்காலிட்டு கடைசிப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். பிரார்த்தனை முடித்து பயத்தோடு கண்திறந்தார்.

எதிரே சிங்கமும் முழந்தாளிட்டு கண்களை மூடியபடி அமர்ந்திருந்தது.

பாதிரியார் சிங்கத்தைப் பார்த்து "நான்தான் இன்று உன்னிடம் அகப்பட்டுக் கொண்டேன். அதனால் கடவுளிடம் நான் ஏதாவது பாவம் செய்திருந்தால் மன்னிக்குமாறு கேட்டேன். நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு சிங்கம் சொன்னது:

"ஒரு பாதிரியாரை சாப்பிட வேண்டியிருக்கிறதே. அதற்காக முன்கூட்டியே நானும் பாவ மன்னிப்புக் கேட்கிறேன்"

◉ கடந்த கால ஆட்சிமீது குறை கூறுவது மட்டும்தான் தற்கால ஆட்சியாளரின் கொள்கையா?

பி.மாதவன், வவுனியா.

சுலபமான வழி அது தானே! தமாஷ் கதை!

ரசிய அதிபர் இரும்பு மனிதர் ஸ்டாலின் இறக்கும் போது, தனக்கு அடுத்ததாக அதிபராக வரவுள்ள குருசேவை அழைத்தாராம். இரண்டு கடிதங்களை அவரிடம் கொடுத்து "இதனைப் பத்திரமாக வைத்துக்கொள். நாட்டில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் ஒன்று என்று இலக்கமிடப்பட்டுள்ள முதல் கடிதத்தைப் பிரித்துப்பார். வேறு பிரச்சனைகள் வந்தால் இரண்டு என்று இலக்கமிடப்பட்டுள்ள கடிதத்தைப் பிரித்துப்பார்" என்று கூறிவிட்டு இறந்துபோனார்.

குருசேவ் அதிபராகி சில ஆண்டுகளுக்குள் பிரச்சனைகள் தலைதூக்கின. முதல் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

"எல்லாப் பழியையும் என்மேல் சொல்லு!" என்று எழுதியிருந்தது. உடனே குருசேவ் "எல்லாப் பிரச்சனைக்கும் காரணம் முன்னாள் அதிபர் ஸ்டாலின்தான்!" என்று கூறத் தொடங்கினார்.

சில வருடங்கள் கழித்து மறுபடியும் பிரச்சனை வந்த போது குருசேவ் இரண்டாவது கடிதத்தைப் பிரித்தார்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது: "இப்போது நீயும் இரண்டு கடிதங்கள் எழுத வேண்டிய நேரம் வந்துவிட்டது!"

◉ ரம்பா அலை ஓய்ந்து விட்டதா?

வி.ராஜேஸ், கொழும்பு-06.

இல்லை! தலைகாட்டிக் கொண்டுதானே இருக்கிறார். 'மின்சாரக் கண்ணா'வில் விஜய் யுடன் ஜோடியாக நடித்து, படமும் சம்பத்தில் வெளியாகியுள்ளது!



'சிங்க நடை' படத்தில் ரம்பா

## சிந்தியா பதில்கள்

◉ முத்தம் தித்திக்கும் என்பது உண்மையா?

சி.ஆஷா, புத்தளம்.

லொள்ளுக் கேள்விக்கு ஒரு ஜொள்ளுக் கதை:

புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரர் முகமத் அலி துணிச்சலான ஆசாமி. அமெரிக்கா வியட்நாம் போர் நடந்த போது, "வியட்நாம் எனக்கு எதிரியல்ல. நான் போருக்கும் போகேன், நிதியும் தரமாட்டேன்!" என்று கூறியவர்.

அப்படிப்பட்ட முகமத் அலி ஒரு போட்டியில் வெற்றிபெற்றபோது, ஒரு பெண் ஓடிவந்து அவரை முத்தமிட்டாள்.

முகமது அலி என்ன செய்தார் தெரியுமா? அதிர்ச்சியில் மயங்கிவிழுந்துவிட்டார்!

ஸ்போர்ட்ஸ்

# மறுபடி கப்டனாக அனுமதி

டொரண்டோ ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடும் பாகிஸ்தான் அணிக்கு வாஸிம் அக்ரம் கப்டனாக விளையாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



வாஸிம் அக்ரம், சலீம் மாலிக், இஜாஸ் அஹமட் ஆகிய மூவரும் இலஞ்சம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் மீது விசாரணைகளும் தொடரப்பட்டன.

இவர்கள்மீது விசாரணை செய்த சட்டத் துறையினர் தமது அறிக்கையை இன்னமும் வெளியிடவில்லை. இருப்பினும் இவர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து வாஸிம் அக்ரம் மீதான தடையை நீக்கி அவரை கப்டனாக நியமித்துள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் முஜீப்-உர்-ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

டொரண்டோ செல்லும் பாகிஸ்தான் அணிக்கு முதலில் விக்கெட் கீப்பர் மொய்ன்கான் கப்டனாக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலஞ்சம் கொடுக்க முயற்சி

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் கப்டன் ஸ்டீபன் ஃபிளேமிங்கை ஆசிய பந்தய நிறுவனம் ஒன்று அணுகி இங்கிலாந்துக்கு எதிராக இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது மோசமாக ஆடும்படி கோரிக்கை விடுத்ததாக நியஸிலாந்து கிரிக்கெட் சபை முறையிட்டுள்ளது.

பந்தய நிறுவனத்தினர் தன்னை அணுகிய விடயத்தைத் தனது அணியின் முகாமையாளரிடம் ஃபிளேமிங் தெரிவித்திருக்கிறார். பின்னர் இதுபற்றி சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்ற 4 டெஸ்ட் போட்டிகளில் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போதே, மோசமாக விளையாடினால் இலஞ்சமாக பெருந்தொகையான பணம் கப்டன் ஃபிளெமிங்கிற்குத் தரப்படும் என்று அவர்கள் கூறினார்களாம்.

இங்கிலாந்தின் ஓல்ட் ட்ராஃபோர்ட் மைதானத்தில் மூன்றாவது டெஸ்ட் தொடங்குவதற்கு முன்னர் ஃபிளெமிங் ஹோட்டலில் தங்கியிருந்தபோதே ஆசிய பந்தய நிறுவனத்தினர் இதைத் தெரிவித்தார்களாம்.

நியூஸிலாந்து கிரிக்கெட் சபை இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபைக்கு முழு விபரங்களையும் கொடுத்ததைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள்.

இங்கிலாந்து-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் போட்டித் தொடரில் நியூஸிலாந்து 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது மழை தொடர்ந்ததால் ஆட்டம் கைவிடப்பட்டு வெற்றி தோல்வி இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

# டெண்டுல்கர் பயணம்

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் சச்சின் டெண்டுல்கரும், வேகப்பந்து வீச்சாளர் அஜித் அகர்கரும் சிகிச்சைக்காக அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்துள்ளனர்.

இந்த வருட ஆரம்பத்தில் முதுகுவலியால் அவதிப்பட்ட டெண்டுல்கர் இங்கிலாந்தில் சிகிச்சை மேற்கொண்ட பிறகு உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொண்டார். பின்னர் இலங்கையில் நடைபெற்ற அய்வா கோப்பைப் போட்டியின்போது மறுபடி முதுகுவலி ஏற்பட்டது.

அவுஸ்திரேலிய சுழற்பந்து விச்சாளர் ஷேன் வோர்னின் அறிவுரையின் பேரில் தற்போது டெண்டுல்கர் அவுஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

காயமடைந்ததால் அணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கும் அஜித் அகர்கரும் சிகிச்சைக்காக டெண்டுல்கருடன் அவுஸ்திரேலியா சென்றுள்ளார். இவர்கள் இருவரது மருத்துவச் செலவுகளையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்றுக் கொள்கிறது.

# திருமறை தரும் போது நெறி

## புதிய ஆகமம் 18

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரான் தமது சீடர்களுடன் எருசலேம் நோக்கிப் புறப்பட்டார். அப்போது சீடர்களைத் தம்மிடம் அழைத்து, தமது இறப்புக்குரிய காலம் அண்மித்துவிட்டது என்பதை சற்று வெளிப்படையாகவே அறிவித்தார்:

"இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிடமகன் தலைமைக் குருக்களிடமும், மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்."

இயேசுபெருமானை அணுகிய செபதேயுவின் மனைவி, தனது மக்கள் இருவரையும், "தாங்கள் ஆட்சி புரியும்போது எனது புத்திரர்கள் இருவரையும் தங்கள்

## நம்பிக்கை வைத்தால் எதுவும் நடக்கும்!

அரியணையின் இருபுறமும் அமரச் செய்யுமாறு தயவாக வேண்டுகிறேன்" என்று கேட்டுக் கொண்டார். இயேசுபெருமான், அவ்வாறு செய்யும் அதிகாரம் தம்மிடம் இல்லை என்று கூறி, அத்தகைய நிலையினைத் தமது தந்தையாரே அருளும் தகுதியுடையவர் என்று விளக்கமளித்தார்.

செபதேயுவின் மனைவி தங்கள் தலைவரிடம் தகாத உதவிகளைக் கோரியமையினால், இயேசுபிரானின் சீடர்கள் அந்த அம்மையாரின் புதல்வர்கள் மீது சீற்றம் கொண்டனர். இதனைக் கண்ணுற்ற இயேசுபிரான், தன் சீடர்களை அழைத்து இவ்வாறு கூறினார்:

"பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள்; இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுக்குள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கும் ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்," என்று கூறினார்.

எரிக்கோவில் வைத்தே மேற்படி சம்பவம் நடைபெற்றது. அங்கிருந்து புறப்படும்போதும் இயேசுபிரானையும் சீடர்களையும் பின் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்றனர். வழியின் இருமருங்கும் ஏராளமான மக்கள் காத்துக்கொண்டிருந்தனர்.

### பார்வைபெற்ற இருவர்

பார்வையற்ற இருவர் பாதையோரத்தில் நின்றவாறு "ஆண்டவரே! தாவீதின் குமாரரே! எங்கள் கண்களைத் திறந்து பார்வை அளியுங்கள்!" என்று இரந்தனர். ஆனால் அவர்கள் இருவரையும் இயேசுபிரானிடம் நெருங்கிவர விடாமல் அங்கு திரண்டு நின்ற மக்கள் தடுத்தனர். இருப்பினும் அந்த அந்தகர்களின் வேதனை நிரம்பிய ஈனக்குரல் தேவகுமாரனாகிய இயேசுபெருமானின் செவிகளுக்கு எட்டியது. அவர் தனது நடையைத் தளர்த்தி அவர்கள் இருவரையும் தம்மிடம் அழைத்தார். அவர்களுடைய கண்களைத் தமது விரல்களால் தொட்டார். உடனே அவர்கள் கண்களைத் திறந்தனர். பார்வையும் கிடைத்தது. கீழே விழுந்து இயேசுபிரானின் தாள்தொட்டு வணங்கினார்கள். இதேபோன்று வழியில் பல நோயாளர்களை இயேசுபிரான் குணப்படுத்தினார். இவ்வாறு நோய் துன்பங்களிலிருந்து விடுபட்டவர்கள் இயேசுபிரான் பின்னாலேயே செல்லத் தொடங்கினர்.

இயேசுபெருமானும் சீடர்களும் ஏனைய மக்களும் எருசலேம் நகரை அணுகினர். அங்கு ஒலிவமலைக்கு அருகிலிருந்த பெத்பகு எனும் ஊரை அடைந்தனர். தமது சீடர்கள் இருவரை அழைத்து,

"நீங்கள் உங்களுக்கு எதிரே இருக்கும் ஊருக்குள் செல்லுங்கள். சென்ற உடனே அங்கே கட்டிவைக்கப்பட்டிருக்கிற ஒரு கழுதையையும் அதனோடு ஒரு குட்டியையும் காண்பீர்கள். அவற்றை அவிழ்த்து என்னிடம் கொண்டு வாருங்கள். யாராவது உங்களிடம் ஏதேனும் சொன்னால், 'இவை ஆண்டவருக்குத் தேவை' எனச் சொல்லுங்கள். உடனே அவர் அவற்றை அனுப்பிவிடுவார்," என்று கூறி அனுப்பிவைத்தார்.

ஏற்கனவே இறைகுமாரனின் வருகை பற்றி இறைவாக்கினர் தெரிவித்திருந்த கூற்றுப்படி

"மகள் சீயோனிடம் செல்லுங்கள்:

இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார்; அவர் எளிமையுள்ளவர்; கழுதையின் மேல் ஏறி வருகிறார்; கழுதைக்குட்டியாகிய மறியின் மேல் அமர்ந்து வருகிறார்," என்று இறைவாக்கினர் உரைத்தது நடைபெறவேண்டும். நிறைவேறவேண்டும் என்பதற்கு இவ்வாறு நிகழ்ந்தது.

சீடர்கள் இருவரும் ஊருக்குள் சென்ற போது, இயேசுபிரான் கூறியபடி அங்கு கழுதையையும் குட்டியையும் கண்டார்கள். அவற்றின் சொந்தக்காரனிடம், இயேசுபிரான் கூறியபடியே சொன்னார்கள். அவரோ மறுப்பெதுவும் சொல்லாமல் கழுதையையும் குட்டியையும் சீடர்களிடம் ஒப்படைத்தார். கழுதையையும் குட்டியையும் அழைத்துவந்த சீடர்கள், அக்கழுதையில் தங்கள் மேலாடையை விரித்து இயேசுபிரானை அதன்மீது ஏற்றி எருசலேம் நோக்கிப் பயணம் மேற்கொண்டனர். வீதியின் இருபுறத்திலும் நின்ற மக்கள் தங்கள் மேலாடைகளைக் கழற்றி வீதியில் விரித்து அவற்றின் மீது இயேசுபிரான் பயணம் செய்ய விட்டனர். இவ்வாறு ஊர்வலம் எருசலேம் நகரை அடைந்ததும் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



'இத்தகைய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் வருபவர் யார்?' என்று அங்குள்ளவர்கள் வினவினர். "இவர்தான் இறைமகன் இயேசு. கலிலேயாவிலுள்ள நாசரேத்தைச் சேர்ந்தவர்!" என்று விளக்கம் தரப்பட்டது. மக்கள் அனைவரும் "ஓ சன்னா...ஓ சன்னா..." என்ற வாழ்த்தொலி கேட்டது.

('ஓ சன்னா' என்பது எபிரேய மொழிச் சொல்லாகும். 'விடுவித்தருளும்' என்ற பொருளிலும் 'வாழ்த்துக்கள்' என்ற பொருளிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

### மாசடைந்திருந்த ஆலயம்

எருசலேமில் தாவீதின் மகன் சாலமோனால் கட்டப்பட்ட ஆலயம் அப்போது தூய்மையற்று, மாசடைந்து காணப்பட்டது. அக்கோவிலுக்குள் ஆண்டவருக்கு அடுக்காத தீய செயல்கள் பலவற்றையும் இயேசுபிரான் கண்டார். அவருடைய உள்ளம் எரிமலையாகக் குமுறியது. அங்குபல விற்பனை நிலையங்கள் காணப்பட்டன. நாணயங்களை மாற்றுவோரும் அங்குவரும் பக்தர்களை ஏமாற்றிக் காசு பறிப்போரும் காணப்பட்டனர்.

ஆண்டவருக்கே அடுக்காத அடாத செயல்களில் ஆலயத்துள் ஈடுபட்டிருந்த அனைவரையும் இயேசு பெருமான் வெளியேற்றினார். அவருடைய சீடர்களும் அவருடன் வந்திருந்த மக்களும் இயேசுபெருமானின் நோக்கத்தை அறிந்து ஆலயத்தைத் தூய்மைப் படுத்தினார்கள்.

மறைநூல் விற்பந்நர்களும் ஆலயக்குருக்கள் சிலரும் இயேசுபிரான் ஆலயத்தில் நடத்திய செயற்பாடுகளைக் கண்டு ஆத்திரமடைந்தனர். அவர்களைப் பார்த்து, இயேசுபிரான், "என் இல்லம் இறைவேண்டலின் வீடு, என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆனால் நீங்கள் இதைக் கள்ளர் குகையாக்கிவிட்டீர்கள்!" என்று கடிந்துரைத்தார்.

ஆலயத்துள்ளும் பல அங்கவீனர்களும் நோயாளிகளும் காணப்பட்டனர். அவர்களுக்கெல்லாம் இயேசுபிரான் குணமளித்தார். அங்கு சிறுவர்கள் பலர் ஓடி இயேசுபிரானை அணுகினார்கள். அவர்கள் ஆனந்தக்களிப்பில் ஆர்ப்பரித்துக் குதித்தார்கள். அவர்களைப் பார்த்ததும் ஆலயக் குருமாரின் ஆத்திரம் அளவு கடந்தது. அவர்கள் இயேசுபிரானிடம் சென்று, "ஆலயத்துள் இவர்கள் போடும் ஆட்டம் பற்றி என்ன சொல்கிறீர்?" என்று கேட்டனர்.

இயேசுபிரான் இதற்கு மறுமொழியாக, "பாலகரின் மழலையிலும் குழந்தைகளின் மொழியிலும் உம்மைப் புகழ ஏற்பாடு செய்தீர்!' என்று மறை நூலில் நீங்கள் படித்ததில்லையா?" என்று வினவினார்.

### நம்பிக்கையின் வலிமை

உறுதியான நம்பிக்கையால் எதனையும் சாதிக்கலாம் என்பதனை இயேசுபிரான் தன் சீடர்களுக்கு இவ்வாறு விளக்கினார்.

"நீங்கள் ஐயம் எதுவுமின்றி நம்பிக்கையுடன் இருந்தால் அத்தி மரத்துக்கு நான் செய்ததை நீங்களும் செய்வீர்கள்; அதுமட்டுமல்ல, இந்த மலையைப் பார்த்து, 'பெயர்ந்து கடலில் விழு' என்றாலும் அது அப்படியே நடக்கும். என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக்கொள்வீர்கள்" என்று கூறினார்.

அடுத்த நாளும் ஆலயத்துள் தன்னைச் சூழ்ந்திருந்த மக்களுக்கு இயேசு பெருமான் அருளுரைகளை வழங்கினார். ஆலயத்தின் தலைமைக் குருக்களும் வேறு சிலரும் இயேசு பிரானை அணுகி, "எந்த அதிகாரத்தில் நீர் இதனைச் செய்கிறீர்?" என்று வினவினர். இதற்கு நேரடியாகப் பதில் கூறாத இயேசுபிரான்,

"இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒரு மனிதருக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர் மூத்தவரிடம் போய், 'மகனே, நீ இன்று திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்' என்றார். அவர் மறுமொழியாக, 'நான் போக விரும்ப

## இராஜகுமாரன்

வில்லை' என்றார். ஆனால் பிறகு தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு போய் வேலை செய்தார். அவர் அடுத்த மகனிடமும் போய் அப்படியே சொன்னார். அவர் மறுமொழியாக, 'நான் போகிறேன் ஐயா!' என்றார்; ஆனால் போகவில்லை. இவ்விருவருள் எவர் தந்தையின் விருப்பப்படி செயல்பட்டவர்?" என்று கேட்டார். அவர்கள் "மூத்தவரே" என்று விடையளித்தனர். இயேசு அவர்களிடம், "வரிதண்டுவோரும் விலைமகளிரும் உங்களுக்கு முன்பாகவே இறையாட்சிக்கு உட்படுவர் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் யோவான் நீதிநெறியைக் காட்ட உங்களிடம் வந்தார். நீங்களோ அவரை நம்பவில்லை. மாறாக வரி தண்டுவோரும் விலை மகளிரும் அவரை நம்பினர். அவர்களைப் பார்த்த பின்பும் நீங்கள் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவுமில்லை; அவரை நம்பவுமில்லை.

மேலும் ஓர் உவமையைக் கேளுங்கள்: நிலக்கிழார் ஒருவர் ஒரு திராட்சைத் தோட்டம் போட்டு, சுற்றிலும் வேலி அடைத்து அதில் பிழிவுக் குழி வெட்டி ஒரு காவல் மாடமும் கட்டினார்: பின்பு தோட்டத் தொழிலாளர்களிடம் அதைக் குத்தகைக்கு விட்டுவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார். பழம் பறிக்கும் காலம் நெருங்கிவந்தபோது அவர் தமக்குச் சேரவேண்டிய பழங்களைப் பெற்று வரும்படி தம் பணியாளர்களை அத்தோட்டத் தொழிலாளர்களிடம் அனுப்பினார். தோட்டத் தொழிலாளர்களோ அவருடைய பணியாளர்களைப் பிடித்து, ஒருவரை நையப்புடைத்தார்கள்; ஒருவரைக் கொலை செய்தார்கள்; ஒருவரைக் கல்லால் எறிந்தார்கள். மீண்டும் அவர் முதலில் அனுப்பியவர்களைவிட மிகுதியான வேறு சில பணியாளர்களை அனுப்பினார். அவர்களுக்கும் அப்படியே அவர்கள் செய்தார்கள். தம் மகனை மதிப்பார்கள் என்று அவர் நினைத்துக்கொண்டு அவரை இறுதியாக அவர்களிடம் அனுப்பினார். அம்மகனைக் கண்டபோது தோட்டத் தொழிலாளர்கள், 'இவன் தான் சொத்துக்கு உரியவன்; வாருங்கள், நாம் இவனைக் கொன்று போடுவோம். அப்போது இவன் சொத்து நமக்குக் கிடைக்கும்' என்று தங்களிடையே பேசிக்கொண்டார். பின்பு அவர்கள் அவரைப் பிடித்து, திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே தள்ளிக் கொன்று போட்டார்கள். எனவே, திராட்சைத் தோட்ட உரிமையாளர் வரும்போது அத்தொழிலாளர்களை என்ன செய்வார்?"

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 15 விடை:** ☛ **பேதுரு**

**பரிசு பெறுவோர்:**

1. **எட்வின் ஜோஷுவா,** 269/9 பிரதான வீதி, டிக்கோயா.
2. **ம.லெ.தாஹீர்,** 90/1, புளக் 'ஜே'கிழக்கு, சம்மாந்துறை.
3. **வடிவேல் நளினி,** இல 3/3, பீரிஸ் பிளேஸ், தெஹிவளை.
4. **என்.டபிள்யூ.ரீப்பீல்,** விக்ரன் தோட்டம், ரொசெல்ல.
5. **த.வசந்தி,** 377, திரோபதையம்மன் கோயில் வீதி, பாண்டிருப்பு-02, கல்முனை.

**திருமறை [பு.ஆ] 18 வினா :-** இயேசு பிரான் எருசலேம் ஆலயத்தில் எதனைக் கண்டார்?

செப்டெம்பர் 25 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.18—தினமுரசு வாரமலர்,த.பெ.இல—1772, கொழும்பு.**

# ஊழல் பாடல்



தேர்தல் பிரசார மேடையில் ஜெயா பேசுகிறார். சசிகலா அமர்ந்திருக்கிறார். திடீரென்று சசிகலாவைப் பார்த்து பாட ஆரம்பிக்கிறார் ஜெயா.

உன்னில் என்னில் உள்ளது ஊழல்
ஒவ்வொரு கட்சியும் செய்வது ஊழல்
உலகம் முழுவதும் உலவும் ஊழல்

சின்ன சின்ன ஊழல் சொத்துக்குள்ளே ஊழல்
முத்து முத்து ஊழல் இதுமொத்தமாக ஊழல்

தேர்தல் மேடையிலே கவிதை பாடுகிறோம்
வாக்கையும் கேட்டு விட்டோம்
நாட்டையும் கேட்டுவிட்டோம்

ஊழல் என்னவென்று தமிழ்கொண்டு
ஒரு பாடல் நீங்கள் பாடிக்காட்டுங்கள்.

உன்னையும் என்னையும் வளர்த்தது ஊழல்
ஊரை ஏய்க்கும் வழிதான் ஊழல்
ஊரார் சொத்தை சுருட்டி எடுத்து
உரிமை கொண்டாடுவது ஊழல்.
காதின் ஓரம் நரைத்தும்கூட
காசில் ஆசை இழுப்பது ஊழல்!

(கரகோசம்)

# அடுத்து வருவது விளையாட்டுச் செய்திகள்

செய்தி ஊடகவியலாளர் தினத்தை முன்னிட்டு துப்பாக்கியால் குறிபார்த்து சுடும் போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் 'சட்டன' ஆசிரியர் குறிதவறாது சுட்டுக்கொல்லப்பட்டார்.

வவுனியா, மட்டக்களப்பு செங்கலடி போன்ற பகுதிகளில் பொதுமக்களுக்கு தர்ம அடி கொடுத்து துக்கநாள் அனுஷ்டித்தது புளொட் இயக்கம்.

இரண்டாயிரமாம் ஆண்டு சமாதான ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட உள்ளதாக ஐ.நா.சபை அறிவிப்புச் செய்துள்ளது.






"நான் ஸ்மோக் பண்றதால உங்களுக்குத் தொந்தரவு எதுவும் இல்லையே?"

காதிலை பூ கந்தசாமி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS


பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

[illegible]:

105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


→ இயந்திர மனிதர்களை (ரோபோக்கள்) உற்பத்தி செய்து அவற்றைக் கொண்டு பல பணிகளைச் செய்ய வைப்பதில் ஜப்பான் முன்னிலை வகிக்கிறது.

தலை நகரான டோக்கியோவில் ஷிபௌரா என்ற இடத்தில் அகிரா சாரோ என்ற விஞ்ஞானியால் வடிவமைக்கப்பட்ட 'அஷி' என்ற பெயருடைய இயந்திர மனிதனையே இங்கு காண்கிறீர்கள்.

உள் ஞறுப்புகள் பலவகையான எலத்திரணியல் சாதனங்களால் பொருத்தப்பட்டு, அவற்றின் இயக்கங்களை வெளியிலிருந்த வண்ணம் பார்க்கக்கூடிய பிளாஸ்டிக் கண்ணாடியால்-மனித உருப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. மனித எலும்புக் கூடுபோல இது ரோபோக் கூடு.

இந்த இயந்திர மனிதன் ஆரம்பத்தில் குனிந்து நிமிர்ந்து, அங்கங்களை அசைக்க வல்லதாக இருந்தது. பின்னர் ஓரடி, ஈரடி என்று நடக்க வைக்கப்பட்டது இம் மனிதன் இப்போது-மதனிதனைப் போல் ஓரளவு வேகமாக நடக்கவும் சில பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்துக்குக் கொண்டு செல்லவும் கூடியதாக இருக்கிறதாம். சபாஷ் மனிதனுக்கு சரியான போட்டி.




← பிரபல இசைக் கலைஞர்களால் பயன்படுத்தப்பட்ட பல்வேறு பொருட்களை ஒன்று சேர்த்து அமெரிக்க ஒஹையோ மாநிலத்திலுள்ள கிளெவ்லண்ட் நகரில் ஓர் அருங்காட்சியகத்தை அமைத்துள்ளார்கள்.

சில வருடங்களுக்கு முதல் உலகை ஆட்டிப் படைத்த 'றொக் அண்ட் றோல்' (ROCK AND ROLL) இசைக் கலைஞரான ஜோன் லெனினின் பயன்படுத்திய பல பொருட்கள் அண்மையில் இந்தக் காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. முன்னாள் கலைஞர்கள் பாவித்த இசைக்கருவிகள், நிகழ்ச்சிகளுக்கான சுவரொட்டிகள் வர்ணப்படங்கள், அவர்களால் அணியப்பட்ட ஆடைகள் ஆகியனவும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அலின் கூப்பர் என்ற பெண் பாடகர் அணிந்திருந்த சிறுத்தைப் புலித்தோல் போன்ற காலணியும் இந்த அருங்காட்சியகத்தில் காணப்படுகின்றது. இதனை செல்வந்தர் ஒருவர் ஏலத்தில் பெற்றுள்ளார். இதற்காக அவர் கொடுத்த விலை எவ்வளவு தெரியுமா? நாற்பது இலட்சம் ரூபாய்கள். பழசுக்கு மரியாதை. இக் கால பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் கையுறையும், மடோனாவின் உள்ளாடை ஒன்றும் இங்குள்ளன. அவையும் ஏலம் விடப்படக்கூடும். ■




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## பந்தயம்




→ தரையில் மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தையங்கள் நடைபெறுவதுபோல், விண்ணில் விமான ஓட்டப்போட்டிகளும் மேலை நாடுகளில் பிரசித்தம்.

இப்போட்டிகளில் வேகமாக விமானம் ஓட்டுவதில் அதிகம் சிரத்தை காட்டப்படுவதில்லை. கர்ணமடித்து, செங்குத்தாகக் கிளம்பி அதே கதியில் பூமி நோக்கிப் பாய்ந்து-சடுதியாகத் திரும்பி, சுழன்றடித்து பல தரப்பட்ட சாகசங்களைச் செய்து காட்டுவதில்தான் கவனம் எடுக்கப் படுகிறது.

ஸ்லவாக்கியாவிலுள்ள பிராட்டிஸ் லாவரி என்ற இடத்தில்தான் 1960ம் ஆண்டில் விமான சாகசப் போட்டிகளுக்கான உலகச் சாம்பியன் போட்டிகள் ஆரம்பமாயின. அன்றிலிருந்து இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேசப் போட்டிகள் ஐரோப்பிய நகரங்களில் இடம் பெறுகின்றன.

பிரிட்டனைச் சேர்ந்த நிகல் லாம்ப் என்பவர் தொடர்ந்து பல ஆண்டுகளாக உலகச் சாம்பியன் பட்டத்தை வென்று வருகிறார். 1993ம் ஆண்டு நிகல் லாம்ப் தனது மூன்று சகாக்களுடன் வானில் சாகசம் புரியும்போது எடுக்கப்பட்ட படம் இது.




↑ வேகமாக கார் ஓட்டும் சாரதிகளுக்கான பரிசுகள் வழங்கப்படுவதுபோல், காரோட்டப் போட்டிகளுக்கான கார்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இதற்கான முதல் போட்டி 1951ல், பிரிட்டனைச் சேர்ந்த சில்வர்ஸ்டோன் நகரில் இடம் பெற்றது.

இத்தகைய போட்டிகளில் அதே ஆண்டில் அதிகமான கார்களை வடிவமைத்த நிறுவனமான 'ஃபெராரி' என்ற அமைப்பு 1998ம் ஆண்டுவரை 114 போட்டிகளுக்கு உரிய வண்டிகளை வடிவமைத்துக் கொடுத்து உலக சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இந்நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு கார் 1961ம் ஆண்டில் விபத்துக்குள்ளானது. இதனைச் செலுத்திய ஜேர்மன் நாட்டவரான வொல்ஃப்காங் வொன் டிரிப்ஸ் என்பவரும் 14 பார்வையாளர்களும் மரணமானார்கள். இத்தாலியில் நடைபெற்ற கிராண் பிரிபோட்டியில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஃபெராரி நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட ஓட்டப்போட்டிக்கான ஒரு காரினையே இங்கு காண்கிறீர்கள். இக்கார் பல பந்தயங்களில் பங்குகொண்டு வெற்றிகளை குவித்த ராசியான கார். அதனால் இக்காருக்கு என்று இதன் தயாரிப்பாளர்களுக்கு விருது கொடுத்தவர்.

→ மீண்டும் கப்டன் பதவி ஏற்றபின் ஒரு சதம் போட்டதுதான் டெண்டுல்கருக்கு ஒரேயொரு சந்தோசம். மற்றப்படி அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து, இரண்டு கிண்ணங்களைக் கோட்டைவிட்டுள்ளது.

இலங்கையில் மழை சதி செய்துவிட்டது என்று கூறினார்கள். ஆனால் மேற்கிந்திய தீவு அணியிடம் சிங்கப்பூரில் தோல்வி கண்டதற்கு சதியல்ல விதிதான் காரணம். ஒரு போட்டியில் வெற்றிபெற்றால் போதும், தொடரை வெல்ல உக்கிரமாக ஆடமாட்டார்கள் என்பதுதான் இந்திய அணியின் தலை விதியாக இருக்கிறது.

இந்தத் தலைவிதியை மாற்றுவதற்கு கப்டனை மாற்றினால் மட்டும் போதாது. அணியின் ஒவ்வொரு வீரரையும் சலவை செய்ய வேண்டும். மூளைச் சலவை. டெண்டுல்கர் தன்பாட்டுக்கு ஆடிக்கொண்டிருந்தார். கப்டனாக நியமித்து இனி எல்லோரும் அவரை ராசியில்லாத ராஜா என்று திட்டுவதற்கு வழிகோலி விட்டனர். பந்துகளைப் பதம் பார்ப்பவரை இனிமேல் கடும் விமர்சனங்களும், வசைகளும் பதம் பார்க்கப் போகின்றன. ■




## 1வது பிறந்தநாள் வாழ்த்து



ஷகானா 08.07.1999

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரென்டோவில் வசிப்பவர்களுமான இராமநாதன்-அநுஷியா தம்பதியினரின் அருந்தவப் புதல்வி ஷகானா தனது 1வது பிறந்த தினத்தை கனடா, ஸ்காபரோ Bobby Banquet Halls, 08.07.1999 அன்று வெகுவிமர்சையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா,அம்மா மற்றும் அப்பம்மா,அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர்,மாமாமார்கள்,மாமிமார்கள்,சித்திமார்கள்,மச்சான், மச்சான்மார்கள் வல்வெட்டி வேவில் விநாயகர் அருள்பெற்று, பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள். தகவல்: DrY. அப்பாத்துரை,கொழும்பு-10.


'கார்த்திகன் கோல் டெலிபோன் காட்'

இலங்கைக்கு 18 நிமிடம் பேசுவதற்கு, 10 கனேடியன் டொலர்

மேலதிக விபரங்களுக்கு:
தொ.பே.இ: (416) 461-5456
தொ.நகல்.இ: (416) 461-8621




படிப்பகம்